

WWW.AKARAM.EU

இலவச தமிழ் மாத இதழ்

AKARAM

அகரம்

14. கார்த்திகை - 13. மார்கழி 2011

சுவடி: 07 | திருவள்ளுவர் ஆண்டு 2042 | கர வருடம்



B5
040

FREE CIRCULATION:

Germany, Switzerland, France, England, Denmark, Norway, Holland, Sweden, Italy, Canada

Lycamobile ஐக்கிய ராஜ்ஜியம்

	வீட்டு தொலைபேசி	கைத் தொலைபேசி
அவுஸ்ரேலியா	1p /min	16p /min
இலங்கை	7p /min	10p /min
இந்தியா	1p /min	1p /min
மலேசியா	1p /min	5p /min

இங்கிலாந்தில் இருந்து உள்நாட்டு வெளிநாட்டு அழைப்புக்களை மேற்கொள்ள மிக மலிவான கட்டணத்தில் உலகத் தரத்தில் முன்னணி வகிக்கும் ஒரே தொலைபேசி லைக்காமொபைல்



	வீட்டு தொலைபேசி	கைத் தொலைபேசி
நெதர்லாந்து	5p /min	19p /min
அமெரிக்கா	4p /min	4p /min
கனடா	4p /min	4p /min
சுவிட்சர்லாந்து	5p /min	20p /min

தற்பொழுது உங்கள் Lycamobile லை மீள்நிரப்பும்பொழுது Lycamobile லில் இருந்து Lycamobile லுக்கு இலவசமான குறுந்தகவல் சேவையும் இலவச அழைப்புக்களும் வழங்கப்படுகிறது.

- £5 ⇨ இலவச அழைப்பு 100 நிமிடம் அல்லது 100 குறுந்தகவல் (SMS)
- £10 ⇨ இலவச அழைப்பு 250 நிமிடம் அல்லது 250 குறுந்தகவல் (SMS)
- £20 ⇨ இலவச அழைப்பு 500 நிமிடம் அல்லது 500 குறுந்தகவல் (SMS)
- £30 ⇨ இலவச அழைப்பு 2000 நிமிடம் அல்லது 2000 குறுந்தகவல் (SMS)

லைக்காவின் தரம் நம்மையெல்லாம் லைக்க வைக்கும் தரம்.

மேலதிக விபரங்களுக்கு

www.lycamobile.co.uk 0207 132 0322

அனைத்து கட்டணங்களும் நிமிட கணக்கீட்டில் கணக்கிடப்படும். இலவச அழைப்புக்களும் குறுந்தகவல் சேவையும் விசேட விலைக்கழிவு நேரங்களிலும் மற்றும் மாதத்தில் இரண்டு மீள்நிரப்புதலுக்கும் மட்டுமே பொருந்தும் மீள்நிரப்பிய நாளிலிருந்து முப்பது நாட்களுக்கு மட்டுமே செல்லுபடியாகும். இலவச அழைப்புக்களும் குறுந்தகவல் சேவையும் பாவனையோ, காலாவதியோ முடிந்தால்லைக்காமொபைல் ப்ளஸின் வளமையான கட்டணமான ஒவ்வொரு அழைப்புக்கும் 7p சும் குறுந்தகவலுக்கு 9p சும் அறவிடப்படும்.

*கட்டணங்கள் மாறுதலுக்குட்பட்டவை.

Lyca mobile
Call the world for less

Lycamobile வாங்கக்கூடிய இடங்கள்:

top-up Sainsbury's TESCO POST OFFICE PayPoint payzone epay Wilkinson Currys phones 4u BARGAIN BOOZE MORRISONS Aleef Budgens Costcutter

SHELVAZUG
செல்வாசுக்

KREDIT+IMMOBILIEN+VERSICHERUNGEN

SHELVAZUG GmbH (P.T.THURAIRAJAH), BIRKENMATT 23, 6343 ROTKREUZ

TEL : 041 790 64 63 | FAX : 041 790 64 68 | NAT : 079 514 64 28

www.shelvazug.com shelvazuggmbh@bluewin.ch

ZG ZH AG LU BS BL BE SO FR CH TI GE OW

AR JU VD AL GL NE UR VS SH NW SG SZ TG



- ★ வங்கிக்கடன் (5.9% இலிருந்து)
- ★ வீட்டுக்கடன் (1.5% இலிருந்து)
- ★ வாகனக்காப்புறுதி (30% இலிருந்து)
- ★ வாகனங்கள் (வாங்க அல்லது விற்க்க)
- ★ ஆயுட் காப்புறுதி
- ★ மருத்துவக் காப்புறுதி
- ★ வீட்டுக்காப்புறுதி
- ★ நிறுவனங்களிற்கான காப்புறுதி
- ★ கட்டிய வீட்டை வாங்க அல்லது வாடகைக்குப்பெற
- ★ புதிதாக வீடு கட்ட
- ★ வீடுகளைத் திருத்திக்கொள்ள





tMedia Network

நிறுவனத்தின்



அகரம்

மாதாந்த இதழ் - *Monthly Magazine*

கார்த்திகை - மார்கழி 2011 | Nov. - December 2011
சுவடி 07 | Issue 07

தலைமை ஆசிரியர்:
திரு. தூயவன்

உதவி ஆசிரியர்:
திரு. வன்னித்தம்பி

உள்ளடக்கப் பொறுப்பாளர்:
திரு. த. இரவீந்திரன்

ஆசிரியர் குழு:
திரு. பவித்திரன் (இலங்கை)
திரு. ஆதவன் (இலங்கை)
திரு. தயாபரன் (இலங்கை)
திரு. வண்ணை தெய்வம் (பிரான்ஸ்)
திரு. எதிர்மன்னசிங்கம் (சுவிஸ்)
திரு. சண் தவராஜா (சுவிஸ்)
திரு. வி. சபேசன் (ஜேர்மனி)
திரு. அறிவழகன் (ஜேர்மனி)
செல்வி. தணிகா சுப்பிரமணியம் (ஜேர்மனி)
திருமதி. தாமரைச்செல்வி (ஜேர்மனி)
திரு. அனலை நிதிஸ் ச. குமாரன் (கனடா)

தொடர்புகளுக்கு:
Tel: 00 49 23 81 98 77 897
Fax: 00 49 23 81 97 25 556
Email: editor@akaram.eu

www.akaram.eu

No part of this publication may be reproduced, copied or transited in any form or by any means or stored in any information storage or retrieval system without the publisher's written permission.

©tMedia Network 2011.
All rights reserved.

நுழைவாயில்...

அகரம் வாசகர்களுக்கு வணக்கம்,

ஆறு முறை வந்து ஏழாவது முறையாக வரும் அகரம் உங்களின் விருப்பு வெறுப்புகளை நிறைவு செய்கிறது என்ற நம்பிக்கை எமக்கு. அரசியலில் நம்பிக்கை என்பது தற்கொலைக்குச் சமமானது. இதனை லிபியத் தலைவர் கடாபியின் கதை உறுதி செய்கிறது. அவரது நினைவே மக்கள் மனதில் எழக் கூடாது என்பதற்காக சடல அடக்கம் பற்றிய சகல விபரங்களும் மறைக்கப் பட்டிருப்பதில் இலங்கையின் வக்கிர அரசியல் தெரிகிறது.

இதன் மூலம் இலங்கை அரசின் இன வெறி அரசியலை உலகம் பின்பற்றும் கோரம் புலனாகிறது. புலிகளின் சடலங்கள் போன கதி எவருக்கும் தெரியாது. புலி உறுப்பினர் படு கேவலமான சித்திர வதைகளுக்கும் பெண் போராளிகள், அப்பாவிப் பெண்கள் மான பங்கத்துக்கும், அந்தரங்க உறுப்புகள் துண்டிப்பு என எல்லா வித அவமானத்துக்கும் சிங்களம் உட்படுத்திய காணொளிகளைக் கண்டும் உலகம் பயங்கரவாத அழிப்பு என ஊமையாய் இருக்கிறது.

மாவீரரின் துயிலும் இல்லங்கள் இடித்து மண் மேடுகள் ஆக்கப்பட்டு விட்டன. இவை எல்லாம் இனிமேல் தமிழீழம் அல்லது தமிழீழ விடுதலைப் போராட்டம் என்ற சுவடே வரலாற்றில் நிலைத்து விடக் கூடாது என்ற சிங்கள இனவெறியின், தமிழ் இன அழிப்பின் முத்திரைகள். அதற்குத் துணை போவது போன்றே எம்மவர் சிலரின் செயற்பாடுகள் இருப்பதைக் காண்கிறோம்.

மனித உரிமை பேசும் நாடுகள் தமது நாட்டு நலன் கருதி தமிழரின் தேசிய அரசியல் போராட்டத்தை பயங்கரவாதம் என்ற பொதுமையில் அங்கீகாரம் வழங்குகின்றன. அகதித் தஞ்சம் கோரும் அப்பாவி ஈழத்து அகதிகளையே சிங்களத்திடமே பிடித்துக் கொடுத்து தமிழ் இனத்தையே பயங்கரவாதிகள் என பார்க்கின்றன. ஆயினும் எம்மவர் சிலரின் போக்கு சிங்களத்தின் செயல்களை மிஞ்சும் அளவுக்கு உள்ளன. ஒரே இயக்கம் அதுவும் ஏகத்தலைமை எனக் கூச்சலிட்டவர்களில் யார் தலைமை என்பது தீர்க்கமுடியாத வியாதியாக உள்ளது.

வரலாற்றுக் காவியமாகப் போற்றப் பட வேண்டிய தமிழீழ விடுதலைப் புலிப் படை வீரர்களும் அவர்களோடு கடைசிவரை உடனிருந்து மரண வேள்வியில் ஆகுதியாகிய மக்களும், தமிழ் மக்களின் வணக்கத்துக்கும் நீங்கா நினைவுக்கும் உரிய இவர்களை நன்றி கெட்ட தனமாய் தமிழ் மக்கள் நாமும் மறந்து வரலாற்றில் மறைப்பதா ?

கார்த்திகைப் பூக்களாய் மலர்ந்து தமிழீழ மண்ணுக்காய் தாய் மண்ணை முத்தமிட்டுத் தமிழீழத் தாயகக் கனவோடு மடிந்த மாவீர மாமணிகள், தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் தனிச் சொத்து அல்ல. அவர்கள் அனைவரும் தமிழீழ மண்ணும் மக்களும் பெற்றெடுத்து வளர்த்த எம் இரத்தமும் சதையும் ஆன சொந்தங்கள்.

எனவே அவர்களின் நினைவு நாளை பாசத்தோடும் பண்போடும் நேசத்தோடும் கொண்டாடும் தார்மீகப் பொறுப்பு ஒவ்வொரு ஈழத் தமிழனதும் தலையாய கடமையாகும். மானம் உள்ள நல்ல மனமுடையோர் ஒன்று சேர அகரம் அழைக்கிறது.

நன்றியோடு மீண்டும் இணைவோம்,
அகரம் குழுமம்!...

இனிவரும்காலம் இயற்கையும் மோதும்!

வானம் பகைமீது தணல் சொரியும் - தமிழர்
தரைமண்ணும் அதிவெம்மைத் தணலெழுப்பும்
அரும்பும் இரும்பாகி வாள்கொண்டு மோதும் - பகையுண்பின்
கரும்பும் நஞ்சாகிப் போகும்.

நீசர் ஈழத்தில் நிலைகொண்டு வாழக்காண் - வானத்து
நிலவும் நெருப்பாக மாறும் - விடி
வெள்ளி கீழ்வானில் தோன்று வரைநாளும்
அல்லி மலர் கூட நாணும்.

வீரத்தளபதிகள் போய்வந்த வீதியெலாம் - மனப்
பாரத்தோடு தினம் ஏங்கும் - ஒரு
நேரம் வரும் வேளை உறுமி வாய்பிளந்து
கோரப் பகை தின்று மூடும்.

எந்திரக் கழுகொன்று எம்வானில் வருமிடத்து
அந்தரத்திலே முகில் மோதும் - தலைவன்
மந்திரச் சொல் கேட்ட மறுநொடியே வான்வெளியில்
பெரு மின்னல் இடியோடு தோன்றும்.

காற்றும் கடலும் காத்திருக்கும் - ஈழத்து
நாற்றும் நலிந்ததுபோல் சாய்ந்திருக்கும்
சீற்றம் கொண்டிவை சிலிர்த்தெழும்பின் - மறுநொடியே
கூற்றம் எனவாகிப் பகையழிக்கும்.

ஈழமண் விழுங்கி ஏப்பமிட வந்தபகை
வீழப் போர்செய்ய வேண்டும் - தமிழ்
மாள முன்னெங்கள் மாவீரர் வழிசென்று
வாழ வழிகாண வேண்டும்.

- தேவன் -





தமிழினப் படுகொலையில் அமெரிக்க ஐரோப்பிய நாடுகளுக்கும் பங்கு. நீதி விசாரனை கண் துடைப்பு!

" *I went to Sri Lanka as a supporter of that State's essential right to protect its sovereign territory, and left with much the same view" –Gordon Weiss, UN Spokesperson during the war that ended on 19th May 2009.preface to his book titled Cage page xxiii.)*

"நான் இலங்கைக்குச் சென்றது அந்த அரசின் முக்கியமான உரிமையான அதன் இறையாண்மையைப் பாதுகாக்கும் ஆதரவாளனாக, அதனை விட்டு நீங்கிய போதும் கூட அதே மன நிலைதான்", இப்படி ஐ.நா.வின் பேச்சாளராக கொழும்பில் பணி ஆற்றி ஓய்வு பெற்றுப் போய்விட்ட கோடன் வைஸ் கேஜ் என்ற பெயரில் எழுதி வெளியிட்ட புத்தகத்தின் முகவுரையில் கூறி உள்ளார்.

ஒரு வெளி நாட்டவர், கூலிக்கு ஐ.நா. பேச்சாளராக வேலை செய்தவர் பல இலட்சம் தமிழரின் உயிரையும் உடமையையும் நிலத்தையும் அபகரித்த செயலை தேசத்தின் இறையாண்மை பாதுக்காக்கப் போராட வந்தேன் அதை நிறைவேற்றிய மன நிறைவோடு திரும்பினேன் என எழுதுகிறார் என்றால் அதன் அர்த்தம் என்ன?

எமக்கு இத்தருணத்தில் இன்னும் ஒரு கேள்வி எழுகிறது. ஐ.நா. எப்படி எமது பிரச்சினையில் சிங்களத்தோடு சேர்ந்து எமக்கு எதிராகச் செயற்படும் நிலையை எடுத்தது? இலங்கை ஒருங்கிணைந்த தேசம் என்ற காரணம் காட்டி ஒரு இனத்தின் அரசியல் மற்றும் அடிப்படை மனித உரிமைகளை மறுக்கும் நிலை ஏன் ஏற்பட்டது? தமிழரின் தேசியம் தன்னாட்சி உரிமை இறையாண்மை பற்றித் தமிழர் தரப்பு உறுதியாகக் குரல் கொடுக்காது இருப்பதுதான் காரணமாக இருக்க முடியும். தமிழரின் தாயகம் தேசியம் சுயநிர்ணய உரிமை பற்றிப் பேசா மடந்தைகளாக தமிழின அழிவை வேடிக்கை பார்ப்பதுதான் த.தே.கூ. நடத்தும் அரசியலா?

த.தே..கூ. தனது தவறான அரசியல் செயற்பாடுகளால் ஈழத் தமிழினமும் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கமும் மிகப் பாரிய சர்வதேச சதி வலைக்குள் சிக்கி அழிய உதவி உள்ளமை இதன் மூலம் மிகத் தெளிவாகப் புலனாகிறது. இந்தச் சதியை அம்பலப்படுத்தும் ஆற்றல் நிறைந்த அரசியல் விமர்சகர் தராகி சிவராமைக் கொலை செய்ததன் மூலம் இலங்கை அரசு ஒரு புறத்தில் திட்டம் இட்டே தமிழினத்தை ஒரு இருட்டு உலகுக்குள் தள்ளி விட்டது.

தமிழர் தரப்பின் வலுவான அரசியல் குரலாக விளங்கிய திருவாளர்கள் யோசப் பரராச சிங்கம், குமார் பொன்னம்பலம், ரவிராஜ் போன்றோரை கொன்று ஒழித்துச் சிங்களம் தமிழரின் உரிமைக் குரலை உலகறியச் செய்ய விடாது தடுத்தது. இலங்கை அரசின் இத்தகைய சனநாயகப் படுகொலைகளைக் கண்டிக்கவோ உலகறியச் செய்யவோ சம்பந்தன் தலைமையிலான த.தே.கூ. முன்வராது தனது சமரச அரசியல் மூலம் சிங்களத்துக்குத் துணைபோய் உள்ளது புலனாகிறது.

இந்தக் குற்றத்துக்குத் த.தே.கூ. உடந்தை



இல்லை என்றால் தனது கட்சி உறுப்பினர்களும் பாராளுமன்றப் பிரதிநிதிகளுமான யோசப் பரராஜசிங்கம், ரவிராஜ், கனகரத்தினம் போன்றவரின் கொலைகள் பற்றி இவர்கள் எடுத்த நடவடிக்கை என்ன? படு கொலை செய்யப்பட்ட தமது கட்சி உறுப்பினருக்காக இவர்கள் இன்று வரை என்ன செய்தனர் என்பதை தமிழ் மக்களுக்குச் சொல்லக் கடமைப் பட்டுள்ளனர். இவர்கள் பயத்தாலோ நயத்தாலோ நடத்திய சமரச அரசியல் டக்லஸ், கருணா போன்றவரின் காட்டிக் கொடுப்பு அரசியலுடன் பிரித்து அறிய முடியாத ஒன்றாகத்தான் தெரிகிறது.

தமிழரின் தலைவர்களாக வரும் தகுதி சட்டத் தரணிகளுக்கே இருக்கிறது என்ற நிலைப்பாடு பொன். இராமநாதன் காலம் முதல் இன்று சுமந்திரன் காலம் வரை எழுதப்படாத சட்டமாக உள்ளது. இதனால் காலத்துக்குக் காலம் இவர்களின் சட்ட அறிவுச் செயற்பாடும் தமிழருக்கு நலம் தரும் என நாம் நினைத்தாலும் நடைமுறையில் அது அவர்களின் தொழில் சார்ந்த சொந்த நலம் சார்ந்த ஒன்றாகவே பயன்படுத்தப் பட்டு வந்துள்ளது என்பதை வரலாறு காட்டுகிறது.

1915ல் இஸ்லாமிய இந்திய தமிழருக்கு எதிரான கலவரத்தை தூண்டி கலவரம் இழைத்த குற்றத்துக்காகச் சிங்களத் தலைவர்கள் சிறையில் அடைக்கப்பட்ட பொழுது சேர் பொன். இராமநாதன் தமது சட்ட அறிவைப் பாதிக்கப் பட்ட தமிழ் பேசும் மக்களுக்காகப் பயன்படுத்தாது கொலைகாரச் சிங்களத் தலைவர்களின் விடுதலைக்காகப் பயன் படுத்தினார். ஆறுமுகநாவலரும் தமிழ் மக்களும் தமிழும் சைவமும் தளைக்க நட்டுவளர்த்த மரமான இராமநாதன் குலத்தைக் கெடுத்த கோடரிக் காம்பாக செயற்பட்டார். இவரது செயலால் இன்று வரை தமிழ் மக்கள் மீது இஸ்லாமிய மக்களிடம் ஏற்பட்ட மனக் கசப்பு அழிக்க முடியாத ஒன்றாகவே உள்ளது.

1920 களில் யாழ்ப்பாண வாலிபர் சங்கம் நடத்திய தமிழருக்கான விடுதலைப் போராட்டத்தை முழு இலங்கைக்குமான விடுதலைப் போராட்டமாக திசை திருப்பி ஒற்றை ஆட்சிக்கு வகை செய்து சிங்களத்துக்கு தமிழினத்தையே அடிமைப் படுத்த உதவியது சேர் பொன். அருணாசலத்தின் தமிழ் அபிமானம்.

1947 தேர்தலில் சட்ட சபையில் வரப்போகும் புதிய அரசமைப்புச் சட்டத்தில் சிங்களத்தோடு 50க்கு 50 உரிமை வேண்டும் என அமோக தமிழ் மக்களின் ஆதரவோடு வெற்றி பெற்று அதற்காகப் போராடிய ஜீ.ஜீ.யை எதிர்த்து சிங்களத்துக்கு ஆதரவு வழங்கியது சுந்தரலிங்கத்தின் சட்ட அறிவு. தமிழரின் சம உரிமைக் குரலோடு தெரிவான ஜீ.ஜீ.யின் சட்ட மேதாவித்தனமோ 1948ல் இந்திய வம்சாவழித் தமிழரின் குடியுரிமை பறிக்க சிங்களத்துக்குப் பயன் பட்டது.

1972ல் உருவான குடி அரசுப் பிரகடன அரசியல் அமைப்பில் தமிழர் தரப்பிலான உரிமைகள் உறுதியாக இடம்பெற வேண்டும் என இலங்கைத் தமிழ் அரசாங்க எழுதுவினைஞர் சங்கம் தமிழ் கட்சித் தலைவர்கள் அனைவரிடமும் நேரடியாகச் சென்று தமிழ்க் கட்சிகளிடையே ஓரணியிலான உரிமைச் சாசனம் உருவாக்க வேண்டும் எனக் கேட்டது. சட்ட மேதைகள் நிறைந்த தமிழரசுக் கட்சி மற்ற சிறிய கட்சிகளோடு செயற்படுவதைத் தனது கௌரவப் பிரச்சினையாக எடுத்து அத்தகைய ஒருமைப்பாடு காண மறுத்தது.

சிறிமா இரண்டு தமிழ் நியமன உறுப்பினரின் ஆதரவோடு நிறைவேற்றிய 1972 அரசமைப்புச் சட்டத்தை நீதி மன்றத்தில் எதிர்க்காமல் பின்னர் அரசோடு இணைந்து விசுவாசப் பிரமாணம் செய்து சட்டத்துக்குப் புறம்பான அரசமைப்பை சட்டரீதியாக அங்கீகாரம் பெறச் செய்த பெருமை எமது சட்ட மேதைகளுக்கு உரியதாயிற்று.

நீதி மன்ற மொழி என்று வந்த போது மட்டும் ட்றையல் அற் பார் என்ற வழக்கில் அது சட்ட மேதைகளின் தொழிலைப் பாதிக்கும் என்பதால் ஜீ.ஜீ, எம்.திருச்செல்வம், செல்வநாயகம் என எல்லோரும் இணைந்து வாதிட்டனர். ஆனால் தமிழ் மக்கள் பிரச்சினை என வந்த போது

இவர்களில் எவருமே தலை காட்டுவதும் கிடையாது. இன்றும் எண்ணற்ற அப்பாவி மக்கள் சந்தேகத்தின் பேரில் கைதாகி அரசியல் கைதிகளாகச் சிறையில் பல வருடங்களாக இருப்பவருக்கான விடுதலைக்கு இவர்களின் சட்டம் உதவ மறுக்கிறது.

இந்தியாவுக்கு அடிக்கடி ஓடிப் போகும் இவர்களுக்கு அங்கும் ஏதிலிகளாய் அவதி உறும் எமது மக்களோ அவர்களது முகாம்களோ அல்லது சிறப்பு முகாம்கள் என்ற பெயரில் நடத்தப் படும் வதை முகாம்களோ கண்ணில் படுவதில்லை. ஆனால் அவர்களின் உறவினரும் நண்பர்களும் மட்டுமே அவர்களுக்கு மனிதராகத் தெரிகின்றனர்.

மகிந்த அரசோடு பேசுவது ஒன்றே இன்று அதன் தலையாய கடனாக உள்ளது. ஈழத் தமிழருக்கு நாடும் வீடும் பேரும் ஊரும் இல்லாத நிலைக்கு வந்து விட்ட நிலையில் கோடன் வைஸ் போன்ற அறிவை ஏற்று அமைதி காக்கும் தமிழ்த் தலைவர்கள்தான் தமிழ் இனத்தின் தலைவிதியை தீர்மானிப்பவர்களாக உள்ளனர். அதாவது மகிந்தா, கோத்தபாயா, மேர்வின் சில்வா போன்றவர்கள் தந்துள்ள கிரீஸ் பூதங்களின் ஆட்சிதான் தமிழரின் தலைவிதியாக உள்ளது.

நீரோடுதான் நான் மோதுவேன் மரணத்தோடு விளையாடும் வீரர்கள்!

ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் நீர் விளையாடேல் என மக்களை நீரில் அமிழ்ந்து உயிர் இழக்காமல் இருக்க ஔவையார் சொன்னது அறிவுரை. ஆனால் கடந்த சில பத்தாண்டுகளாக சிறு பலகையை கால்களில் மாட்டி மலைபோல் எழுந்து வரும் கடல் அலைகளில் ஏறிக் குதித்து விளையாடும் விளையாட்டு இளசுகளுக்கு மிகவும் விருப்பமான ஒன்றாகி வருகிறது.

உயர எழும்பும் அலை இதமாகப் பதமாக இறங்கி வரும் பொழுது அதனோடு ஏறி இறங்கிச் சவாரி செய்வது ஒரு சுவையான அனுபவம். ஆனால் அலைகள் எங்கேயும் எப்போதும் ஒரே மாதிரியாக வந்து போவதில்லை. கடலுக்குக் கடல் இடத்துக்கு இடம் அதன் மூர்க்கம், மூச்சு முட்டுவது போல் இருக்கும்.

வீர சாகச வெறி வந்து விட்டால் பலமான எதிர்ப்புத் தேவையாகி விடுகிறது. எனவே அதற்காக மலைபோல் எழும் அலைகளைத் தேடி அலைவோரும் உண்டு. அவர்கள் பின்னால் அவர்களின் சாகசங்களைப் படமாக்கி பணம் ஆக்குவோரும் அலைவர்.



இந்திய மத்திய அரசின் அடுத்த இலக்கு, தமிழகத் தமிழரையும் முதல்வர் ஜெயலலிதாவையும் கருணாநிதிபோல் செல்லாக் காசாக ஆக்குவதுதான். பிரதமர் மன் மோகன் சிங் பேச்சுகளில் இருந்து இது புலப்படுகிறது. சிறிலங்கா அரசைத் திருப்திப் படுத்தவும் தமிழ் நாட்டில் நொருங்கிப் போன காங்கிரஸ் கட்சியைக் கட்டி எழுப்பவும் இப்படியான வேலைத் திட்டம் வடக்கில் எழுவது தவிர்க்க முடியாதது. மேலும் மத்தியில் ஜெயலலிதா பிரதமர் பதவிக்குப் போட்டியாக வராமல் செய்வதும் முக்கிய இலக்காக உள்ளது.


"அறிவு வெளியே போக, அழிவு தேடி உள்ளே வரும்," என்ற தலைப்பில் இந்துவில் ஆங்கிலத்தில் விசுவநாதன் எழுதிய கட்டுரையின் சில பகுதிகளின் தமிழ் வடிவம் அகரம் வாசகரின் கவனத்துக்காக இங்கு தரப்படுகிறது.

"செப்டெம்பர் 23. 2010ல் இந்தியப் பிரதமர் மன் மோகன் சிங் நியூயோர்க்கில் உலகத் தலைவர் என்ற பரிசைப் பெற்றார். இந்தப் பரிசைச் சர்வ தேச நம்பிக்கைக் கூட்டின் ஒரு உறுப்பாக உள்ள அப்பீல் ஒவ் கொன்சயன்ஸ் (Appeal of Conscience) என்ற நிறுவனம் வழங்கியது. இந்நிறுவனம் பரஸ்பர புரிதலையும் சகிப்புத் தன்மையையும் அமைதியையும் ஊக்குவிக்கிறது. இந்தப் பரிசை ஏற்றுத் தமது மகிழ்வைத் தெரிவிக்கும் பேச்சில் மன் மோகன் இப்படிக் குறிப்பிட்டார்.

"பழங் காலந் தொட்டே இந்தியா அடிப்படை நம்பிக்கைகளால் வழி நடத்தப் பட்டு வருகிறது. ஆன்மீக விளக்கம் பல வடிவங்கள் எடுத்தாலும் பிரபஞ்ச உண்மைக்கான பாதைகள் பலவாக இருந்தாலும் நாம் எல்லோரும் உயர் ஒழுக்கங்களாலும் இலட்சியங்களாலும் உள்ளார்ந்த மனிதத்தாலும் ஒன்று படுகிறோம் என்பதே அது."

இந்தப் பேச்சு உண்மையாகவே இந்தியாவின் 5000 ஆண்டுப் பழமை வாய்ந்த பிரபஞ்ச கலாச்சாரத்துக்கான மிக பெறுமதி மிக்க பிரச்சாரம்தான். இந்து சமயத்தின் உண்மையான பெயரே சனாதன தர்மம். அதாவது காலாகாலமாக நிலைத்து நிற்கும் பிரபஞ்ச உண்மைகளையும் தத்துவங்களையும் தன்னகத்தே கொண்டு காலத்தையும் இடத்தையும் கடந்து விளங்கும் சமயமாக அது இருக்கிறது. இந்து என்ற சொல் மேலை நாட்டவரால் சிந்து நதிப் பள்ளத் தாக்கில் வாழ்ந்த மக்களைக் குறிக்கப் புனையப் பட்டது.





இந்திய மத்திய அரசின் அடுத்த இலக்கு, தமிழக முதல்வர் ஜெயலலிதாவை கருணாநிதிபோல் ஆக்குவதே.

மன்மோகன் சிங் சொன்னவை உண்மைதான். ஆனால் அவர் மலினப் படுத்தப் பட்ட விளக்கத்தைக் கொடுத்துள்ளார். இங்கேதான் அவரது தர்க்கம் தடம் புரண்டு விட்டது. பிரதமர் தமது ஏற்புரையில் பட்டியலிட்ட எல்லாமே இந்திய மண்ணில் இன்று காண முடியாது உள்ளன.

எல்லா வடிவங்களும் எல்லா வழிகளும் என்ற சொற்கள் ஆதரவற்ற தமிழருக்கு எதிராக வேறு தேசம் ஒன்றில் இன அழிப்புச் செய்வதை உள்ளடக்காது. அவர்கள் செய்த குற்றமானது, 60 வருட கால அடக்கு முறை, பாலியல் வன்முறை, கொலைகள் ஆகியவற்றில் இருந்து விடுதலை பெறும் விருப்பத்தை வெளிப்படுத்தியது ஒன்றுதான்.

சிங்களக் குற்றவாளிகளுக்கு இன அழிப்புச் செய்வதற்கு உதவியும் ஒத்தாசையும் சர்வதேச அரங்கில் பொறுப்புக் கூறுவதில் பாதுகாப்பும் வழங்கிக் கொண்ட பின் அவரது அதி உயர் ஒழுக்கங்கள் இலட்சியங்கள் உள்ளார்ந்த மனிதப் பண்புகள் எல்லாம் அர்த்தம் அற்றுப் போய் விட்டன.

மன்மோகன் சிங் மனச்சாட்சியின் தூண்டுதலால் போலும் ஜுலை 02, 2011ல் புது டில்லியில் 5 செய்திப் பத்திரிகைகளின் ஆசிரியர்களை அழைத்து அந்தத் தமிழர்களுக்கு நியாய பூர்வமான கவலைகள் உள்ளன என்றார். இதனால் உலகெங்கும் வாழும் 80 கோடித் தமிழரிடம் இப்போதாவது இந்தியாவுக்கு புத்தி வந்ததே என ஆறுதற் பெரு மூச்சு எழுந்தது.

மேலும் "சிறி லங்காவில் ஒரு நிலை உள்ளது. புலிகள் அழிக்கப் பட்டது கொஞ்சம் நல்லது. ஆனால் தமிழர் பிரச்சினை புலிகளின் அழிவால் மறைந்து விடவில்லை. தமிழ் மக்களுக்கு நியாயமான கவலைகள் உள்ளன. அவர்கள் கடந்த பல ஆண்டுகளாக இரண்டாந்தரக் குடிமக்களாக ஆக்கப்பட்டு விட்டதாக உணருகின்றனர்" என்றார்.

"தொடர்ந்து எமது முக்கிய நோக்கம் சிறிலங்கா அரசைப் புதியதொரு அமைப்பு மாற்றங்களைச் செய்யத் தூண்டி அதன் மூலம் தமிழ் மக்கள் சமத்துவமும் சுய மரியாதையும் கொண்ட மக்களாக வாழும் உணர்வை ஏற்படுத்துவதே ஆகும். இது சுலபமானது அல்ல ஏனென்றால் உண்மையாகவே கொதி மண்டைகளும் சிங்கள இனவாதிகளும் சிறிலங்கா மக்களிடையே உள்ளனர்", என்றார்.

புலிகளின் அழிவு எப்படிக் கொஞ்சம் நல்லது என்பது எமக்குத் தெரியவில்லை. இன்று ஈழத்தில் புலிகளின் பாதுகாப்பு இல்லாததால் தமிழர்கள் இழிவுக்கும் இம்சைக்கும் உள்ளாகின்றனர். அது அவருடைய கருத்து. நான் கட்டாயம் அதனை மதிக்க வேண்டும். பின்னர் அவர் உள்மனதில் என்ன இருந்ததோ அது அதுவாகவே வெளிப்பட்டு விட்டது.

"ஆனாலும் நாம் ஒரு கடினமான சமநிலை காண வேண்டும் ஏன் என்றால் நாம் அங்கே காண்பவற்றுக்கு ஒரு உள்வீட்டுப் பரிமாணமும் உள்ளது. தமிழ் நாடு அரசும் சட்டசபையும் நடப்பவை பற்றி அதிக கவலை வெளிப்படுத்துகின்றன. எமது கவலை தமிழ் நாடு அரசை எமது பக்கத்தில் வைத்திருப்பதே."

ஒரு சில நிமிடங்களில் அவரது பிரபஞ்ச உண்மைகள் புது வடிவம் கண்டு விட்டன. இப்பொழுது அவர் அந்தக் கடினமான சம நிலையில் கயிற்றில் நடக்க விரும்புகிறார். சிறிலங்காவில் ஒரு உள்வீட்டுப் பரிமாணமும் இருப்பதை உணர்ந்து கொண்டு விட்டார். இந்தப் பரிமாணம் மே 2009 முள்ளி வாய்க்கால் இனப்படு கொலை நடத்துவதற்கு சிறிலங்கா இராணுவத்துக்குப் பயிற்சியும் இராணுவ ஆலோசகர்களை அனுப்பியும் வான்வழிக் கண் காணிப்புகளைக் கொடுத்த போதும் இருக்கவில்லை.

முள்ளி வாய்க்கால் இனப் படுகொலை முழுமையாக மும்முரமாக நடக்கும் போது கருணா நிதியைத் தம் பக்கம் அமைதியாக வைத்துக் கொண்டது போன்று அவர் ஜெயலலிதாவை தம் பக்கம் வைத்துக் கொள்ள விரும்புகிறார்.

சென்னையில் கருணாநிதியின் மிரட்டலுக்குப் பிரணாப் என்ன சொன்னார் என்பதைப் பற்றி எவரும் எதையும் ஊகிக்கலாம். முதல் அமைச்சருக்கு அவரது குடும்ப உறுப்பினரும் கட்சி உறுப்பினரும் சிக்கி உள்ள ஊழல்கள் பற்றி நினைவு படுத்தி இருக்கலாம். அத்தோடு கருணாநிதிக்கு மாநில ஆட்சியைத் தம்மோடு தக்க வைக்க காங்கிரஸ் கட்சியின் ஆதரவும் தேவையாக இருந்தது. மத்திய அரசின் முள்ளிவாய்க்கால் கொலைகளுக்கான ஆதரவை கருணாநிதி அனுமதித்தார்.

ஜெயலலிதாவுடன் தமிழ் நாட்டைத் தமது பக்கத்துக்கு எடுக்க வேண்டும் என்ற பிரதமரின் சவால் பற்றி எச்சரிக்கையாக இருக்க வேண்டும்.

மத்திய அரசு அவரை மிரட்டலுக்கு உள்ளாக்கும் விடயங்களுக்குள் சிக்கிவிடாது தவிர்த்துக் கொள்ள வேண்டும். இது சுலபமான விடயம் அல்ல குறிப்பாக ஹெட்லையின்ஸ் ருடே கொ-லைக் களங்கள் காட்சிப் படுத்தலின் விளைவாக வேறும் பலர் மோதற் களத்தில் உள்வாங்கப் பட்டுள்ளனர்.

பி.ஜே.பி.யின் யஸ்வந் சின்ஹா மற்றும் எல்.ஜே.பி.யின் தலைவர் ராம் விலாஸ் பஸ்வான் ஆகியோர் இப்போது சேர்ந்துள்ளனர். இத்தனை பேரைத் தம்மோடு வைத்திருப்பது இலகுவான விடயம் அல்ல."

மேலே கட்டுரை ஆசிரியர் குறிப்பிட்ட விடயங்களில் இருந்து ஒரு உண்மையை நாம் கண்டிப்பாக ஆழமான கவனத்துக்கு எடுக்க வேண்டும். பிரதமரின் பிரகடனம் இன்னும் ஒரு உண்மையைத் தெளிவு படுத்துகிறது. முன்பு கருணாநிதி எழுதிய கடிதங்கள் எந்தக் குப்பைக் கூடைக்குள் போயினவோ அதே குப்பையுடன் தமிழ் நாடு அரசு நிறைவேற்றிய தீர்மானங்களும் சேர்ந்து விடும் என்பதே அந்த உண்மை.

எனவே ஜெயலலிதா சிக்கி உள்ள சொத்துக் குவிப்பு வழக்கு நடப்பில் உள்ள வழக்குகளில் மிக அற்ப தொகை ஊழலே. ஆனால் அது ஒன்றுதான் அவரை மடக்க மத்திய அரசிடம் உள்ள ஆயுதம். இதை உணர்ந்தவராகத் தமிழக முதல்வர் மக்களின் ஆதரவைக் கட்டி எழுப்பி தம்மையும் தமது கட்சியையும் பலப் படுத்தி வருகிறார். மத்திய அரசு வழக்கின் மூலம் முடக்க முடியாது போனால் அரசுக் கலைப்பை அல்லது வேறு விரும்பத்தகாத ஒன்றைத் தெரி-வு செய்யலாம். நல்லதே நடக்கும் என நம்புவதைத் தவிர வேறு எதுவும் இல்லை.



கொழும்பு, பூசி மெழுகிப் புதுக்கோலம் காண்கிறது!

வெளி நாட்டுப் பயணிகளின் கண்ணைக் கவர அரசு படாதபாடு படுகிறது. கொழும்பு நகரில் உள்ள பிச்சைக்காரர்கள் மர்மமாக மறைந்து போகிறார்கள் என்ற முறைப்பாடுகளோடு அவர்கள் கொல்லப்பட்டு விட்டார்கள் என்ற சந்தேகத்தையும் பலர் வெளிப்படுத்தி வருகின்றனர்.

வெளிநாட்டுச் சூதாட்டக் காரர்களுக்காக 'கசினோ' எனப்படும் சூதாட்ட ஆடம்பர நிலையங்கள், ஹோட்டல்கள், விபச்சாரக் கூடங்கள் என எப்படியேனும் காசு தேடும் மகிந்த ஆட்சி இலங்கை என்றால் அது மது, மாது, மற்றும் சிறுவர் இளைஞர் பாலியல், போதை மருந்துச் சந்தை என அனைத்து வகை ஒழுக்கக் கேடுகளின் சந்தையாக மாறிவருகி-றது. புத்த தேசத்தின் புதிய தத்துவ பூமியாக விளங்குகின்றது.

பெய்ரா ஏரியை அடுத்த வீதிச் சுவரில் மிக நீண்ட சுவர் ஓவியம் வரையப்படும் காட்சி.

சேர்ந்து விட்ட அழுக்கைப் பூசி மெழுகி மற்றவர் கண்களுக்கு மறைத்து விடுவது வழக்கமான கலை-யாகும். இன்று சிங்களத்தின் கைகளில் தமிழரின் இரத்தமும், வங்கிகளில் தமிழரின் சொத்தும், உலகெங்கும் தமிழரின் ஆவேச ஆர்ப்பாட்டமும் சர்வதேசக் குற்ற விசாரணைக் கோரிக்கையும் வலுப் பெற்று வருவதால் இந்தப் புதுக் கோலம் அவசிய-மாகி விட்டது.

ஆனால் இந்த ஓவியங்கள் புத்த சாதகக் கதைகளுக்குப் பதிலாக பல மாடிக் கட்டிடங்கள் கொண்டுள்ள காட்சிகளைக் கொண்டிருப்பது மத மாற்றமா மன மாற்றமா என சிந்திக்க வைக்கிறது.




K.B. INTERCOM
Kiosque, Tabac, Internet, Télécommunication,
Alimentation Africain, Aisatique & Amerique du Sud
மிகக் குறைந்த விலையில் அனைத்து
நாடுகளுக்குமான தொலைபேசி அட்டைகள்!
மரக்கறி வகைகள், அதிகுளிருட்டப்பட்ட
மீன் மற்றும் இறைச்சி வகைகளை
மிகக் குறைந்த விலையில் எம்மிடம்
பெற்றுக்கொள்ளலாம்.
தொடர்புகளுக்கு:
உரிமையாளர்: U. KARTHIGESU
Av des Alpes 40, 1820 Montreux, Switzerland
Tel.: 021 961 27 16 Fax: 021 961 27 19 Natel: 079 681 56 44
WESTERN UNION
MONEY TRANSFER
தற்பொழுது உலகெங்குமான துரித
பணமாற்றுச் சேவையும் உண்டு.



நாங்கள் திருந்தமாட்டோம்! அஞ்சலி!

வண்ணை தெய்வம்

பரமேஸ்வரன் வசிப்பது பிரெஞ்சு நாட்டவர்கள் அதிகமாகக் குடியிருக்கும் ஒரு அடுக்குமாடிவீடொன்றில். அங்கு பரமேஸ்வரனின் குடும்பம் மட்டும்தான் தமிழ்க்குடும்பம். இன்னும் ஒருசில ஆபிரிக்க நாட்டவர்களும், அல்ஜீரிய நாட்டவர்களும் வசிக்கின்றார்கள். இன்று அந்த அடுக்குமாடிவீட்டிற்குக் கீழே அதிகமான தமிழர்களின் நடமாட்டம் காணப்பட்டது. சிலர் கூட்டம் கூட்டமாகவும், இன்னும் சிலர் கார்களுக்குள் இருந்தும் சம்பாசித்துக்கொண்டிருந்தார்கள். அதற்குக் காரணம் பரமேஸ்வரனின் தந்தை திரு. சிவலோகம் அவர்கள் காலமாகிவிட்டார். அவரின் இல்லம் ஐந்தாவது மாடியில் இருப்பதனால் அங்கு சென்று சிவலோகம் அவர்களது உடலுக்கு அஞ்சலி செலுத்தியவர்கள் பின்பு மற்றவர்களும் வந்து அஞ்சலி செய்வதற்கு வசதியாகத்தான் கீழே வந்து நிற்கின்றார்கள்.

சிவலோகம் நாடறிந்த ஒரு நல்ல எழுத்தாளர். அவரின் முகம் தெரியாதவர்கள்கூட அவரின் மரணச்செய்தி அறிந்து வந்து துக்கம் விசாரித்துச் செல்கின்றார்கள். பரமேஸ்வரனும் நாடறிந்த கலைஞனாக இருப்பதால் அவனுக்கும் நண்பர்கள் அதிகம். ஆதலால் துக்கம் விசாரிக்க வருபவர்களின் எண்ணிக்கை அதிகமாகவே இருந்தது. இது அந்த அடுக்குமாடி வீட்டில் வாழும் பிரெஞ்சு நாட்டவர்களுக்கு அதிசயமாக இருந்தது. அவர்களது வீட்டில் ஒரு மரணம் நடந்தால் இறந்தவரின் உடல் தகனம் செய்யப்படும் இறுதி நாளன்றுகூட ஆகக்கூடியது இருபத்தைந்து பேருக்கு மேல் கூடுவது அபூர்வமாக இருக்கும்!.

தமிழர்களைப் பொறுத்தவரையில் கலியாணவீடு, அல்லது இதுபோன்ற மரணவீடுகளிற்குச் செல்லும்போதுதான் ஒருவரை ஒருவர் சந்திப்பதற்கான வாய்ப்புக்கள் அதிகமாகக் கிடைக்கும். இப்படியாகச் சந்தித்துக்கொள்ளும் ஆண்கள் இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி சிறு சிறு குழுக்களாகச் சேர்ந்து மதுப்போத்தில் எடுத்து கார்களுக்குள் அமர்ந்து சந்தோ'ம் கொண்டாடிக்கொள்வதும் வழமையான ஒன்றுதான். இன்றும் அப்படித்தான் அங்கு நிறுத்தப்பட்டிருந்த ஒவ்வொரு கார்களைச் சுற்றியும் நான்கைந்துபேர் சுற்றிநின்று சந்தோசம் கொண்டாடிக்கொண்டிருந்தார்கள்.

மகேஸ்வரனின் காருக்குள் மகேஸ்வரனுடன் சேர்ந்து குணாளன், ரமேஸ், காந்தன் ஆகிய நால்வரும் கூடியிருந்தார்கள். இனிமேல்த்தான் அவர்கள் கச்சேரியை ஆரம்பிக்கப் போகின்றார்கள். இவர்களெல்லாம் குடிகாரர்கள் அல்ல! ஆனால் குடிப்பதில் தங்கள் தங்களுக்கென ஒரு தனிக் கொள்கைளை வைத்திருப்பவர்கள்!.

மகேஸ்வரன் “சிவாஸ் றீகல்”தான் குடிப்பான். குணாளனுக்கு “வொட்கா”தான் வேண்டும். ரமேஸோ மற்றவர்கள் எதைக் குடிக்கின்றார்களோ தானும் அதையே குடித்துக்கொள்வான் அதே நேரம் நண்பர்கள் கூடித் தண்ணியடிப்போம் என்று முடிவெடுத்தவுடனேயே முதலாளாகத் தன்னுடைய பங்காக ஒரு தொகையைக் கொடுத்துவிடுவான். அதற்குமேல் அங்கு எத்தனை போத்தல்கள் வாங்கப்பட்டாலும் அவன் முதலில் கொடுத்ததுதான் அவனுடைய பங்கு! ஏனெனில் அவன் வீட்டைவிட்டு வெளிக்கிடும்போதே தனது செலவிற்கென எடுத்துவரும் பணமே அவ்வளவுதான்!. இவர்களில் இன்னொருவரான காந்தன் ஒரு வித்தியாசமான பேர்வழி! இவன் என்றைக்குமே மது அருந்தியது கிடையாது! அதற்காக மது அருந்துபவர்களைக் கேலிசெய்வதும் கிடையாது. அவர்களுடன் சேர்ந்து தானும் சிரித்துக் கதைத்து கும்மாளம் அடித்துக்கொள்வான். அதே நேரம் மது அருந்துபவர்கள் தங்களது ரேஸ்ற்றுக்காகப் பொரிகடலையிலிருந்து, பொரிச்ச இறைச்சிவரை எது வாங்கி வைத்திருந்தாலும் அதில் மது அருந்துபவர்களைவிட அதிகமாகச் சாப்பிடுவது காந்தன்தான்.

தண்ணியடிக்க ஆரம்பிக்கும்போது சாதாரணமாகத்தான் பேசிக்கொள்வார்கள். நேரம் செல்லச்செல்லப் போத்தலில் மது குறையக்குறைய சாதரணமாக ஆரம்பித்த சம்பா'ணைகள் வாதங்களாக மாறுவதும்! ஒருவர் பேச்சுக்குள் மற்றவர் குறுக்கிடுவதுமாகவும் பின் பிரியும்போது ஒருவரை ஒருவர் கொஞ்சுவதுமாக இந்த மது வயிற்றுக்குள் சென்றதும் ஜாலி,

கேலி, சிரிப்பு, அழுகை என்று அனைத்தும் நவரசமாகவே இருக்கும்!

இப்பொழுது இரண்டாவது "சிவாஸ் றீகல்" வந்துவிட்டது. இது குணாளனின் உபயம். குணாளன் லேசில் பர்சைத் திறக்கமாட்டான். இரண்டு மூன்று பெக் வயிற்றுக்குள் பாய்ந்துவிட்டால் பின்பு எல்லோருக்கும் முன்பாகப் பர்சை எடுப்பவன் அவனாகத்தான் இருக்கும்!.

சம்மந்தமே இல்லாமல் எதையெதையோ எல்லாம் உரையாடிய அவர்களது சம்பா'ணை இப்பொழுது தாங்கள் அஞ்சலி செலுத்த வந்த சிவலோகத்தின் பக்கம் திரும்பியது.

காந்தன் மது அருந்தாததால் நிதானமாக இருந்ததால் மட்டுமல்ல அவன் சிவலோகத்தின் எழுத்துக்களில் நல்ல மரியாதை வைத்திருந்த காரணத்தால் சிவலோகத்தின் எழுத்துக்களையும், அவருடைய தனிப்பட்ட பண்புகளையும் சிலாகித்துப் பேசி "உண்மையில் சிவலோகத்தின் இழப்பு எங்கள் சமூகத்திற்குப் பேரிழப்புத்தான்" எனத் தனது கவலையை வெளிப்படுத்தினான்.

மகேஸ்வரனுக்கு இந்த இலக்கியங்கியங்களில் எல்லாம் பெரிய நாட்டம் இல்லாவிட்டாலும் பாஸ்க்கரனைச் சந்திப்பதற்காக அவன் வீட்டிற்குச் செல்கின்ற சமயங்களில் சில சமயங்களில் அவன் தந்தையுடனும் உரையாடக்கூடிய சந்தர்ப்பங்களிலிருந்து அவரைப்பற்றிய கருத்துக்கள் எல்லாம் உயர்வானதாகவே இருந்தது.

குணாளன் எப்பொழுதும் விவாதங்களுக்குள் மூக்கை நுழைப்பதில்லை! எந்த விடயத்திலும் மெஜெரெட்டியான பக்கமே நின்றுகொள்வான்! இன்றும் அப்படித்தான் "நல்ல மனுசனப்பா! சமுதாயத்தைத் திருத்திறமாதிரி இன்னும் நாலைஞ்சு புத்தகம் எழுதியிருப்பார்! அதுக்கிடையிலை மனுசன் செத்துப்போச்சு" என்று சொல்லிவிட்டு சிவலோகத்திற்கு அஞ்சலி செய்வதுபோல கஸ்ற்றப்பட்டு வயித்துக்குள் இன்னொரு பெக்கை செலுத்திவிட்டான்.

அந்த மது மயக்கத்திலும் அனைவருடைய கருத்துக்களையும் மிக நிதானமாகக் கேட்டுக்கொண்டிருந்த ரமேஸ் அடுத்த பெக்கையும் வாயினுள் ஊற்றிவிட்டுச் சொன்னான் "சும்மா ஆளாளுக்குப் புலம்பாதையுங்கோடா! அவர் எழுதுவார், புத்தகம் அடிப்பார், பேந்து வெளியீட்டுவிழாச் செய்வார்! நாங்களும் முகத்துக்காகப் புத்தகத்தை வாங்கிறதுதான் படிக்க எங்கை நேரம் கிடைக்கிது?! இல்லைத் தெரியாமல்த்தான் கேக்கிறன் அவற்றை புத்தகங்களைப் படிச்சு என்ன பரீட்சைக்குப் பதில் எழுதப்போறமே?! ஆள் அவுட்டானது நல்லதெண்டு நினையுங்கோ! இனி இந்தாள் புத்தகம் எழுதவும் மாட்டார்! வெளியீட்டுவிழா செய்யவும் மாட்டார்! இண்டையோடை ஒரு தொல்லை முடிஞ்சிதெண்டு நினையுங்கோ"! என்று நக்கலாகச் சொல்லிச் சிரித்துக்கொண்டான்.

மகேசும், குணாளனும், ரமேஸின் கருத்தை ஆதரிப்பதுபோல சிரித்துக்கொண்டு அடுத்த ரவுண்டுக்காகக் கிளாசிற்குள் விஸ்க்கியை ஊற்றிக்கொண்டிருந்தார்கள். ஆனால் காந்தன் மட்டும் "ஒரு உயிரின் பிரிவிற்கு அஞ்சலி செலுத்த வந்தவர்களின் மனங்களில் இத்தனை அழுக்குகளா? இவர்கள் திருந்தவே மாட்டார்களா?" என மனதிற்குள்ளேயே வருந்திக்கொண்டான்.

எங்களுக்குள் இப்படியானவர்களும் இருக்கின்றோம்!

நாங்கள் திருந்தமாட்டோம்!



Importas
Cash & Carry




ஓர் ஆண்டு நிறைவை முன்னிட்டு டிசம்பர்
30 திகதிவரை எமது வாடிக்கையாளர்களுக்கு நாம்
வழங்கும் பெறுமதிமிக்க பரிசில்களை
பெற்றுகொள்ள தவறாதீர்கள்!

தினமும் தள்ளுபடி விலையில்
தரமான பொருட்கள் பெற்றுக்கொள்ள
இன்றே நாடுங்கள்

A to Z Groceries
Retail & Wholesale

Baslerstrasse 102
8048 Zürich
Switzerland.
Tel.: +41 52 672 2838 Fax : +41 52 672 2839

Importas GmbH
Tobeläckerstrasse 4
8212 Neuhausen Am Rheinfall
Switzerland.



உலகத்தை உலுக்கும் உயிராயுதம்

பாகம் – 03

குண்டுகளுடன் அடோல்ப் ஹிட்லரை இலக்கு வைத்த இராணுவ அதிகாரி

பண்டிதர்

தொழில்நுட்பம் நவீனமயப்படுத்தப்படாத காலப்பகுதியில் இடம்பெற்ற தற்கொலைத் தாக்குதல்கள் தொடர்பில் கடந்த இரு மாத காலமாகப் பார்த்தோம். இராணுவ நோக்கத்துக்காக மட்டுமன்றி அரசியல் நோக்கத்துடனும் தற்கொலைத் தாக்குதல்கள் பயன்படுத்தப்படுவது தொடர்பிலும் கடந்த மாதத்தில் பார்த்தோம். தொழில்நுட்ப வளர்ச்சி, ஆயுதங்கள் நவீனமயப்படுத்தப்பட்டமை என்பனவும் தற்கொலைத் தாக்குதல்களை நவீனமயப்படுத்துவதாக அமைந்திருந்தது.

ஆரம்பகாலத் தற்கொலைத் தாக்குதல் முயற்சிகளில் ஜேர்மனியின் சர்வாதிகாரியாக இருந்த அடோல்ப் ஹிட்லர் மீதான தற்கொலைத் தாக்குதல் முயற்சியும் முக்கியமாகக் குறிப்பிடப்படுகின்றது. 1943 இல் Rudolf Christoph Freiherr von Gersdorff ஹிட்லரை தற்கொலைத் தாக்குதல் ஒன்றின் மூலமாகப் படுகொலை செய்வதற்கு முற்பட்ட போதிலும், அந்த முயற்சி படுதோல்வியடைந்தது. ஹிட்லரைத் தற்கொலைத் தாக்குதலின் மூலமாகப் படுகொலை செய்வதற்கு முற்பட்ட கிறிஸ்தோபர் ஜேர்மன் இராணுவத்தில் பணியாற்றிய ஒருவர் என்பது குறிப்பிடத்தக்கது.

கிறிஸ்தோபரின் தந்தையும் இராணுவத்தில் பணியாற்றியவர் என்பதுடன் கிறிஸ்தோபரும் தன்னுடைய திறமை காரணமாக பல பதவி உயர்வுகளைப் பெற்றுக்கொண்டவர். இதன் காரணமாக இராணுவப் புலனாய்வுப் பிரிவில் இவருக்கு முக்கிய பதவி ஒன்று வழங்கப்பட்டிருந்தது. இந்த நிலையில்தான் இராணுவத்திலுள்ள சிலருடன் இணைந்து ஹிட்லரைத் தீர்த்துக்கட்டுவதற்கான உபாயம் ஒன்றை இவர் வகுத்துக்கொண்டார். 1943 மார்ச் 13 ஆம் திகதி ஹிட்டலரைப் படுகொலை செய்வதற்காக மேற்கொள்ளப்பட்ட மற்றொரு முயற்சி தோல்வியடைந்ததையடுத்து, தன்னுடைய உயிரைக் கொடுத்தாவது ஹிட்லறின் உயிரை எடுப்பதாக கிறிஸ்தோபர் தன்னுடைய நண்பர்களுக்கு வாக்குறுதியளித்தார். ஜேர்மனியின் எதிர்கால நலன்களுக்காக இதனைச் செய்வதற்குத் தான் தயாராக இருப்பதாகவும் அவர் அறிவித்தார்.

இதன்படி ஹிட்லரைத் தீர்த்துக்கட்டுவதற்கான திட்டம் ஒன்று வகுக்கப்பட்டது. 1943 மார்ச் 21 ஆம் திகதி பேர்லினிலுள்ள ஆயுதக்களஞ்சியத்துக்கு ஹிட்லர் வரும் போது அவரைத் தீர்த்துக்கட்டுவதுதான் இவர்களுடைய திட்டமாக இருந்தது. சோவியத்திடமிருந்து கைப்பற்றப்பட்ட பெருந்தொகையான ஆயுதங்கள் அங்கு காட்சிக்கு வைக்கப்பட்டிருந்தன. அதனைப் பார்வையிட வரும்போது ஹிட்லரின் கதையை முடிப்பதற்கான திட்டத்துடன் கிறிஸ்தோபர் குழுவினர் காத்திருந்தார்கள். ஹிட்லருடன் உயர் இராணுவ அதிகாரிகள் பலரும் அங்கு வந்த அதேவேளையில், ஹிட்லரின் விஜயத்தை முன்னிட்டு கடுமையான பாதுகாப்பு ஏற்பாடுகளும் செய்யப்பட்டிருந்தன. ஆனால், அதிர்ஷ்டவசமாக குறிப்பிட்ட ஆயுதசாலையைக் ஹிட்லருக்குச் சுற்றிக்காண்பிக்கும் பொறுப்பு கிறிஸ்தோபரிடம் ஒப்படைக்கப்பட்டிருந்ததால் அதனை நன்கு பயன்படுத்திக்கொள்ள அவர் திட்டமிட்டார்.

கிறிஸ்தோபர் இராணுவப் புலனாய்வுப் பிரிவின் முக்கிய அதிகாரியாகவும், நம்பிக்கைக்குரிய ஒருவராகவும் இருந்தமையால் அவர் மீது யாரும் சந்தேகிக்கவில்லை என்பதுடன், இராணுவச் சோதனைகளும் இடம்பெறவில்லை. அதனால், தன்னுடைய கோட் பொக்கற்றுக்குள் இரண்டு வெடிகுண்டுகளை மறைத்துக் கொண்டுசெல்வது அவருக்குச் சிரமமானதாக இருக்கவில்லை. ஹிட்லர் ஆயுதக்களஞ்சியத்துக்கு வந்த உடனடியாகவே பத்து நிமிடங்கள் தாமதமாக வெடிக்கத்தக்கவகையில் அந்த இரண்டு குண்டுகளையும் செட் பண்ணி கிறிஸ்தோபர் தயாராக வைத்துக்கொண்டார்.

சரியாக பத்தாவது நிமிடத்தில் ஹிட்லருக்கு மிக அருகில் கிறிஸ்தோபர் செல்வது எனவும் அப்போது இடம்பெறக்கூடிய குண்டு வெடிப்பில் இருவரும் கொல்லப்படுவார்கள் என்பதும்தான் திட்டம். இது தொடர்பாக விரிவான திட்டம் ஒன்றும் தீட்டப்பட்டிருந்தது. கிறிஸ்தோபர் தன்னுடைய இறுதிக்கணங்களை மட்டுமன்றி, ஹிட்லரின் முடிவையும் எதிர்பார்த்துக்கொண்டு ரஷ்யர்களிடமிருந்து கைப்பற்றப்பட்ட ஆயுதங்களைக் காட்டிக்கொண்டு சென்றார். இந்த சதி முயற்சிக்கு உதவிய மற்றைய இராணுவ அதிகாரிகளும் பத்தாவது நிமிடத்தை எதிர்பார்த்துக்கொண்டு பதற்றத்தை மறைத்துக்கொண்டு நின்றார்கள். ஆனால், இந்தத் திட்டங்களுக்கு முரணான ஒரு சம்பவம் நடைபெற்றது.

ஆயுதக்களஞ்சியத்துக்குள் மிகவும் விரைவாக நடந்த ஹிட்லர் பத்து நிமிடங்களுக்கு முன்பாகவே அங்கிருந்து அவசரமாக வெளியேறிவிட்டார். ஹிட்லர் வெளியேறியதால் ஏமாற்றமடைந்த கிறிஸ்தோபர் அவசரமாகப் பொதுக் கழிவறை ஒன்றுக்குள் சென்று இறுதி நிமிடத்தில் குறிப்பிட்ட இரண்டு குண்டுகளையும் செயலிழக்கச் செய்ததாகக் கூறப்படுகின்றது. கொலை முயற்சி தோல்வியடைந்தமையால் அச்சமடைந்த கிறிஸ்தோபர் அது தொடர்பான செய்தி கசிந்து ஆபத்து ஏற்படலாம் என்பதால் உடனடியாகவே குறிப்பிட்ட முகாமிலிருந்து வேறு பகுதி ஒன்றுக்கு இடமாற்றம் செய்துகொண்டு சென்றுவிட்டதாகக் கூறப்படுகின்றது.

அன்றுமட்டும் ஹிட்லர் கொஞ்சம் நிதானமாக அந்த ஆயுதக் களஞ்சியத்தைப் பார்வையிட்டுச் சென்றிருந்தால் அவரது சரித்திரம் வேறுவிதமாக முடிந்திருக்கும். இரண்டாவது உலகப் போரின் முடிவும் வேறு விதமாக எழுதப்பட்டிருக்கும். ஹிட்லர் அவசரமாக வெளியேறியமைக்கு தன்னுடைய பாதுகாப்பு தொடர்பில் அவர் கொண்டிருந்த கரிசனையும் ஒரு காரணமாக இருந்திருக்கலாம்.

ஆனால், முக்கிய இராணுவ அதிகாரி ஒருவரே தற்கொலைக்கொலையாளியாக மாறுவதற்குத் தயாராக இருந்துள்ளார் என்பது முக்கியத்துவம் வாய்ந்த ஒன்றாகும். இதில் இரண்டு விடயங்களை நாம் புரிந்துகொள்ளக் கூடியதாக இருக்கின்றது. ஒன்று - சாதாரணமான எவராலுமே ஹிட்லரை நெருக்க முடியாத அளவுக்கு அவருக்கான பாதுகாப்பு ஏற்பாடுகள் பலப்படுத்தப்பட்டிருந்தன. இரண்டு - ஹிட்லரின் இராணுவத்துக்குள்ளேயே அவரைப் படுகொலை செய்ய வேண்டும் எனவும், அதற்காக உயிரைக் கொடுக்கவும் தயார் என்றளவுக்கு எதிர்ப்பு இருந்துள்ளது.



ஹிட்லரைப் படுகொலை செய்வதற்கான பல முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும், அதற்காக உயிராயுதத்தைப் பயன்படுத்த முற்பட்ட சம்பவம் இதுதான் முதன்முறையாகும்.

இதனைவிட இரண்டாவது உலகப் போர் இடம்பெற்றுக்கொண்டிருந்த காலப்பகுதியிலும் பல தற்கொலைத் தாக்குதல் சம்பவங்கள் இடம்பெற்றிருக்கின்றன. இது தொடர்பில் முழுமையான பதிவுகள் இல்லாத போதிலும், ஒரு சில பதிவுகள் கிடைக்கப்பெற்றிருக்கின்றன. இதன்படி பெர்லினுக்கான சமர் தீவிரமாக இடம்பெற்றுக்கொண்டிருந்த காலப்பகுதியில் ஜேர்மனியின் விமானப்படை விமானங்கள் சோவியத்தின் பழைய ஆறின் மேலாகப் போடப்பட்டுள்ள பாலங்களைத் தகர்ப்பதற்காக கடுமையான தாக்குதல்களை நடத்தி பாலங்களைத் தகர்த்தெறிந்தன. சோவியத் படையினரின் முன்னகர்வைத் தடுப்பதற்கு இந்தப் பாலங்கள் தகர்க்கப்படுவது அவசியமானதாக இருந்துள்ளது.

வீ-1 எனப்படும் விமானங்களையே ஜேர்மன் விமானப்படை இந்தத் தாக்குதல் நடவடிக்கைக்காகப் பயன்படுத்தியது. இந்த ரக விமானங்கள் போர்களின் போது இதற்கு முன்னதாகப் பயன்படுத்தப்படவில்லை என்பது கவனிக்கத்தக்கது. அதிகளவு உயிர்களைப் பலிகொடுக்க வேண்டியிருக்கும் என்பதால்தான் இந்த வகையான விமானங்களை அதிகளவுக்குப் பயன்படுத்துவதை இராணுவ நிபுணர்கள் விரும்பவில்லை. இருந்தபோதிலும் பேர்லின் சமர் உச்சகட்டத்தில் நடைபெற்றுக்கொண்டிருந்த போது சோவியத் படைகளின் முன்னகர்வைத் தடுப்பதற்கு என்ன விலையையும் கொடுப்பதற்கு ஜேர்மனி தயாராக இருந்தது என்பதைத்தான் இந்த விமானங்கள் பயன்படுத்தப்பட்டமை உணர்த்துகின்றது.

இந்த விமானங்கள் இரண்டாவது உலகப்போரின்போது ஜேர்மனியினால் விஷேடமாகத் தயாரிக்கப்பட்டவை என்பது குறிப்பிடத்தக்கது. பறக்கும் குண்டு என வர்ணிக்கப்படும் இந்த விமானங்கள் இரண்டாம் உலகப்போரின் போது பெரும் அச்சுறுத்தலாக விளங்கின. 1945 ஏப்ரல் 17 ஆம் திகதிக்கும் 20 ஆம் திகதிக்கும் இடைப்பட்ட காலப்பகுதியில் 17 பாலங்கள் இந்த விமானங்களால் தகர்த்தெறியப்பட்டதாக ஜேர்மனியின் விமானப்படை தெரிவிக்கின்றது. இருந்தபோதிலும் இராணுவ வரலாற்றாசிரியர்கள் இது மிகைப்படுத்தப்பட்ட தகவல் எனக் கருதுகின்றார்கள். இவர்களின் கருத்துப்படி ரயில்வே பாலங்கள் சிலவே இந்த விமானங்களினால் தகர்க்கப்பட்டன. அத்துடன் இந்தக் காலப்பகுதியில் 35 விமானப்படையினரை இதற்காக ஜேர்மன் விமானப்படை பலிகொடுத்திருக்கின்றது. இவர்கள் தற்கொலைப் படையினராகவே இந்தத் தாக்குதல் நடவடிக்கையை மேற்கொண்டிருந்தார்கள்.

இருந்தபோதிலும் இந்தத் தாக்குதல் நடவடிக்கைகளையும் முறியடித்துக்கொண்டு சோவியத் படையினர் ஜேர்மனிக்குள் புகுந்து ஜெட்டர்பொக் பகுதியிலுள்ள இந்த விமானப்படையின் தளத்தைக் கைப்பற்றிய பின்னர் இந்த விமானத்தாக்குதல்களை நிறுத்தவேண்டியேற்பட்டது. இந்த நடவடிக்கையின் போது ஜேர்மனியால் தயாரிக்கப்பட்ட இந்த வகையான விமானங்கள் பல சோவியத் படைகளால் கைப்பற்றப்பட்டன.

இரண்டாவது உலகப்போரின்போது இதனைவிட மேலும் பல தற்கொலைத் தாக்குதல் சம்பவங்கள் இடம்பெற்றிருக்கின்ற போதிலும் அது தொடர்பான தகவல்கள் முறையாக ஆவணப்படுத்தப்படவும் இல்லை, போதிய ஆதாரங்களும் அதற்குக் கிடைக்கவில்லை.

இதேவேளையில் இரண்டாம் உலகப்போரின் பின்னரும் இவ்வாறான தற்கொலைத் தாக்குதல்கள் வேறு பாணியில், வேறுவிதமான அரசியல், இராணுவ நோக்கங்களுடன் தொடர்ந்தன. அதில் குறிப்பிடப்படவேண்டியது Viet Minh "death volunteers" என்ற வியட்நாமிய போராளிகள் பிரான்-ஸின் ஆக்கிரமிப்புப் படைகளுக்கு எதிராக நடத்திய போராட்டத்தில் இடம்பெற்றது. இரண்டாம் உலகப்போரின்போது வியட்நாமை பிரான்ஸ் தன்னுடைய கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்து ஒரு காலனித்துவ நாடாக்கியது. பிரான்ஸின் ஆக்கிரமிப்புக்கு எதிரான வியட்நாமியர்கள் முன்னெடுத்த போராட்டம் சரித்திரத்தில் பொன் எழுத்துக்களில் பொறிக்கப்பட வேண்டியது. பல விடுதலைப் போராட்டங்களுக்கும் முன்னுதாரணமாகத் திகழ்ந்தது. அந்த வகையில் அங்கு இடம்பெற்ற தற்கொலைத் தாக்குதல்களும் முக்கியமானவை.

அவை பற்றிய தகவல்களுடன் அடுத்த மாதம்...

பாரிஸ் மாநகரில்

நிஷான்

சுப்பர் மார்சே

தினம் தினம் புத்தம் புதிய
பொலிவுடன் உடன்
மரக்கறி வகைகள்.

இல்லை என்று சொல்லா
வண்ணம் அனைத்து
மளிகைப் பொருட்களுக்கும்.

வாரம் தோறும் உடன்
உப்புகடல் மீன்வகைகள்.

இவை இனைத்துக்கும்
நாடுங்கள்
நிஷான் சுப்பர் மார்சே

பண்டிகை
காலத்தில் விசேட
மளிகைப் பொருட்கள்
நாள் தோறும்
அதிரடி மலிவு
விற்பனை
அனைத்திற்கும்
நாடுங்கள்
நிஷான் சுப்பர் மார்சே



உங்களை இன்முகத்துடன்
வரவேற்று உங்கள் தேவையை
உடனடியாக நிறைவேற்ற
காத்திருக்கின்றார்கள்
வாடிக்கையாளரின் சிகரமான
நிஷான் சுப்பர் மார்சே!

ADRES NISAN CASH AND CARRY

64 RUE LOUIS BLANC
75010 PARIS

TEL .0033(0)144720603
FAX .0033(0)142093084

கடாபி என்று ஒரு பயங்கரவாதி!



பயங்கரவாதி எனப் பெயர் இட்டுவிட்டால் எவரும் பயங்கரவாதிதான். எல்லாம் வல்லவன் வகுத்த வழியே அது சதாம் ஹுசேனோ, ஒசாமா பின்லாடனோ, மாமுட் கடாபியோ யாராக இருந்தாலும் சரி இல்லை ஈழத் தமிழரே ஆனாலும் சரி சொல்லுவோர் சொன்னால் கேட்பவர் கேட்டுத்தான் ஆகவேண்டும்.

அந்த வகையில், கொல்லும் உரிமையும் கொன்ற பின் புதைக்கும் உரிமையும் இந்த வல்லாதிக்க அரசுகளுக்கு மட்டுமே இருக்கிறது. அது மட்டும் அல்ல புதைத்தாலும் எரித்தாலும் அவர்களின் அடக்க முறையோ அடக்க நிலைகளோ மக்களுக்குத் தெரியாதவாறு மறைக்கப்பட வேண்டும்.

எக்காலத்திலும் இவர்களின் நினைவும் வாழ்க்கை வரலாறும் மக்கள் மனதில் மீண்டும் எழாதவாறு உறுதிப் படுத்துவதே சம்பந்தப்பட்ட ஆதிக்க அரசுகளின் நோக்கமாக உள்ளது. இதனைக் கடாபி-யின் சடல அடக்கம் பற்றிக் கொடுக்கப் பட்ட விளக்கம் பகிரங்கப் படுத்துகிறது.

உண்மையில் ஒருவன் கெட்டவன் என்றால் மக்கள் எதற்காக அவனை மதித்துப் பின்பற்றுவர் என்ற பயமும் அதைத் தடுக்க நினைக்கும் தேவையும் ஏற்பட வேண்டும்? தமிழீழ விடுதலைப் புலிகளும் அதன் தலைவர் பிரபாகரனும் தமிழ் மக்களின் மதிப்புக்கும் பின்பற்றுதலுக்கும் பாத்திரமானவர் என்ற நியாயமான பயம் சிங்களத்துக்கு உள்ளது. எனவே பிரபாகரன் உடல் பிறர் கையில் போகாதவாறு உறுதிப்படுத்தி மாவீரர் துயிலும் இல்லங்களையும் இடித்து அழித்தது.

இலங்கை அரசு புலிப் போராளிகளைப் படு கேவலமான வகையில் சித்திரவதை செய்தும் பா-லியல் வக்கிரங்களைச் செய்தும் நிர்வாணமாக்கி சுட்டும் கொன்றது. இவை மனித குலத்தின் மீதும் சர்வதேசப் போர் விதிகளையும் மீறும் குற்றங்கள் ஆக இருப்பினும் இவை பற்றி எந்த நாடும் எதுவித கரிசனையோ கண்டனமோ வெளிப் படுத்தவில்லை.

சதாம் ஹுசேன் இரட்டைக் கோபுரத் தாக்குதலைச் செய்யவில்லை. அதற்குக் காரணமான அல்குவைதா இயக்கத்துடனும் தொடர்பு கொண்டிருக்கவில்லை. ஆனாலும் அவனைக் கொல்வதற்கு அமெரிக்கா பொய்யான காரணங்களைக் கூறி ஈராக் மீது படை எடுத்து அவனைக் கொன்றதோடு அவனைப் பயங்கரவாதி என்கிறது.

ஒசாமா பின்லேடன் குற்றவாளி என்றால் கைது செய்து உலக நீதி மன்றத்தில் விசாரணைக்கு உட்படுத்தித் தண்டனை வழங்க முடியும். சதாமைப் போன்றே எங்கோ இருந்த பின்லேடனைத் தேடிச் சென்று கொன்றது அமெரிக்க அரசு.

நல்லவனா கெட்டவனா என்று அறியப் படாமலே மரண தண்டனை நிறை வேற்றப் பட்டது.

தமிழராயும் புலிகளின் நிர்வாகத்தில் வாழ்ந்தாலும் அவர் பயங்கரவாதிதான். அவரை உயிரோடு சித்திரவதை செய்யலாம் கட்டி வைத்து வெட்டி வேடிக்கை செய்யலாம் பெண்கள் என்றால் எத்தனை தடிமாடுகள் வேண்டுமானாலும் வேட்டையாடி நிர்வாணமாக்கி உயிரோடு பிணமாக்கி எரிக்கலாம் புதைக்கலாம் பீரங்கி வண்டியால் ஏற்றி சிதைக்கலாம்.

எப்படியாயினும் அவர்களின் தடயம் எதுவும் பூமியில் விட்டு வைக்கக் கூடாது என்பதைச் சிங்களம் வழங்கி விட்டும் வழக்கின் தீர்ப்பை எழுதி முடிக்கலாம். இவற்றைப் பார்க்கும் எமக்கு கடாபி நீ கை குலுக்கி வரவேற்ற அத்தனை பேருக்கும் நீ எப்படிப் பயங்கரவாதியாக மாறி-னாய்? நீ மக்கள் மீது போட்ட குண்டுகளின் எண்ணிக்கையை விடப் பல நூறு மடங்கு குண்டுகளை எம் மண்ணின் மீதும் மக்கள் மீதும் போட்டனர்.

1980 முதல் 2009 வரை எறிகணைகள் எரி குண்டுகள், கொத்துக் குண்டுகள் போட்டு 2 இலட்சம் வரையான மக்கள் கொல்லப் பட்ட போதும் ஏனென்று கேட்காமல் எம்மை அழித்த புண்ணியவான்கள் உன்னை அழித்ததில் நாம் ஆச்சரியப்பட ஏதும் இல்லை.

ஆனாலும் நீ செய்த மக்கள் நல சேவைகளும் திட்டங்களும் பெற்ற பின்புமா மக்கள் புரட்சி வெடித்தது? அறியப்படாத புதைகுழியில் இருந்து இத்தனையும் நீ செய்தாயா என்பதை மட்டும் சொல்லிவிடு. நீ சொல்லாவிட்டாலும் உன்னால் நன்மை பெற்ற மனித உள்ளங்கள் மௌனித்திருந்து விடுமா?

1. லிபியாவில் மின்கட்டணம் இல்லாது குடிமக்கள் அனைவருக்கும் இலவச மின்விநியோகம்.
2. அரசின் வங்கிகள் அனைத்திலும் குடிமக்கள் அனைவருக்கும் சட்டப்படி வட்டி இல்லாக் கடன் வசதி.
3. லிபியாவில் வீடு ஒரு அடிப்படை உரிமை-யாகக் கருதப்படுகிறது. அனைவருக்கும் வீடு கிடைக்கும் வரை உன் பெற்றோர் வீடின்றிக் கூடாரத்தில் வாழ்ந்தனராமே?
4. புதுமணத் தம்பதிகள் தமது வாழ்வைத் தொடங்கும் பொருட்டு அனைவருக்கும் 60,000 டினார் (அமெரிக்க டொலர் 50,000) அரச உதவி.
5. கல்வியும் மருத்துவச் சேவையும் லிபியாவில் இலவசம். உனக்கு முன்னர் 25 வீதமாக இருந்ததை நீ 83 வீதம் ஆக்கினாயாம்.
6. விவசாயம் செய்ய முன்வரும் லிபியருக்கு இலவச நிலம் பண்ணை வீடு கருவிகள் விதை-கள் மற்றும் கால்நடைகள் எல்லாமே இலவசம்.
7. லிபியருக்கு உள் நாட்டில் கல்வியோ மருத்துவமோ பெறமுடியாத பட்சத்தில் இலவசமாக வெளி நாட்டிற்குச் சென்று கல்வி பெற அரசு உதவுவதோடு தங்குமிட வசதி கார் செலவுக்கு மாதாந்தம் 2,300 அமெரிக்க டொலர் அரசு கொடுக்கும்.
8. லிபியாவில் லிபியர் ஒருவர் கார் வாங்க வி-லையில் 50 வீதம் அரசு கொடுக்கும்.
9. லிபியாவில் 1 லீற்றர் பெற்றோலின் விலை 0.14 மட்டுமே.
10. லிபியாவுக்கு வெளிநாட்டுக் கடன் இல்லை. உலகில் முடக்கப் பட்டுள்ள லிபியாவின் வைப்பு 150 பில்லியன் அமெரிக்க டொலர்கள்.
11. பட்டதாரியான லிபியருக்கு வேலை கிடைக்கும் வரை அவர் தகுதிக்கு ஏற்ற தொழிலுக்கு கொடுக்கப்படும் சராசரி சம்பளம் அரசினால் வழங்கப்படும்.
12. லிபியாவின் எண்ணை விற்பனையால் வரும் தொகையின் ஒரு பகுதி எல்லாக் குடிமக்களின் வங்கிக் கணக்குகளுக்கும் நேரடியாகச் செலுத்தப்படுகிறது.
13. பிள்ளைப் பேற்றுக்கு ஒருதாய்க்கு 5,000 டினார் கொடுக்கப் படுகிறது.
14. லிபியாவில் 40 ரொட்டிகள் 0.15 காசுக்கு விற்கப்படுகிறது.
15. 25 சத வீதமான லிபியர்கள் பட்டதாரிகளாவர்.
16. உலகின் மிகப் பெரிய நீர்ப்பாசனத் திட்டத்தின் மூலம் கடாபி வனாந்தரம் அடங்கலாக பாசன வசதி செய்துள்ளார்

இவ்வளவு செய்த உன்னை எப்படிப் பயங்கரவாதி எனலாம்?

லிபியாவுக்கு அடுத்து விழப் போவது சிரியாவா? சிரியப் புரட்சியாளர்கள் லிபியாவில் நடந்தது போன்றே அங்கும் விமானப் பறப்புக்குத் தடைவிதித்து தமது புரட்சிக்கு நேட்டோ ஐ.நா அமைப்புகள் உதவ வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்து வருகின்றனர். ஆர்ப்பாட்டங்களில் சுலோக அட்டைகள் லிபியாவுக்கு அடுத்தது சிரியா எனவும் மும்மரமாக வேகம் பெறுவதைக் காண முடிகிறது.

ஐ.நா.வில் அமெரிக்கா முன்மொழிந்த தடை-களை சிரஷியாவும் சீனாவும் வெட்டு வாக்கைப் பாவித்ததால் ஆத்திரமடைந்த அமெரிக்கப் பிரதி-நிதிகள் கோபத்துடன் வாரிச் சுருட்டிக் கொண்டு வெளியேறியதை உலகமே காணொளிகளில் கண்டது.

இந்நிலையில் சிரிய அதிபர் ஆசாத் தமது நாட்டில் தலையிடும் மேற்குலக நாடுகள் முழு பிரதேசத்தையும் நிகுலைப்பதாக அமையும் என எச்சரிக்கை விடுத்துள்ளார். அவருக்கு ஆதரவாக விளங்கக்கூடிய ஈரானும் பட்டியலில் அடுத்த நிலையில் உள்ளதால் ஆசாத்தின் எச்சரிக்கை உண்மையாகவே நிகழக்கூடிய சாத்தியப்பாடுகள் உள்ளன. ஈரானுக்கும் ரஷிய சீனப் பின்பலம் நிறையவே உள்ளது.

ஆனாலும் சிரியாவின் கழுத்தில் சுருக்குப் போடும் வேலையை அந்நிய கரங்கள் தொடருவது தெரிகிறது. இம்முயற்சியில் சனல் 4 தொலைக் காட்சிக்காக இரகசியமாகச் செய்தி சேகரிக்கப் போய் ஆசாத்தின் எதிர்ப்பாளர் மத்தியில் இருக்கும் போது பிடிபட்டு விசாரணைக்கு உட்படுத்தப்பட்டு விடுதலையானவர். இவரது பல கூற்றுகள் அங்கே ஒரு புயலை உருவாக்கும் நோக்கத்தை வெளிப்படுத்துகின்றன. எனவே இவரது பின்னணியில் பலமான சக்திகள் இருக்கும் வாய்ப்புகள் அதிகம்.

குறிப்பாக அவர் இப்படியும் கூறி உள்ளார்"அந்த இடத்தில் நான் கேட்ட குரல்கள் தமக்கு உதவி தேவை. எமக்கு வெளிநாட்டுத் தலையீடு தேவை. வான் பறப்புக்குத் தடை வேண்டும். நாம் தொடர்ந்து முன்னேற இவற்றில் எதனையும் ஏற்றுக் கொள்வோம் ஏனென்றால் அவர்கள் எம்மை ஒவ்வொரு நாளும் கொல்கிறார்கள்."

சீன் மைக் அலிஸ்ரார் என்ற அந்தக் காணொளி நிருபர் கூறுகிறார், "அது (அடிக்கும் கருவி) பாரமும் பயங்கரமும் கொண்டது. அது எலும்புகளை நொருக்கிவிடும். அதனால் அடிவாங்கும் மனிதரின் அலறல் சத்தங்கள் நடுங்கவும் உதறல் கொள்ளவும் வைக்கும். முன்னர் ஒருபோதும் கேட்டிராத ஒலிகளை நீங்கள் கேட்பீர்கள். நான் இறந்த மனிதரைப் பார்த்தேன், சாகும் மனிதரைக் கண்டுள்ளேன். தலை துண்டிக்கப்பட்ட அந்தச் சத்தம் மனிதன் அழும் குரல் வெறுமனே தாங்க முடியாத ஒன்று. எதனோடும் ஒப்பிட முடியாத ஒன்று."

இவரைப் பற்றிய மேலதிக தகவல் இப்படிக் கூறுகிறது- பாக்தாத்தின் விடுதலை என்ற ஆவணப் படத்தைத் தயாரித்ததற்காக இவருக்கு 2005ல் சுண்டன்ஸ் (Sundance) திரைப்பட விழாவில் நடுவர் சிறப்பு விருது பெற்றார். ஈராக் போருக்கும் வினை விதைத்த வித்தகரும் இவர்தானோ? எமது கதையிலும் சனல் 4ன் வருகை திட்டமிட்ட ஒன்றா?



இல்லத்தரசிகளின் உள்ளங்கள் நாடும் மளிகை ஸ்தாபனம்

VS CO CASH & CARRY




197, rue du Fbg St· Denis
75010 Paris
France

Tel: 01 40 34 71 65
Fax: 01 53 26 72 04



we deliver a wide range of fruit, vegetable and grocery items, food items, non food items, dairy & frozen, soft drinks, see food items, fresh meat, sweet items, kitchen appliances, non kitchen items.



எமது வாடிக்கையாளர்களுக்கு இனிய தீபாவளி நல் வாழ்த்துக்கள்!

தினமும் தள்ளுபடி விலையில் தரமான பொருட்களைப் பெற்றுக்கொள்ள இன்றே நாடுங்கள்

VS CO CASH & CARRY



5%*

50ஈரோவிற்கு மேல் பொருட்களை வாங்கும் அகரம் வாசகர்களுக்கு 5%* சிறப்புத் தள்ளுபடியும் உண்டு! இந்தக் கூப்பனை வெட்டிக் கொடுக்கவும்.

*அரிசி / மது வகைகளுக்கு இக் கூப்பன் செல்லுபடியாகாது.



என்ன கொடுமை சரவணா...!

கல்லெறி வேலுப்பிள்ளை

வணக்கம் பாருங்கோ...! கார்த்திகை மாதமும் வந்திட்டுது, குளிரும் சேர்ந்து வந்திட்டுது....! என்ன செய்ய, ஐரோப்பாவின்ர காலநிலை அப்படி, அடிக்கடி மாறும். காலநிலை எப்படி வேணுமெண்டாலும் மாறலாம் பாருங்கோ, ஆனால் மனுசரின்ர மனங்கள் அப்படியே இருக்கவேண்டும். என்ன குழப்புறன் எண்டு யோசிக்கிறியளே...! எனக்கெண்டால் ஒரு குழப்பமும் இல்லைப் பாருங்கோ,, சரி விசயத்துக்கு வாறன்.

கார்த்திகை எண்டாலே தமிழருக்கு விசேசம் தான் பாருங்கோ. என்ன.. தீபாவளி எண்டு நினைக்கிறியளே..! அதுதான் இல்லை.தீபாவளி எண்டுறது அப்பட்டமான வடஇந்தியத் திருவிழா.. நரகாசுரன் எண்ட தமிழ் அரசனை, கொடுமைக்காரன் எண்டு பட்டம்சுமத்தி, அவனைக்கொலை செய்து போட்டு, தமிழரை வைச்சே அதைத்திருவிழாவாக் கொண்டாடவைச்சிட்டாங்கள். கொடுமை என்னவெண்டால், அதைத் தமிழரும் கோலாகலமாகக் கொண்டாடுறதுதான். சரி அதைவிடுவம். எங்களுக்குக் கார்த்திகை எண்டால் ஏன் விசேசம் எண்டு நான் சொல்லியே உங்களுக்குத் தெரியவேணும்??? தமிழீழ மண்ணுக்காக மடிந்த மாவீரர்களை நினைவிலேவைச்சு பூசிக்கிற நாள், இந்தக் கார்த்திகையில தான் வருகுது. இதை எப்படி அனுட்டிக்கிறது எண்டு, தேசியத் தலைமை வகுத்த கோட்பாடுகளின் படி, இவ்வளவுநாளும், தமிழீழத்திலையும், தமிழர்கள் பரந்துவாழுற வெளிநாடுகளிலையும் நடத்தின நாங்கள்......., இப்ப கொஞ்சப்பேர் செய்யுற திருகுதாளங்களினால தடுமாறிக்கொண்டு நிக்குறம்.

முள்ளிவாய்க்கால் மண்ணில நடந்த தமிழின அழிப்புக்குப் பிறகு, தமிழர்கள் கொஞ்சம் தடுமாறிப்போனது உண்மைதான் பாருங்கோ. ஆனாலும் தேசியத்தலைமை ஒழுங்கமைச்ச கட்டமைப்புக்களில எந்தக் குழப்பமும் வந்ததாகத் தெரியேல்லை. அவர் அவர், தங்கட தங்கட வேலையளைக் கவனிச்சுக்கொண்டு, வேற வேலையளுக்க மூக்கை நுழைக்காமல் இருந்தவரைக்கும் எல்லாம் ஒழுங்காத்தான் இருந்தது. அதுக்குப்பிறகுதான் தமிழருக்குச் சனியன் பிடிச்சது. வெளிநாடுகளுக்கெண்டு தேசியத்தலைவர் நியமிச்ச ஒருங்கிணைப்பு நிர்வாகிகளை, மாத்தவேணும் எண்டு ஆரம்பிச்ச குழப்பம், காசுக்கணக்குக் காட்டுறதில்லை எண்ட பொய்க்குற்றச்சாட்டுக்கள் வரைக்கும் நீண்டு போயிட்டுது. மக்களின்ர மனங்களைக் குழப்புறதுக்கு இதைவிட இலகுவான வழி வேற எங்கயும் இல்லைஎண்டுறது சிறிலங்கா அரசாங்கத்துக்கு நல்லாத்தெரியும் பாருங்கோ.. காசெண்டால் பிணமும் எழும்பும் எண்டுறது தெரியும்தானே. அப்படியே கான்சர் வருத்தம் மாதிரி ஆரம்பிச்ச குழப்பம், இப்ப மாவீரர்நாளை குழப்புறது வரைக்கும் வந்திட்டுது.

புலம்பெயர்ந்து வாழுற எங்கட தமிழ்மக்களுக்கு எந்தக்குழப்பமும் இல்லைப்பாருங்கோ. ஆனால் கொஞ்சம் மனத்தில சஞ்சலங்கள் இருக்கத்தான் செய்யும் எண்டுறது ஆக்களின்ர கதையளைப் பார்க்கேக்க நல்லா விளங்குது. எங்கட தமிழ் உறவுகள் ஒருவிசயத்தை யோசிக்கவேணும்.இதுவரை காலமும் மாவீரர்நாளை நடத்துறது சம்பந்தமாய் ஏதாவது குழப்பம் வந்ததோ....? அல்லது மாவீரர்நாள் நடத்துறதுக்கெண்டு ரெண்டு குழுக்கள் உருவாகினதோ எண்டால்....... கிடையாது எண்டுதான் பதில்வரும். அப்படி ரெண்டு உருவாகாமல் காத்தது எங்கட தேசியத்தலைமை. இதுவரைக்கும் அவரவர், தங்கட வேலையளை மட்டும் கவனிச்சுக்கொண்டிருந்ததால எந்தக்குழப்பமும் வரேல்லை. ஆனால் இப்ப கொஞ்சப்பேர், அண்ணை இருந்த திண்ணை தங்களுக்குத்தான் சொந்தம் எண்டு எல்லாத்தையும் குழப்பிக்கொண்டு நிக்கினம் எண்டால், மக்கள் குழம்பக்கூடாது பாருங்கோ. இப்படியான குழப்பம் எல்லாம் ஏற்கனவே நடந்ததுதான். குழப்பத்தோட குழப்பமாய், இதுவரை காலமும் பொறுமையாய் இருந்த கிளைதாவுற குரங்குகளும் சேர்ந்துகொண்டு அடிக்கிற கூத்துத் தாங்கமுடியுதில்லைச் சாமி. இதுவரைக்கும் எல்லாத்தையும் ஒழுங்காய் நடத்தின ஒருங்கிணைப்புக்குழுக்கள் மேல குற்றம் சுமத்திக்கொண்டும், புதுசா ஒரு இடத்துல மாவீரர் நாள் நடத்துறம் எண்டும் திரியுற, புதுசா முளைச்ச ஆக்களிட்ட திடீரெண்டு புதுசா ஒரு மாவீரர் நாள் நடத்துற அளவுக்கு உங்களிட்ட எங்கால இவ்வளவு காசு எண்டு மக்கள் எல்லாருமாய் திருப்பி ஒரு போடு

போட்டால், பிடரில குதிக்கால் முட்ட ஓடுகினமோ இல்லையோ எண்டு பாருங்கோவன்.

உதைவிடவும் ஒரு விசயம் சொல்லுறன் கேளுங்கோவன் இவ்வளவு நாளும் நடந்த மாவீரர் நாள் நிகழ்வுகள், வெறும் விற்பனைக்காக மாத்திரமே நடத்தினதெண்டு புதுசா ஒரு கதையையும் அவிட்டு விட்டிருக்கினம் உந்த வெடிவால்குருவியள். சரி, எங்கட சனத்துக்கெண்டு வித்தது சாப்பாடும், கலண்டரும், மேலதிகமான தமிழீழ வெளியீடுகளும் தானப்பு. சாப்பாட்டைச் சும்மா விக்க, அரிசி என்ன ஆத்திலையே வருகுது..! சரி, வெளியீடுகளைச் சும்மா குடுக்குறதெண்டால், படைப்பு, உருவாக்கச் செலவுகளை குஞ்சியப்பரே கட்டுறது?? ஒண்டுமா விளங்கேல்லையப்பு உங்கட கோதாரி...! உங்களுக்குப் பிரச்சனை காசுதான் எண்டால், நல்லா கோயிலாப் பாத்துக் குந்துங்கோ ஐயா...! தயவு கூர்ந்து, தமிழீழ விடுதலையை வித்துக் காசாக்கப் பாக்காதேங்கோ...!

இந்தமுறை நானே பாடுறன்,

நடந்துவந்த பாதை தன்னை
திரும்பிப் பாரடா - நீ
நாசவேலை செய்தபின்பு வருந்துவாயடா அழிந்த
ஈழ மக்கள் சாபம் நெருப்புத் தானடா - உனை
ஆட்டுகின்ற சக்தியோடு எரிக்கும் தானடா

அப்ப வரட்டே...!

மனம் திறந்து பேசுகின்றார்

மனோ தத்துவ நிபுணர் Dr.மார்க்!

கடந்த இதழின் தொடர்ச்சி...

கேள்வி: பல சமூக நிறுவனங்கள் தொழில் நிறுவனங்கள், வியாபாரஸ்தலங்கள், இவற்றில் பணியாற்றும் சமூக சேவையாளர்கள், தொழிலதிபர்கள் அவர்களது நிறுவனங்கள் அழிந்து போகாமல் உங்கள் ஆலோசனையின் மூலம் புத்துணர்ச்சி பெற்று அதன் மூலம் வெற்றி பெற்றுள்ளனர். இதைப் பற்றி விளக்கம் தாருங்கள்.

பதில்: சமூக நிறுவனங்கள், தொழில்நிலையங்கள் என்பன சமூகத்தில் ஒரு முக்கிய பங்கு வகிக்கின்றன. அதே போன்று வியாபாரஸ்தலங்கள் சமூகத்தில் உரம் ஊட்டிகள் ஆகும். எனவே இவை சரியான முறையில் இயக்க வேண்டும். அப்படி சரியான முறையில் இயங்காவிடில் சமூகத்தில் பெரும் பாதிப்பை ஏற்படுத்திவிடும். சமூக நிலையில் இயங்க இரண்டு விதமான ஆலோசனைத் திட்டங்கள் நடை முறைப்படுத்த வேண்டும்.

ஒன்று ஒரு நிறுவனத்தினதோ, வியாபார ஸ்தலத்தினதோ கூட்டுக் கட்டமைப்புச் சட்ட முறைகள்.

இரண்டாவது அதில் பங்கேற்கும் நபர்களின் கூட்டமைப்புத் திட்டம்.சிறந்த ஒரு அத்திவாரத்தில் சரியான ஒரு முறையில் திட்டமிட்டு சரியான கட்டமைப்புக்குள் ஆரம்பிக்கப் பட வேண்டும்.
இது நிறுவனத்துக்கு மிகவும் முக்கியமாகும். இத்திட்டமிடல் பலவருடங்களுக்குரியதான எதிர்காலத் திட்டமிடலாக இருக்க வேண்டும். அது மட்டுமல்லாமல் நடைமுறைக்குச் சாத்தியமானதாகவும் மேலும் நவீன மாற்றங்களுக்கு ஈடு கொடுக்கக் கூடியதாகவும் இருக்க வேண்டும். இந்த ஆரம்பத் திட்டமிடல் பல கோணங்களிலும் ஆராய்ந்து, இதற்குரிய விபரங்களைத் திரட்டி பல ஆலோசனைகளை அறிந்து ஆராய்தல் சாலச் சிறந்தது. நன்கு திட்டமிட்டு ஒரு சமூக நிறுவனத்தை அல்லது தொழில் நிறுவனத்தை ஆரம்பித்தால் நீண்ட நாட்களுக்குப் பிரயோசனமானதாக இருக்கும். இப்படியான கட்டமைப்புகள் நிலையானவையாக அமைய சரியான முறையில் ஆராய்ந்து சரியான நோக்கத்துடன் ஆரம்பிக்க வேண்டும்.

இந்த சமூக நல நிறுவனங்களில் பங்கேற்போர் தத்தமது கடமைகளை பொறுப்புணர்வுடன் தாமே செய்து கொள்ளும் பக்குவத்தைப் பெறுவதற்கான பயிற்சியை பெற்றுக்கொள்வது அவசியமானதாகும். ஒவ்வொரு வியாபார நிறுவனங்கள், சமூக நல நிறுவனங்களும் தத்தமக்கென்று தனித் தனிக் கொள்கைகளை வகுத்திருக்கும். இதில் பங்கேற்கும் சமூக ஆர்வலர்கள் இவ் அமைப்புக்களின் நோக்கங்கள், கட்டுப்பாடுகள் போன்றவற்றுக்கு மதிப்பளித்து அவற்றின் வளர்ச்சி, பயன்பாடு போன்றவற்றுக்கு உறுதுணையாக இருக்க வேண்டும். உழைக்க வேண்டும்.

இன்னும் பிரச்சினைகள் ஏற்படும் போதும் கலந்தாலோசித்து அவற்றுக்கான காரண காரியங்களை அறிந்து, தீர்வை உடனடியாக மேற்கொள்வதே சாலச் சிறந்தது. அங்கு வேலை செய்வோர், உரிமையாளர், பொறுப்பாளர்களுடன் பரஸ்பர உறவை மேற்கொள்வதும் அவசியம். குறைந்தது மாதத்திற்கு ஒரு முறையாவது ஒன்று கூடி நிலைமைகளை ஆராய்ந்து தீர்வு காண்பது நல்ல வளர்ச்சிக்கு வழி வகுப்பதாகும்.
சமூக மற்றும் தொழில் நிறுவனங்களில் பணி புரிவோர், உரிமையாளர், பொறுப்பாளர்களுடன் இணைந்து பணியாற்றுவது, நம்பிக்கைக்குரியவர்களாக இருப்பது, அவர்களுக்கான மதிப்பளிப்பது தவறுகள் ஏற்படினும் பெருந்தன்மையுடன் ஏற்றுக்கொள்வது என்பதும் அவசியமானது. தொடரும்...

விடுதலைப்புலிகளும் விடுதலை மீதான பற்றுறுதியும்!



அறிவழகன்


தமிழீழம் என்ற ஒருசொல் எப்போது வரையறுக்கப்பட்டதோ அன்றிலிருந்து அது தமிழர்களுக்கான ஒரு தாயகத்தின் பெயர் என்பது எல்லோர் மனங்களிலும் இறுக்கமாக அறையப்பட்டுவிட்டது. ஆரம்பத்தில் தமிழீழவிடுதலை என்ற பதாதையைத் தாங்கிப்பிடித்தபடி போராடப்புறப்பட்ட எத்தனையோ அமைப்புக்கள் பாதைமாறியும் பகட்டுக்களுக்காகவும் விலைபோயின. இறுதியில் அவர்கள் எதற்காகப் போராடுகிறோம் என்பதை மறந்து பேரினவாதிகளோடு கூடிக்குலாவியதையும் கும்மியடித்ததையும் தமிழீழம் என்ற ஒரே குடையின்கீழ் உறுதிதளராது நின்ற மக்கள் ஒருபோதும் மறக்கமாட்டார்கள். பாய்ந்தோடும் அருவியில் அள்ளுண்ட கற்களாக அவர்கள் திசைமாறிச்செல்ல இறுதியில் "தமிழீழ விடுதலைப் புலிகள்" என்ற அமைப்பும் அதன் தலைமையும் தமிழீழம் என்ற இலட்சிய வேட்கையோடும் நாட்டுக்காக எதையும் அர்ப்பணிக்கத்தயாராக இருக்கும் மிகவுயர்ந்த மனவுறுதியோடும் விடுதலைப்பாதையில் வீறுநடைபோடத்தொடங்கினார்கள்.

சிறிலங்காவில் இருதேசம் இருபடை என சர்வதேசப் போரியல் வல்லுனர்களாலும் அரசியல் ஆய்வாளர்களாலும் வியந்து எழுதப்படும் நிலைக்கு விடுதலைப்புலிகள் என்ற அமைப்பு விரைவாக வளர்ச்சி பெற்றது. அதன் இறுக்கமான கட்டுப்பாடுகளும் நாகரீகப் பண்புகளும் தமிழ்மக்களை மட்டுமன்றி உலக மக்களையும் வெகுவாகக் கவர்ந்தது. ஒரு கொரில்லாப்போர்முறையுடன் தமது போராட்டத்தை ஆரம்பித்த விடுதலைப்புலிகள் அவர்களது தலைமையின் நெறிபிறழாத வழிநடத்தலின் காரணமாக மரபுவழிப் படையணியாக மாற்றம் பெற்றனர். இழப்புக்களையும் ஏமாற்றங்களையும் தமது வெற்றியின் படிக்கட்டுக்களாக மாற்றி உலக அரசியலுக்கு ஏற்றவாறு தமது அரசியல் படிநிலையிலும் மாற்றம் செய்து தாம் அரசியல் பேசுவதிலும் வல்லவர்கள் என்பதை ஒவ்வொரு பேச்சுவார்த்தை மேடையிலும் அவர்கள் நிரூபித்தனர். சிறிலங்கா என்ற தேசத்தில் வாழும் ஒரு சிறுபான்மை இனம் நினைத்துப்பார்க்க முடியாத அளவிற்கு ஒரு பாரிய இராணுவக்கட்டமைப்போடு போராடிக்கொண்டிருந்ததை உலகம் வியப்போடு நோக்கத்துவங்கியது. சமவேளையில் தமிழ் மக்களுக்கெதிராகத் தனது இனஅழிப்பைக் கட்டவிழ்த்து விட்டிருந்த சிறிலங்கா அரசு விடுதலைப்புலிகள் அமைப்பைப் பயங்கரவாத அமைப்பாகச் சித்தரித்து உலகம் முழுவதும் தனது பிரச்சாரப் போரை ஆரம்பித்திருந்தது.

படிப்படியாக விடுதலைப்புலிகளின் படையணிகள் சிறிலங்காவின் அரச படையணிகளைப்போல வளர்ச்சி கண்டன.

மேலும் பலம்வாய்ந்த ஒரு கடற்படையுடன் விமானப்படையையும் விடுதலைப்புலிகள் கொண்டிருந்தமை சிறிலங்காவை மட்டுமல்ல அண்டை நாடான இந்தியாவையும் மிகவும் பாதித்திருந்தது. இந்தியாவின் ஒரு சிறிய கூறான தமிழ்நாட்டில் வாழும் தமிழர்கள் விடுதலைப்புலிகளையும் அதன் தலைமையையும் உறவுகொண்டாடியமை இந்திய அரசிற்குப் பெரும் தலைவலியை உண்டாக்கியிருந்தது. விடுதலைப்புலிகள் இந்தியாவின் பரமவிரோதிகள் என்ற வகையிலேயே சிறிலங்கா அரசின் பரப்புரைகள் அமைந்திருந்தன. ஆக விடுதலைப்புலிகளை வென்றெடுப்பதற்காக சிறிலங்கா என்ற நாடு தன் அயல்நாடுகள் யாவற்றையும் மூளைச்சலவை செய்து அவர்களிடமிருந்து பல்வேறு விதமான போரியல் வளங்களைப் பிச்சையெடுக்கத் துவங்கியிருந்தது.

தமிழ்மக்களுக்கு ஒரு நிரந்தரத்தீர்வைத் தராது அவர்களைத் தமது அடிமைகளாகவும் இரண்டாந்தரப் பிரஜைகளாகவும் நடாத்தவேண்டுமாயின் விடுதலைப்புலிகளைக் கட்டுப்படுத்துவதன் மூலமே அது சாத்தியம் என்பதை சிறிலங்காப் பேரினவாத அரசாங்கம் நன்குணர்ந்திருந்தது.சர்வதேச ரீதியில் விடுதலைப்புலிகளின் செயற்பாடுகளுக்குப் பயங்கரவாத முலாம் பூசி அவர்களது நியாயமான போராட்டத்தைக் கொச்சைப்படுத்தி வெளிநாடுகளிடமிருந்து போர்க்கலப் பொருட்களைப்பெற்று அதன்மூலமாகத் தமிழர்களை அடக்குவதே சிங்களஅரசின் நீண்டகாலத் திட்டமாக இருந்துவந்தது. இந்தியாவிற்கும் அப்படி ஒருஆசை உள்மனதில் இருந்தபோதிலும் தமிழ்நாட்டுத் தமிழர்களின் எதிர்ப்பைச் சம்பாதிக்கவேண்டி ஏற்படலாம் என்ற காரணத்தினாலும் துவேஷம் கொண்ட ஒரு சிங்களத் தலைவருக்கான காத்திருப்பினாலும் அது மௌனமாகவே இருந்துவந்தது. அதற்கு ஏற்றவாறு மகிந்தா என்ற துவேசம் கொண்ட சிங்களப்பேரினவாதி சிறிலங்காவின் ஜனாதிபதியாக்கப்பட கருணாநிதி என்ற கைக்கூலி தமிழக முதலமைச்சராக்கப்பட்டான். ஏனெனில் சிறிலங்காவில் தமிழர்கள் மீதான போர் ஆரம்பிக்கப்படும்போது அது தமிழகத்திலும் சர்வதேசரீதியிலும் பாரிய கண்டனங்களைக் கொண்டுவரும் என்பது மகிந்தவிற்கும் இந்தியாவிற்கும் நன்கு தெரிந்த விடயம். இவற்றைக் கையாளுவதற்கு கருணாநிதி என்ற நடிகன் சகல ஆயத்தங்களோடும் மேடையேற்றப்பட்டான். திட்டமிட்டபடி தமிழின அழிப்புபோர் ஆரம்பித்தது.



என் வாழ்க்கையில் விரக்தி ஏற்பட்ட கணம் என்று எந்த ஒன்றையும் குறித்துச் சொல்லமுடியாது. இலட்சிய நோக்குக் கொண்டவர்கள் என்று நான் நினைத்து நம்பிய சில நண்பர்கள் சுயநலச் சந்தர்ப்பவாதிகளாக மாறியபோது, நான் மிகுந்த கவலைக்குள்ளானதுண்டு.

தமிழீழத் தேசியத் தலைவர்
மேதகு வே. பிரபாகரன்.

தமிழினத்தின் விடுதலைக்காக எதையும் தியாகம் செய்யத்தயாராக இருந்த தமிழீழ விடுதலைப்புலிகளும் அதன் தலைமையும் நிலம்விழுங்க வந்தவர்களை எதிர்த்துப் போரிட ஆரம்பித்தனர். தமது சொந்தவளங்களையும் புலம்பெயர்ந்த உறவுகளின் கரங்களையும் நம்பி ஆரம்பித்த விடுதலைப்போர் எதிரிகளை ஆயிரக்கணக்கில் வீழ்த்தத்துவங்கியது. அவனது வளங்களுக்குப் பெரும் சேதங்கள் விளைவிக்கப்பட்டன.ஆனாலும் பல்வேறு நாடுகளிடமிருந்து பெற்ற பிச்சையோடும் அதிகரிக்கப்பட்ட ஆட்பலத்தோடும் பேரினவாதம் கொஞ்சம் கொஞ்சமாக எமது நிலத்தை விழுங்கத்தொடங்கியது. புலம்பெயர் வாழ் தமிழ்மக்கள் விடுதலைப்புலிகளின் கடந்தகால இராணுவ வெற்றிகளில் கொண்டிருந்த அளவுகடந்த நம்பிக்கை காரணமாகவும் எதையும் அவர்களால் சாதிக்க முடியுமென்ற மாயையில் வாழ்ந்துகொண்டிருந்த காரணத்தினாலும் தமிழீழ விடுதலையைத் தேடித்தரும் அரசியல் செயற்பாடுகளில் அதிக நாட்டம் கொண்டிருக்கவில்லை என்பது காலம் கடந்த உண்மையாகும். தவிர இந்த இன அழிப்புப்போரின் பின்புலத்தில் இந்தியா சீனா உள்ளிட்ட பல நாடுகள் சிறிலங்காவிற்கு உந்துசக்தியாக இருந்ததையும் தமிழ்மக்கள் அப்போது உணர்ந்துகொள்ளவில்லை. மாவிலாற்றில் ஆரம்பித்த இனஅழிப்புப் போர் மன்னாருக்கு இடம்மாறிப் பின் மணலாறு வரை நீண்டபோது தான் சிறிலங்காவின் பேரினவாதம் ஒரு முடிவோடுதான் இப்போரை ஆரம்பித்திருக்கிறது என்பதைத் தமிழ்மக்கள் உணர்ந்துகொண்டனர். ஆனால் அது கண்கெட்ட பின் சூரிய நமஸ்காரம் எனவாகியிருந்தது. ஏனெனில் இடம்பெயர்ந்து அல்லலுறும் எமது மக்களைக் காப்பதே அன்றைய அவசியப் பணியாக இருந்தது. நிர்க்கதியாக இருந்த எமது உறவுகளைக் காப்பாற்றுமாறு எத்தனையோ கோரிக்கைகள் விடப்பட்டும் இந்தியாவின் கைக்குள் இருந்த சிறிலங்காவிற்கு அவை எதுவும் காதில் விழவில்லை. மாறாக எமது கோரிக்கைகள் யாவும் விடுதலைப்புலிகளைக் காப்பாற்றும் கோரிக்கைக்கணைகளாகவே சிறிலங்காவிற்கும் இந்தியாவிற்கும் தென்பட்டன. எப்படியாவது தமிழினத்தை முற்றுமுழுதாக வேரறுக்க நினைத்த சிறிலங்காஅரசு மக்களை விடுதலைப் புலிகள் கேடயங்களாகப் பாவிப்பதாகக் கூறி மேலும் மேலும் தமிழின அழிப்பைத் தீவிரப்படுத்தியது. ஆனால் தமிழீழ விடுதலைப் புலிகள் இதுவரைகால யுத்தவரலாற்றில் மக்களை மனிதக்கேடயங்களாக்கி அதன்மூலம் தம்மைக் காப்பாற்றுமாறு எவரிடமும் கோரிக்கை விடுத்ததில்லை என்பது உலகமக்கள் அனைவரும் அறிந்தவிடயமாகும்.

முடிவில் காயமடைந்து மருத்துவ வசதியின்றித் துடிப்பவர்களை மட்டுமாகிலும் வெளியேற்றுமாறு கோரிக்கைவிடப்பட்டும் எவ்வித பலனும் கிடைக்கவில்லை. தாம் தமது மக்களை ஆழமாக நேசிப்பவர்கள் என்பதை விடுதலைப்புலிகள் மீண்டுமொருமுறை நிரூபித்தனர். ஏனெனில் எந்த மக்களைக்காக்க அவர்கள் புறப்பட்டார்களோ அந்த மக்கள் பாதுகாப்பாக வெளியேற்றப்படவேண்டும் என்பதில் அவர்கள் உறுதியாயிருந்தார்கள். மக்கள் வெளியேற்றப்பட இறுதிவரை தலைவணங்காது நின்ற அந்த வீரமறவர்கள் தமது தாய்மண்ணை முத்தமிட்டபடி வீழ்ந்து விதையானார்கள்.

இங்குதான் ஆரம்பித்தன கோழைகளின் கொக்கரிப்புக்கள். தலைக்கனம் கொண்டவர்களின் கதை முடிந்ததென்றும் பாசிசவாதிகளுக்கு தாம் பாடை கட்டிவிட்டதாகவும் உலகம் பூராகவும் தொடர்கதைகள் கட்டிவிடப்பட்டன. சில தொலைக்காட்சிகள் இணையத்தளங்கள் ஆகியனவும் இதில் முன்னின்று செயற்பட்டன. நாட்டுக்காகப் போராடப் புறப்பட்டவர்கள் வெற்றியோ தோல்வியோ இறுதிவரை போரிட்டுமடிவார்கள் என்பது இந்த மாங்காய் மடையர்களுக்கு சிறிதும் புரிந்திருக்கவில்லை. இவர்களைபோல் போரிற்குப் பயந்து புலம்பெயர்ந்து ஓடியவர்கள் அல்ல விடுதலைப்புலிகள். எந்த மக்களின் விடுதலையை விரும்பினார்களோ அந்த மக்களுடனேயே இறுதிவரை புலிகள் நின்றார்கள். தாம் மடிந்தாலும் இனிவரும் சந்ததியால் இப்போராட்டத்தைத் தொடர்ந்து முன்னெடுக்க முடியும் என்ற திடமான நம்பிக்கை விடுதலைப்புலிகளுக்கும் அதன் தலைமைக்கும் இருந்துவந்தது. அற்ப சலுகைகளுக்காக எதிரியுடன் கைகோர்த்து நின்று அவன் வீசும் எச்சில் சோற்றை உண்டுவரும் சந்தர்ப்பவாதிகள் சிலரும் புலம்பெயர்ந்து வந்து தாயக விடுதலைக்கெதிராகச் செயற்பட்ட புல்லுருவிகள் சிலரும் எமது மண் எதிரியிடம் வீழ்ந்ததை பெரும்விழாவாகக் கொண்டாடியதை தமிழீழமக்கள் ஒருபோதும் மறக்கப்போவதில்லை. மேலாக விடுதலைப்புலிகள் என்ற தமிழர்களின் பிரதிநிதிகளைப் போல் தாம் செயற்பட முடியவில்லையே என்ற ஆதங்கமும் தற்போது விடுதலைப்புலிகளின் ஆதிக்கம் சற்று விலகியிருப்பதால் தாம் அந்த இடத்தைப் பிடிப்பதற்கு முயற்சிசெய்தும் சற்றும் அவ்விடத்தை எட்டமுடியாதென்ற உண்மை நிலையை அறிந்துகொண்டமையும் இவர்களின் மனக்கிலேசத்திற்கு ஒரு காரணமாக

இருக்கலாம். இந்நிலையில் இவர்களின் இப்போதைய செயற்பாடுகள் யாவுமே தமிழீழமக்களின் மனோபலத்தைச் சிதைப்பதையே முக்கிய குறிக்கோளாகக் கொண்டவை.

தேசியத்தலைவர் உயிருடன் இருக்கிறாரா அல்லது இல்லையா என்பது பற்றிய ஆய்வுகளும் எமது ஈழவிடுதலைப்போராட்டம் இத்துடன் முடிவுற்றதாகவும் இந்தத்தேசத்துரோகிகள் மார்தட்டிக்கொள்வதற்கான காரணத்தைத் தமிழ்மக்கள் நன்குபுரிந்துகொள்ளவேண்டும். அணிதிரண்ட ஒரு பெரும் மக்கள் சக்தியுடன் தேசியத்தலைவர் அவர்கள் எமது போராட்டத்தை வழிநடத்தியவிதம் எமது மக்கள் யாவரும் நன்கறிந்த விடயம். அந்த இறுக்கமான கட்டுமானத்தை உடைப்பதற்கும் அந்த இடத்தைத் தாம் பற்றிக்கொள்வதற்குமான ஒரு பதவியாசையுமே இந்தத் துரோக ஓநாய்க்கூட்டம் இப்போது ஊளையிடத்தொடங்கியிருப்பதற்கான காரணங்கள். ஆனால் இவர்களது ஊளை தமிழ்மக்களுக்கு ஏற்கனவே சலித்துப்போன ஒன்று. முட்கம்பி வேலிகளுக்குள் அல்லலுறும் உறவுகளை ஓடிச்சென்று பார்வையிட்டு அரைக்கிலோ மாவும் ஆறேழு விசுக்கோத்துப்பெட்டிகளும் கொடுத்துவிட்டு அழகாக நின்று புகைப்படம் எடுக்கும் இந்தியஅரசியல் மட்டுமே இந்த ஓநாய்களுக்கு லாயக்கு. எதிரியின் குண்டுமழைக்குள் குளித்தபடி நின்று இவ்வளவு காலமும் எமது மக்களைக்காத்த அந்தப் புலிமறவர்கள் செய்த தியாகங்கள் எங்கே ? எதிரி வீசும் எலும்புகளைப் பொறுக்கும் இந்த ஓநாய்கள் எங்கே ? சற்றுக்கூட இவர்கள் தமிழீழம் என்ற சொல்லுக்கு உதவியதில்லை. இனி உதவப்போவதுமில்லை. அதை எமது தமிழீழமக்கள் உணர்ந்து கொண்டால் அதுவே அந்த வீரமறவர்களுக்கு நாம் செய்யும் அகவணக்கமாக அமையும்.

இன்று விடுதலைத்துப்பாக்கிகள் மௌனமாக இருப்பது ஒரு சில மீளமைப்புக்களுக்காகவே..! துப்பாக்கிகள் தூங்குகின்றனவே ஒழிய அவற்றைதாங்கியிருக்கும் உள்ளங்கள் உறங்கவில்லை. தலைவனை நேசிக்கும் தமிழர் விடுதலையை நேசிக்கும் எந்த ஒரு தன்மானமுள்ள தமிழனின் மனமும் இனி விடுதலையை வென்றெடுக்கும்வரை ஒருபோதும் தூங்காது என்பதே யதார்த்தம். காய்த்த மரங்களுக்குத்தான் கல்லடி விழுமென்பார்கள். எத்தனையோ காய்க்காத மரங்களுக்கு நடுவில் தனித்த மரமாகக் காய்த்துநின்று எத்தனையோ கல்லடிகளைத் தாங்கித்தாங்கியே உறுதிபூத்தவர்கள் தமிழீழ விடுதலைப்புலிகள். அற்பமான ஓநாய்களின் ஊளை அவர்களை எதுவும் செய்துவிடப்போவதில்லை.

எமது தேசியத் தலைவர் கூறியதைப்போல எமது விடுதலையை தங்கத்தட்டில் வைத்து எமக்கு யாரும் பரிசாகத்தரப்போவதில்லை. கல்லும் முள்ளும் கடந்து குருதி தோய்ந்த நிலங்கள் கடந்து உயிர்த்தியாகம் செய்து பெறப்படுவதே விடுதலை. மேலாக முப்பதாயிரம் மாவீரர்களின் உயிர்த்தியாகமும் சாதாரணமாக எடைபோடக்கூடிய ஒருவிடயமல்ல. ஒவ்வொரு வீரனும் வீழ்ந்து விதையாகும்போது தனது அழகான தமிழீழக் கனவுடன் தான் விதையாகியிருப்பான். அந்த ஆத்மாக்கள் அவலப்பட்டு உயிர்விடவில்லை. விடுதலைக்கான பணியை வெற்றிகரமாகச் செய்து முடித்த பெரும் மனநிறைவுடனேயே அவர்கள் வீரச்சாவடைந்தார்கள். எனவே அவர்கள் பணியைத்தொடர்வதன்றி வேறேதும் எம் நெஞ்சில் நினையாதிருக்க நாம் அனைவரும் உறுதிபேணுவோமாக.







சமாதான நோபல்பரிசு...

வ. சிவராசா
(டியூஸ்பேர்க் - ஜேர்மனி)

இந்த ஆண்டின் உலக சமாதான நோபல் பரிசு ஆபிரிக்கா கண்டத்தின் லைபீரியா நாட்டின் அதிபரும் ஆபிரிக்காக் கண்டத்தின் முதல் பெண் அரசியல் தலைவியுமாக விளங்கும் எலன்-ஜான்ஸன், அதே நாட்டைச்சேர்ந்த பெண்ணுரிமைவாதியும், மனித உரிமை வாதியாக நீண்டகாலம் அமைதிக்காகப் போராடிவருபவருமான லேமா-போவீ மற்றும் தற்போது உள்நாட்டுக் கலவரம் நடந்துகொண்டிருக்கும் மத்திய கிழக்கு யெமன் நாட்டில் அமைதிக்காகப் போராடி வருபவரும் பெண்ணுரிமை மற்றும் மனிதஉரிமை வாதியும் பத்திரிகையாளருமான கார்மன்-ரவகுல் என்பவருக்கும் வழங்கப்பட்டிருப்பது வரவேற்கத்தக்கதும் பாராட்டுதலுக்குரியதுமாகும்.

உலகின் சமகாலத்தில் பெண்களின் முன்னேற்றத்திற்கு இந்த நோபல் பரிசு உந்து சக்தியாகவும் வழிகாட்டலாக அமையும் என நம்பலாம். உலகின் நேர காலம் நிலமையைக் கருத்திற்கொண்டு இவர்களுக்குச் சமாதான நோபல் பரிசு கிடைத்திருப்பது உண்மையிலேயே நோபல் குழுவைப் பாராட்டலாம். உலகெங்கும் பெண்ணுரிமைக்காகப் போராடும் ஆண்கள் பெண்கள் அமைப்புகள் வரவேற்றிருப்பதுடன் எதிர்காலத்தில் பெண்களின் உரிமைகள் படிப்படியாக முன்னேற்றம் காணும் எனவும் நம்பிக்கைகொண்டிருக்கிறார்கள்.

இந்த மூவரும் பெண்நிலைவாதிகள், மனிதஉரிமைவாதிகள்..இவர்களுக்கு நோபல் பரிசு கிடைத்ததால் உலகில் அடக்கி ஒடுக்கப்படும் பெண்களின் பிரச்சினைகள் தீர்ந்துவிடும் என நம்பமுடியுமா? இன்று உலகிலே பெண்கொடுமைகள் மிகக்கூடிய நாடுகளாக ஆப்கானிஸ்தான், பாக்கிஸ்தான், கொங்கோ, இந்திய, வங்காளதேச நாடுகள் முன்னணியில் நிற்கின்றன. இந்த நாடுகள் மட்டுமல்ல, உலகின் வறிய பல நாடுகளிலும் உள்நாட்டுப் போர் யுத்தம் நடைபெறும் நாடுகளிலும் பெண்களின் உரிமைகள் மறுக்கப்படுவதும் அடக்கி ஒடுக்கப்படுவதும் சர்வசாதாரணமாக நடந்துகொண்டுதான் இருக்கின்றன. போர், யுத்தம் நடைபெறும் நாடுகளில் பெண்களைப் பாலியல் வல்லுறவுக்குட்படுத்தி படையினர் ஒரு ஆயுதமாகவும் பயன்படுத்துகின்றனர்.

இதைவிட மதம், கலாச்சாரம், மரபு, பண்பாடு எனக்கூறி துன்புறுத்தல்களும் கொலைகளும் நடக்கின்றன. மேலும் சுகாதாரச் சீர்கேடுகள், பாலியல் வன்முறைகள், கடத்தல் மற்றும் தெருவோரச் சிறார்களை பாலியல் தொழிலில் ஈடுபடுத்துதல் போன்றவை உலகில் நடந்தவண்ணமே இருக்கின்றன. இந்தியா போன்ற நாடுகளில் சீதனக்கொடுமை, கொத்தடிமை, மத இனக்கொடுமைகளால் வருடாந்தம் பல்லாயிரம் பெண்கள் அமிலம் வீசி, எண்ணெய் ஊற்றி கொழுத்தப்படுவதுடன் சிசுக்கொலைகளும் பல இலட்சமாகப் பெருகிவருகின்றன.

ஏன் நமது தேசத்திலும் இராணுவ அடக்கு முறைகளாலும், துணைக்குழுக்களின் தான்-தோன்றித்தனமான செயற்பாடுகளாலும் எத்தனை ஆயிரம் பெண்கள் மாண்டுமடிந்தனர். இப்போதும்கூடத் தமிழ்ப்பிரதேசங்களில் மாலை ஆறு மணிக்குப்பின் பெண்கள் வீதிகளில் நடமாடமுடியுமா! இப்படியே உலகில் பெண்களுக்கு இளைக்கப்படும் கொடுமைகளையும் அநீதிகளையும் அடுக்கிக்கொண்டே போகலாம்... அதற்கு முன்பாக...

புலம்பெயர் தேசங்களில் வளர்ந்த, நாகரீக, கணிணி, விஞ்ஞான தேசங்களில் வாழ்ந்துகொண்டிருக்கும் நம்குலப் பெண்களுக்கு உரிமையான, சரிசமமாக வாழ்வு கிடைக்கின்றனவா...இல்லவே இல்லை... வீடுகளிலும் குடும்பங்களிலும் நம் சமூகத்திலும் இன்றும் எத்தனையோ ஏற்றத்தாழ்வுகள். ஆணுக்கொரு நீதி... பெண்ணுக்கு ஒரு நீதி. சாதி, சமயம், இனம், ஊர், பிரதேசம் என இன்றும் பிரிந்துதான் வாழ்கிறோம். இவற்றை நம் சந்ததிகளுக்கும் சொல்லிக்கொடுத்து அவர்களின் வாழ்வையும் பாழாக்குகின்றோம். இவை மட்டுமா குடும்பத்தில் அப்பா, அம்மா, தம்பி, தங்கை என ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு நீதி. 90 வீதமான தமிழர் குடும்பங்களில் பெண்களின் உரிமைகள் மறுக்கப்படுவதுடன், அவர்களின் சிந்தனை, ஆற்றல், முயற்சி, விருப்பங்களுக்கு இடம்கொடுக்கப்படாமல் இன்றும் பழைய பல்லவிகளைச் சொல்லியே பெண் அடிமைத்தனத்தை வளர்த்துவருகின்றோம். இது எவ்வளவு அநீதி என்பதனை நாம் சிந்திக்கிறோமா!...

ஆகவே இன்றைய உலகநோக்கில் அதன் போக்கில் பெண்கள்மீதான மேலாதிக்கம், அடக்குமுறைகள் குறைந்தபாடேயில்லை. இந்த மூன்று பெண்மணிகளுக்கும் நோபல்பரிசு கிடைத்தமையைப் பாராட்டி மகிழ்வதோடு, இலக்கியம் படைப்பதோடு, கவி கட்டுரை வடிப்பதோடு முடிந்துவிடக்கூடாது. நம் வீட்டிலும், நம் சமூகத்திலும் பெண்களை மதிக்கவேண்டும். அவர்களின் சிந்தனை, விருப்பம், ஆக்கத்திறன், ஆலோசனைகளுக்கு மதிப்பளிக்கவேண்டும். சந்தர்ப்பம் கொடுக்கவேண்டும். பெண்களின் உரிமைகள் பாதுகாப்பதில் பெண்கள் மட்டுமல்ல ஆண்களும் கைகோர்த்து முன்னெடுப்புகளை மேற்கொள்ளும்போதே ஆண்-பெண் சமத்துவம் நிலவ வாய்ப்பு ஏற்படும் என்பதே உண்மையான விடையமாகும்!.....






பிரித்தானியாவில் அறுவை முறையில் மகப்பேறா?

ஒரு சில செய்திப் பத்திரிகைகள் பிரித்தானியாவில் அரசு தேசிய உடல் நல சேவையின் பிரசவ முறை பற்றிய முக்கிய நடை முறையைப் பின்பற்ற உள்ளதாக தெரிவித்து வருகின்றன. இதன் பிரகாரம் இதுவரை வைத்திய காரணங்களுக்காக மட்டுமே அறுவை மூலம் மகப்பேறு இடம் பெற்றது என்ற நிலை மாறுகிறது. இனிமேல் எல்லா மகப்பேறுகளுமே அறுவை முறையில் இடம்பெற வேண்டும் எனத் தீர்மானிக்கப் போவதாகத் தெரிகிறது. பெண்கள் இயற்கையான மகப்பேறுக்குப் பதிலாக அறுவை மூலம் பிள்ளை பெறுவதற்கு உட்படுத்தப்படுவர் எனத் தெரிய வருகிறது. இது ஒரு சூடான விவாதத்துக்கு உரிய விடயம் எனவே சூடாகவே விவாதிக்க உள்ளோம் என்கிறது ஒரு தொலைக்காட்சி நிறுவனம். விரைவில் ஊடகங்களில் மகப்பேறு பெரும் பாடாக விளாசப் போகிறது.

சந்தணம் மெத்தினால் எங்கேயும் பூசலாம்!



பாதாள உலகத் தலைவர் நுகேகொடைப் பகுதி பொலிஸ் சூப்பரிண்டென்டன்(ஸ்ரீ). இவருக்குத் தலவத்து கொடையில் உள்ள ஒரு பிரபல சோதிடர் சொன்னாராம் பிறர் கண்ணூறு படாது இருக்க வாசல் கதவையும் முதன்மை அறைக்குச் செல்லும் படிக்கட்டையும் சந்தண மரத்தால் போட்டால் நல்லது என்று. எனவே நுகேகொடைப் பகுதியில் ஒரு சந்தண மரத்தை வெட்டி தான் கண்டியிலே புதிதாகக் கட்டும் வீட்டின் கதவையும் மாடிப் படிகளையும் செய்விக்கிறாராம். கம கம என மணம் வீசுமோ?

பலதும்

சென்னை தியாகராயநகரில் புது முயற்சி

எமது பெண்கள் இந்தியா போனால் புடவைக் கடைகளின் சொர்க்க புரியாக விளங்கும் தி.நகர் இரங்கநாதன் தெரு உஸ்மான் தெருக்களில் பாதம் பதிக்காது திரும்பமாட்டார்கள். தமிழ் நாட்டிலேயே தினமும் பல கோடிக் கணக்கான பணம் புரளும் வியாபார நிலையங்கள் பல இலட்சம் மக்களை மகிழவைத்துக் கொண்டிருக்கின்றன.

ஊழல் நிறைந்த ஆட்சியாளர் மற்றும் நிர்வாகிகளால் அங்கு பல கட்டிடங்கள் அனுமதி இன்றியும் சட்டத்தை மீறியும் எழுந்து விட்டன. சில பொதுநல விரும்பிகள் நீதிமன்றக் கோரிக்கைகள் மூலம் இந்த அத்து மீறல்களுக்கு முடிவு கட்ட நீதி மன்றத்தை நாடினர். அதனால் உயர் நீதி மன்றம் கண்காணிப்புக் குழு ஒன்றை நியமித்து அங்குள்ள அனுமதியற்ற கட்டிடங்கள் பற்றிய அறிக்கை கேட்டது. அந்த அறிக்கையின் பிரகாரம் சென்னை நகர அபிவிருத்தி அதிகார சபை ஆணையம் அத்தகைய கட்டிடங்களைப் பூட்டி முத்திரை இட்டுள்ளனர். நீங்கள் அடுத்த தடவை போகும் பொழுது சில நிலையங்கள் காணாமல் போய்விட்டதை அவதானிக்க வேண்டி வரலாம்.

மகிழ்ச்சியான வாழ்க்கை என்பது தடைகளற்ற வாழ்க்கை அல்ல, தடைகளை வெற்றி கொண்டு வாழும் வாழ்க்கை.
- ஹெலன் கெல்லர்

என்னை சந்திப்பவர்கள் வெற்றி பெறாமல் போவது இல்லை!... இப்படிக்கு தோல்வி!

பத்தும்

நாமல் ராஜபக்ஷ சட்டத் தேர்வில் மோசடி !




அப்பனுக்குப் பிள்ளை தப்பாமல் பிறந்திருக்கு என்ற பழ மொழிக்கு ஏற்ப நாமலின் பெயர் விளங்கி வருகிறது. சில மாதங்களுக்கு முன்னர் தன் தந்தையின் முன் தனது சித்தப்பன் ஒருவருக்குத் துப்பாக்கியால் குறி பார்த்தார் என்ற செய்தி வந்தது. பல வகையான ஊழல்களிலும் தில்லு முல்லுகளிலும் அவரது பெயர் அடிபடுகிறது. வன்னி யாழ்ப்பாணம் வரை ஓடி ஓடி வாக்குக் கேட்டவர்.


இலங்கை சட்டக் கல்லூரியில் 2010ம் ஆண்டு பட்டப் படிப்பின் இறுதித் தேர்வில் நாமலுக்கு குளிர் ஊட்டப் பட்ட தனியான அறையில் இணையத்தள வசதியுடன் கூடிய கணிணி வசதி கொடுக்கப் பட்டது. அவர் தேர்வை எழுதச் சிறப்புச் சலுகை வழங்கப்பட்டது என்ற முறைப்பாட்டை காவல் துறையிடமும் சட்டக் கல்லூரியிடமும், அன்றைய பிரதம நீதியரசரிடமும் முறையிட்டும் இலங்கையில் நீதி மறுக்கப் பட்ட நிலையில் வழக்கை ஜெனிவாவுக்கு எடுத்து வந்துள்ளார் மற்றொரு பரீட்சார்த்தியான துஷார ஜயரத்னா.

இப்பொழுது சீன நிறுவனத்துக்கு காலி முகத் திடலில் கைமாற இருந்த நிலத்தை நாமலின் விருப்பப்படி வேறு ஒரு வெளி நாட்டு நிறுவனத்துக்குக் கொடுக்கப்பட உள்ளது எனச் செய்திகள் தெரிவிக்கின்றன.

அப்பாவை விடப் பலே கில்லாடி போலிருக்கே!

இலவசமாகக் கிடைக்கும் விடையத்தின் பெறுமதி எம்மில் சிலருக்குத் தெரிவதில்லை, மிகச் சிறந்த உதாரணம்:







என். எஸ். ஜுவலரி
NS Jewellery & Textiles
BEST Collections!
உள்ளத்தைக் கொள்ளை கொள்ளும் நவீன உயர்தர டிசைன்களில் நகைகளும், திருமண ஆபரணங்கள், ஓடர்நகைகள், திருத்த வேலைகள் யாவும் செய்து கொடுக்கப்படும். தாலிக்குப் பொன்னுருக்குதல், காது, மூக்குக்குத்துதல் போன்ற நல்ல காரியங்கள் செய்து கொடுக்கப்படும்.
தாலி மற்றும் பொன்னுருக்குதல் இவையாவும் இங்கு செய்து தரப்படும்.
ஒவ்வொரு வருடமும் தை மாதம் எமது ஸ்தாபனத்தால் தங்கநகை சேமிப்புத்திட்டம் ஆரம்பிக்கப்படுகின்றது. மாதம் 100CHF என 12 மாதம் 1200CHF. இணைய விரும்புவோர் உங்களது பெயர்களை முன்கூட்டியே பதிவுசெய்யலாம்.
Neugasse 58, 8005 Zürich, Switzerland
Tel: 044 440 60 50
Fax: 044 440 60 52
info@nsjewellery.com



காணாமல் போனோர் கதை... மீண்டும் ஆரம்பத்திலிருந்து.

த. பாவலன்

வடக்கில் காணாமல் போயுள்ள இளைஞர், யுவதிகளது நிலையினைக் கண்டறியக் காவற்துறை ஒத்துழைப்பு வழங்கத் தயாராக இருப்பதாக இப்போது மீண்டும் அறிவிக்கப்பட்டுள்ளது, காவற்துறையின் முன்னாள் மாஅதிபரும், இலங்கை மனிதவுரிமைகள் ஆணைக்குழுவின் தற்போதைய தலைவருமான ஆனந்தராஜா யாழ்ப்பாணத்தில் இத்தகவலை வெளியிட்டுள்ளார், காவற்துறைமா அதிபராக இருக்கும்வரை எதையுமே செய்து கிழிக்காமல் பொத்திக் கொண்டிருந்த இக்காவற்துறை மாஅதிபர் புதிய பதவியை தக்கவைத்துக்கொள்ள இவ்வாறான அறிவிப்புக்களை வெளியிட்டு வருகின்றார்.

யாழ்.குடாநாடு படையினரின் கைகளில் வந்திருந்த 1996களின் பின்னரான காலப்பகுதிகளில் 800ற்கும் மேற்பட்ட இளைஞர் யுவதிகள் காணமல்போயிருந்தனர், அப்போதைய சனாதிபதி சந்திரிக்கா குமாரதுங்காவின் உறுதி மொழிகளை அடுத்து யாழ்ப்பாணம் திரும்பிக் கொண்டிருந்தவேளை நாவற்குழி இராணுவச்சோதனைச்சாவடியில் வைத்து இவர்களுள் பெரும்பாலானோர் காணமல்போயிருந்தனர், இதேபோன்று தொடர்ந்து இரவு,பகலென வீடுகளிலும் வீதிகளிலும் வைத்து பலர் காணாமல் போயிருந்தனர், ஆனால் அவர்களில் எவரும் இன்றுவரை வீடு திரும்பவில்லை.

சுண்டுக்குழி மாணவி கிருஸாந்தி குமாரசாமி பாலியல் வல்லுறவுக்குட்படுத்தப்பட்டு படுகொலை செய்யப்பட்ட செம்மணி பிரதேசம் பின்னர் பிரபல்யமடைந்த இடமாகியிருந்தது. கிருஸாந்தி குமாரசாமி படுகொலையின் சூத்திரதாரியான படையதிகாரி தனது மேலதிகாரிகளால் நடாத்தப்பட்ட நூற்றுக்கணக்கான படுகொலைகள் பற்றி நீதிமன்றில் வாக்கு மூலம் அளித்து அப்போது பரபரப்பை ஏற்படுத்தியிருந்தார். மரண தண்டணைக்குற்றவாளியான அந்நபர் தனது உயிரைத் தக்கவைத்துக் கொள்ள அரச தரப்புச் சாட்சியாக பல்டி அடித்திருந்தார், ஆனாலும் அவரால் கூட ஒரு சில புதை குழிகளையே காட்டிக் கொடுக்க முடிந்திருந்தது. இன்றுவரை அக்காலப்பகுதியினுள் காணமற்போன 800ற்கும் அதிகமானோரின் தகவல்கள் இல்லை.

இதேபோன்று 2006ம் ஆண்டின் பின்னரான காலப்பகுதியில், யாழ்ப்பாணத்திலும், வன்னியிலுமென காணமல்போயுள்ள ஆயிரக்கணக்கானவர்கள் பற்றி இன்று வரையில் தகவல்கள் இல்லை, ஆனாலும் காணாமற்போயுள்ள இந்த ஆயிரக்கணக்கானோர் காணாமற்போன சந்தர்ப்பங்களில் கூடியிருந்த குடும்பங்கள் இன்றுவரை சாட்சிகளாக எஞ்சியிருக்கிறார்கள், இந்த நிமிடம் வரை காணாமற்போன தமது பிள்ளைகளையோ, அல்லது கணவன்மாரையோ தேடி இக்குடும்பங்கள் அலைந்து கொண்டேயிருக்கின்றன.

ஆனால் காணமற் போனவர்களைக் கண்டறிவதற்காகக் காலத்திற்குக் காலம் அமைக்கப்படும் குழுக்கள் மட்டும் கூடிக்கூடிக் கதைத்துச் செல்வதைத்தவிர வேறு எதுவும் நடந்திருக்கவில்லை. குறிப்பாக 1996முதல் 1998வரை காணாமல்போனவர்கள் தொடர்பாக ஐ.நா உதவியுடன் மேற்கொள்ளப்பட்ட மூவர் கொண்ட விசாரணைக்குழு விரிவான அறிக்கையொன்றினை வெளியிட்டிருந்தது. அவ்வறிக்கையில், காணாமற்போனோர் விபரம் சம்பவம் இடம்பெற்ற காலம், இடம், காணாமற்போகச் செய்தவர்கள் யார் என்பவை பற்றிய அனைத்து விபரங்களும் குறிப்பிடப்பட்டிருந்தது. ஆனாலும் இன்றுவரை அவ்வறிக்கை தொடர்பில் அரசு ஆக்கபூர்வமான எந்த நடவடிக்கையையும் எடுத்திருக்கவில்லை, அவ்வறிக்கையும் வழமை போன்றே கிடப்பினில் போடப்பட்டது.

உண்மையில், காணாமற்போதல் சம்பவங்களில், பின்னணியில் இருந்தோர் பற்றி அவர்களது குடும்பங்கள் விபரமாக தகவல்களை வழங்கியிருந்தன, குறிப்பாகப் படையதிகாரிகள், படைப்புலனாய்வாளர்கள் மற்றும் துணை ஆயுதக்குழுக்களது உறுப்பினர்கள் காணாமற்போதல் சம்பங்களில் எவ்வாறு தொடர்புபட்டிருந்தார்கள் என்பது கூட முறைப்பாடுகளில் சுட்டிக்காட்டப்பட்டிருந்தன. ஆனால் அவை அனைத்துமே இலங்கை மனிதவுரிமைகள் ஆணைக்குழுவின் யாழ்.அலுவலகத்தில் தூசு படிந்துபோயுள்ள கோவைகளில் உறங்கிக் கொண்டிருக்கின்றன.

காணாமல்போதல் தொடர்பினில் கிடைக்கப்பெறும் முறைப்பாடுகளை பலாலி இராணுவத்தலைமையகத்திற்கு உடனடியாக அனுப்பி வைப்பதே மனிதவுரிமைகள் ஆணைக்குழு அதிகாரிகளது வழமையான கடமையாக இருந்தது. வழமை போலவே காணமற்போதல், கைதுகளுக்கும் தமக்கும் தொடர்பில்லை எனப் பலாலிப் படைத்தலைமையகம் தெரிவித்திருந்தது. அவர்களது இத்தகைய பதிலுடன் பெரும்பாலான காணமற்போனவர்களது கோவைகள், கிடப்பினில் போடப்படுவது வழமையாக இருந்தது.

அதேபோன்று வன்னியிலும், சரணடைந்தவர்களில் கணிசமானோர் தமது குடும்பத்தார்கள் முன்னிலையிலேயே சரணடைந்திருந்தனர், அவர்களை வாகனங்களில் படையினர் ஏற்றி செல்வதையும், குடும்பத்தவர்கள் நேரினில் கண்டே இருந்தனர். அவ்வாறே வவுனியா இடைத்தங்கல் முகாமிலிருந்து பிடித்துச் செல்லப்பட்டவர்களது நிலையும் இருந்தது. அவ்வாறு சரணடைந்தும் பிடித்தும், செல்லப்பட்டிருந்தவர்களில் கூட ஆயிரக்கணக்கானவர்களது நிலை இன்றுவரை தெரியாதே உள்ளது.

குறிப்பாக விடுதலைப்புலிகளின் மூத்தபோராளிகள் பலரது நிலை தொடர்ந்தும் கேள்விக்குறியாகவே இருக்கின்றது. உயிருடன் சரணடைந்த கேணல் ரமேஸ் படையினரால் விசாரணை செய்யப்பட்ட வீடியோ காட்சிகள் அம்பலப்படுத்தப்பட்டிருந்தது. பின்னர் அடையாளம் காணப்பட்ட புகைப்படங்கள் ஒன்றில் கேணல் ரமேஸ் சடலமாகக் கிடந்திருந்தார். அதேபோன்றே பாலகுமாரனும், அவரது மகனும் தடுத்துவைக்கப்பட்டிருக்கின்றமை தொடர்பான படங்களும் வெளிவந்திருந்தன. ஆனால் பின்னர் அரச தரப்போ, பாலகுமாரன் பற்றி எதுவும் தெரியாதென இன்றுவரை கூறி வருகின்றது. அதிலும் பெயர் குறிப்பிடப்பட்ட மூத்தபோராளிகள், எவருமே தமது சிறைகளில் இல்லை எனச் சிறைச்சாலை அமைச்சரும் கூறி வருகின்றார்.



உண்மையில் காணமற்போனவர்களுக்கு என்ன நடந்தது என்பது இன்றுவரை தெரியாத மர்மங்களாகவே மக்களிடம் இருக்கின்றது. அவர்களில் பலர் அடையாளப்படுத்தப்படாத விசேட தடுப்பு முகாம்களில் உள்ளதாகத் தகவல்கள் உலாவுகின்றன. அதிலும் அடையாளம் தெரிந்த தடுப்பு முகாம்களின் பட்டியல்களில் பெயர் உள்ளடக்கப்படாது பலர் இருப்பதாகவும் கூறப்படுகின்றது. பெரும்பாலானோர்கள், படுகொலை செய்யப்பட்டு விட்டதாகவும் சடலங்கள் ஆழ் கடலில் வீசப்பட்டு விட்டதாகவும் தகவல்களும் உண்டு. ஆனாலும் காணாமல்போனோரது ஆயிரமாயிரம் குடும்பங்கள் தமது பிள்ளைகள், கணவர்கள், திரும்பி வருவர் என்ற நம்பிக்கையுடனேயே வாழ்க்கையை நகர்த்திக் கொண்டிருக்கின்றனர்.

ஆனாலும் காணாமல்போனோர் தொடர்பில் குடும்பங்கள் செய்த முறைப்பாடுகளை ஏற்றுக்கொள்ளக் காவல் நிலையங்கள் தொடர்ந்தும் மறுத்தே வந்திருந்தன. ஏற்கப்பட்ட முறைப்பாடுகளும் கூட கிடப்பினில் போடப்பட்டன. ஆனால் இப்போது காணாமற்போனோர் விசாரணைகளுக்குக் காவற்துறையினர் ஒத்துழைக்க முன்வந்திருப்பதாக மனிதவுரிமைகள் ஆணைக்குழு அதிகாரிகள் கூறத்தொடங்கியுள்ளனர்.

இதுவும் கூட விசாரணைகள் மீள ஆரம்பிப்பது என்ற பெயரில் இழுத்தடிப்புகளை செய்து சர்வதேசத்தை ஏமாற்ற முன்னெடுக்கப்படும் நடவடிக்கைகள் என்பதில் மாற்றுக்கருத்துக்கள் இல்லை. அதிலும் சர்வதேச நிதிகளை சுரண்டிக்கொள்ளவும் தமது ஆசனங்களைத் தக்கவைத்துக் கொள்ளவும் அவர்கள் அரங்கேற்றும் மற்றொரு நாடகமே இதுவாகும், மாறி மாறி நாற்காலி ஏறும் அரசுகளாயினும், சரி அவர்களது முகவர்களாயினும் சரி தமிழ் மக்களுக்கு எதையும் மீட்டுத்தரப்போவதில்லை, அதிலும் காணமற்போயுள்ள இளைஞர் யுவதிகள் உட்பட.


Orient Textiles and Jewellery
2011 ம் ஆண்டுக்கான புத்தம்
புதிய வர்ணங்களில் குந்தம்
வேலை செய்த கோலம்.
காஞ்சி காஞ்சிபுரம்,
கோலம் மற்றும் பல வகையான
முகூர்த்தப் பட்டுச் சேலைகள்.
சிறுவர்களுக்கான
ஆடைவகைகளையும்
பெற்றுக்கொள்ளலாம்.
உத்தரவாத முத்திரை பதித்த
தரமான தங்கமான தங்க
ஆபரணங்கள் தரமான தேர்வில்,
சிங்கப்பூர் விலையில்
விற்பனையானகின்றது.
10% - 30%
SALE
1.10.11 - 31.12.11
மலிவுவிற்பனை
உரிமையாளர்: S.ஜெகதீஸ்
Königswall 16 (Am HBF)
44137 Dortmund, Germany
Tel: 0231 16 23 77
Fax: 0231 14 78 36
165, Upper Tooting Road
Tooting, London SW177TJ, UK
Tel: 0208 6823958



ஏழாம் அறிவு!... ஓர் பார்வை!...

வி. சபேசன்

பெரும் ஆர்ப்பாட்டத்தோடு வெளிவந்த "ஏழாம் அறிவு" திரைப்படம் ரசிகர்களின் எதிர்பார்ப்பை பூர்த்தி செய்யவில்லை என்று சொல்லப்படுகிறது. ரமணா, கஜனி என்ற வெற்றிப்படங்களைத் தந்த ஏ. ஆர் முருகதாசின் இயக்கத்தில், சூர்யாவின் நடிப்பில் வெளியாகி இருக்கின்ற படம் இது.

படம் வெளிவருவதற்கு முன்பு செய்யப்பட்ட விளம்பரத்தால் படம் குறித்த எதிர்பார்ப்பு உச்சத்தில் இருந்தது. தமிழ்நாட்டில் இருந்து சீனாவிற்குச் சென்று பல கலைகளையும் தத்துவங்களையும் பரப்பிய போதி தர்மனை அடிப்படையாகக் கொண்ட ஒரு படம் என்பதும் "ஏழாம் அறிவு" பற்றிய எதிர்பார்ப்புக்கு காரண-மாக இருந்தது.

ஆயினும் திரைக்கதையில் ஏற்பட்ட தொய்வு இரசிகனுக்கு பெருத்த ஏமாற்றத்தைக் கொடுத்து விட்டது. அதே வேளை "ஏழாம் அறிவு" திரைப்படத்தில் தமிழ் உணர்வு சார்ந்து வரும் வசனங்களுக்குப் பலத்த கைதட்டல் திரையரங்குகளில் கிடைக்கின்றது. கூடவே தமிழ் உணர்வு வியாபாரமாக ஆக்கப்படுகிறது என்கின்ற விமர்சனமும் சேர்ந்தே வருகிறது.

உண்மையில் ஆழமாகப் பார்ப்போமாக இருந்தால் "ஏழாம் அறிவு" செய்திருப்பது பெருத்த மோச-டியாகத் தெரியும். "போதி தர்மன்" தமிழனா என்பது பற்றி சர்ச்சைகள் இருக்கின்றன. போதி தர்மனை தமிழன் என்று நிறுவுவதற்குப் போதுமான ஆதாரங்கள் இல்லை என்பதுதான் உண்மை.

போதி தர்மன் ஒரு பல்லவ மன்னனின் மகன் என்று கருதப்படுகின்றான். இதில் பிரச்சினை என்னவென்றால் பல்லவர்கள் தமிழர்களா என்பது பற்றியே பெருத்த கேள்வி இருக்கின்றது. பல்லவர்கள் வடமொழியைப் போற்றிப் பாதுகாத்து ஆட்சி செய்தவர்கள். வடக்கிலே இருந்து வந்தவர்கள் என்றும், பாரசீகத்தில் இருந்து வந்தவர்கள் என்றும், யாழ்ப்பாணத்தில் இருந்து சென்றவர்கள் என்றும், தெலுங்கு நாட்டைச் சேர்ந்தவர்கள் என்றும் பலவாறு பலர் வாதிடுவார்கள்.

பல்லவர்களை தமிழர்கள் என்று சொல்கின்ற வரலாற்று ஆசிரியர்களும் இருக்கத்தான் செய்கிறார்கள்.
ஆனால் பல்லவர்கள் உண்மையில் யார் என்பது இன்னமும் சரியாக நிறுவப்படவில்லை. பல்லவ மன்னன் ஒருவருடைய மகன்தான் போதி-தர்மனா என்பது பற்றியும் பல கேள்விகள் இருக்கின்றன. போதிதர்மன்தான் குங்பூவை பரப்பினான என்பதிலும் பல மாற்றுக் கருத்துகள் இருக்கின்றன.

இப்படி நிறையக் கேள்விகள் இருக்கின்ற பொழுது ஏ.ஆர் முருகதாஸ் எந்தக் கவலை-யும் இல்லாமல் போதிதர்மனை தமிழன் என்று சொல்லிவிட்டுப் படத்தை ஆரம்பிக்கின்றார். பின்பு இந்தியாவை அழிக்க வருகின்ற சீன வில்லனை தமிழ் கதாநாயகன் தமிழ் தேசிய வசனங்களைப் பேசிக் கொண்டு எப்படி அழித்து எப்படி இந்தியாவைக் காக்கின்றான் என்று படத்தைக் கொண்டு போகின்றார்.

படத்தின் மிகப் பெரும் மோசடியே இதில்தான் இருக்கின்றது. தமிழ் தேசியத்தை அழித்த இந்தியாவை காப்பாற்றுகின்ற கதையை-ச் சொல்லுகின்ற படத்தில் தமிழ் உணர்வு வசனங்களை இணைத்து வியாபாரம் செய்கின்ற கைங்கர்யம் இதற்குள் அடங்கியிருக்கிறது.

முன்பு விஜயகாந்த் தன்னுடைய படங்களில் அடிக்கடி "தமிழ், தமிழ்" என்று வசனம் பேசுவார். எழுத்துப் பிழையில்லை. அவர் உண்மையிலேயே அப்படித்தான் பேசுவார். இப்படி "தமிழ்" உணர்வை வளர்த்து வந்த விஜயகாந்த் முதலில் வீரப்பனைப் பிடித்து, பதவி உயர்வு பெற்று பாகிஸ்தான் தீவிரவாதிகளைப் பிடிக்கப் போனார்.

அதன் பிறகு விஜயகாந்த் படங்களில் "தமிழ்" இல்லாமல் போனது. அந்த இடத்தில் "இந்தியா" வந்து குந்திக் கொண்டது. என்றாலும் தேவைப்பட்டால் தமிழும் இலவச இணைப்பாக இடையிடையே வரும்.

பாகிஸ்தான் தீவிரவாதிகளையும் இந்தியாவைச் சேர்ந்த முஸ்லீம் தீவிரவாதிகளையும் பல படங்களில் விஜயகாந்த், அர்ஜுன், சரத்குமார், உன்னைப் போல் ஒருவனில் கமல், வேலாயுதத்தில் விஜய்.. இப்படி நிறையப் பேர் சேர்ந்து அழித்துக் கொண்டிருப்பதால், ஏ.ஆர் முருகதாஸ் ஏதாவது புதிதாகச் செய்ய வேண்டும் என்பதற்காக சீனத் தீவிரவாதியைத் தன்னுடைய படத்தில் கொண்டு வந்திருக்கிறார்.

இந்தியாவில் இஸ்லாமியத் தீவிரவாதிகள் மட்டும் குண்டு வைப்பது இல்லை. இந்துத் தீவிரவாதிகளும் பயங்கரவாதச் செயல்களில் ஈடுபடுகிறார்கள். குஜராத் போன்ற தேசங்களில் பெரும் இனப் படுகொலைகளை நிகழ்த்தியிருக்கிறார்கள். பல குண்டு வெடிப்புக்களை நடத்தியிருக்கிறார்கள். ஆனால் இதுவரை எந்தக் கதாநாயகனுக்கும் இயக்குனருக்கும் இந்துத் தீவிரவாதிகளை அழித்து மக்களைக் காப்பது போன்று படம் எடுக்கத் தெரியவில்லை. தீவிரவாதிகள் என்றால் அவர்கள் தொப்பியும் தாடியுமாகத்தான் இருப்பார்கள் என்கின்ற நச்சுக் கருத்தை ஊட்ட மட்டும்தான் தெரிகிறது.

பாகிஸ்தான், சீனத் தீவிரவாதிகளை விடுவோம். சிங்களக் கடற்படையை அடித்து விரட்டி தமிழ் மீனவர்களைக் காக்கின்ற கதாநாயகனை இவர்களால் திரையில் காட்ட முடியுமா? சிறிலங்காவிற்கு உதவுகின்ற இந்தியாவை எதிர்க்கின்ற வசனங்களை வைக்க முடியுமா?

எதைக் காட்ட வேண்டும், எதைக் காட்டக் கூடாது என்பதில் எல்லோரும் தெளிவாக இருக்கிறார்கள். "ஏழாம் அறிவு" திரைப்படத்தில் தமிழன் பெருமை, வீரம், மொழி பற்றி நிறைய வசனங்கள் வருகின்றன. இந்தத் திரைப்படம் தெலுங்கிலும் வெளியிடப்படுகிறது.

தமிழ் உணர்வு சார்ந்த வசனங்கள் தெலுங்கில் எப்படி மொழிமாற்றம் செய்யப்பட்டிருக்கும். சில வசனங்கள் தமிழ் என்பதற்குப் பதிலாகத் தெலுங்கு என்று மாற்றப்பட்டிருக்கும். சில வசனங்களில் "தமிழன்" என்பது "இந்தியன்" என்று மாறியிருக்கும். சில காட்சிகள் இல்லாமல் வெட்டப்பட்டிருக்கும்.

நல்ல வேளை சிங்களத்தில் இந்தத் திரைப்படம் வெளியிடப்படவில்லை என்று ஆறுதற் பட்டுக் கொள்ள வேண்டியதுதான்.

இன்றைக்கு பல தமிழ் இயக்குனர்கள் தமிழ் உணர்வோடும், ஈழத் தமிழர்களின்பால் அன்போடும், ஆதரவோடும் இருக்கின்றார்கள் என்பது உண்மைதான். ஏ.ஆர் முருகதாசும் தமிழ் இனத்தின் மீது பற்று நிரம்பியவரே. ஆயினும் இந்திய தேசியத்தை வளர்த்துக் கொண்டே தமிழ் தேசியத்தை போற்றுவதும் முரணானது என்கின்ற உண்மையை உணர மறுப்பவர்களாக இருக்கின்றார்கள்.

சத்தியராஜ் அண்மையில் நடந்த ஒரு விழாவில் ஒரு கருத்தைச் சொன்னார். மக்கள் தமிழினத்தை ஆதரிக்கின்ற படங்களை விரும்புகிறார்கள். ஆகவே அப்படியான படங்கள் தொடர்ந்து வரும் என்றார். அதற்கு உதாரணமாக அவர் சிலுக்கு சுமிதாவைக் காட்டியிருந்தார்.


உண்மையில் அவர் இப்படியான இயக்குனர்களை கிண்டல் அடிப்பதற்குச் சொன்னாரா, அல்லது இந்த மாற்றத்தை வரவேற்றுப் பேசினாரா என்று தெரியவில்லை.

சிலுக்கு சுமிதா ஒரு சிறந்த உதாரணம்தான். ஒரு காலத்தில் அனைத்துப் படங்களிலும் அவர் இருந்தார். படத்தின் கதை எப்படியிருந்தாலும், ஏதோ ஒரு காட்சியில் சிலுக்கைக் கொண்டு வந்து விடுவார்கள். அவர் வருகின்ற அந்த ஐந்து நிமிடங்கள் படத்தின் வியாபாரத்திற்குத் தேவையாக இருந்தது.

மிகவும் நடிப்புத் திறமை மிக்க சிலுக்கு வியாபாரத்திற்காக ஊறுகாயாகப் பயன்படுத்தப்பட்டார். மற்றையபடி அவர் துன்பங்களில் உழன்று கடைசியில் தற்கொலை செய்யவேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டார். அவருடைய மரண வீட்டிற்குச் சென்ற திரையுலகைச் சேர்ந்தவர்கள் வெகு குறைவு.

இன்றைக்கு தமிழ் உணர்வு வியாபாரத்திற்கு மட்டும் திரைப்படங்களில் பயன்படுத்தப்பட்டால், நாளை சிலுக்கின் முடிவே தமிழுக்கும் நிகழும்.

மரணித்தோரெல்லாம் மாவீரர் உயிரோடிருப்போர் யாவரும் துரோகிகள் (?)



சண் தவராஜா

விடுதலைப் புலிகள் பலமிக்க சக்தியாக விளங்கிய ஆயுதப் போராட்டக் காலகட்டத்தில் ஆரம்பிக்கப்பட்டு ஆண்டு தோறும் அனுட்டடிக்கப்பட்டுவரும் தேசிய மாவீரர் நாள் நெருங்குவதையொட்டி அதனை எதிர்கொள்வதற்காக முன்கூட்டியே தயாரிப்பு வேலைகளை சிறி லங்கா அரசாங்கம் மேற்கொண்டு வந்ததை கடந்த காலங்களில் நாம் அவதானித்திருக்கின்றோம். தமது உயிர்களைத் துச்சமென நினைத்து களங்களிலே தீரமுடன் போராடி தாயகக் கனவுடன் உயிர் நீத்த மாவீரர்களுக்கு அஞ்சலி செலுத்த தமது பாணியிலே விடுதலைப் புலிகள் பாரிய வெற்றிகரமான தாக்குதல்களைத் தொடுப்பது ஆரம்ப காலத்தில் வழக்கமாக இருந்தது. பின்னைய நாட்களில் விடுதலைப் புலிகள் இந்த வழக்கத்தை மாற்றிக் கொண்டாலும் கூட சிறி லங்காப் படையினரைப் பொறுத்தவரை நவம்பர் மாதமானது அதியுச்ச எச்சரிக்கையுடன் இருக்க வேண்டிய காலமாகவே கணிக்கப்பட்டு அதற்கேற்ப படையினர் தயார்நிலையில் வைக்கப்படுவர். அந்தளவிற்கு மாவீரர் தினத்தை எதிர்கொள்ள சிறி லங்கா அரசும், சிங்கள மக்களும் அச்சம் கொண்டிருந்தனர்.

ஆனால், இன்றோ நிலைமை தலைகீழாக மாறியுள்ளது. 2009 மே மாதத்துடன் தமிழ் மக்களின் ஆயுதப் போராட்டம் மிகவும் கொடூரமான முறையில் நசுக்கப்பட்டதன் பின்னர், தற்போது மாவீரர் நாள் நெருங்க நெருங்க அதனை முன்னிட்டு தமிழ் மக்கள் அச்சப்பட வேண்டிய சூழல் உருவாகியுள்ளது. குறிப்பாக புலம்பெயர் ஈழத் தமிழரிடையே அந்த அச்ச நிலையை பெரிதும் அவதானிக்க முடிகின்றது.

தாக்குதல்கள், உயிரிழப்புக்கள் தொடர்பிலான அச்சமல்ல இது. மாறாக, விடுதலைப் புலிகள் எனத் தம்மை அழைத்துக் கொள்வோர் ஒன்றுக்கொன்று எதிரான மாவீரர் நிகழ்வுகளை நடாத்தி தம்மிடையே உள்ள பிளவுகளை பகிரங்கமாக வெளிக்காட்டிக் கொள்வரோ என்கின்ற அச்ச உணர்வே அது. ஈழத் தமிழ் மக்களுக்கு நீதி கிட்டவேண்டும் என உளமார விரும்பும் உணர்வுள்ள தமிழர்கள் மத்தியில் இந்த அச்சவுணர்வு கிலியாக மாறியுள்ளது.

முள்ளிவாய்க்காலில் தமிழ் மக்களின் ஆயுதப் போராட்டம் முடிவிற்குக் கொண்டுவரப்பட்டதை அடுத்து, இறுதிக் கட்டத்தில் கட்டவிழ்த்து விடப்பட்ட அதீத கொடுமைகள் காரணமாக தாயகத்திலும் புலத்திலும் வாழும் தமிழர்கள் தமது அரசியற் கோரிக்கையைக் கைவிட்டு சரணாகதி அரசியலைத் தேர்ந்தெடுப்பர் எனச் சிங்களப் பேரினவாதம் நினைத்தது. ஆரம்பக் காலகட்டத்தில் அத்தகைய ஒரு உணர்வு தாயகத்தில் நீடித்தது என்னவோ உண்மைதான். ஆனால், புலத்தில் நிலைமை வேறுவிதமாக இருந்தது.

புலம்பெயர் நாடுகளில் அரசியல் முனைப்புக்களில் ஈடுபட்டோரிடையே குழப்பமான சிந்தனைகளே முதன்முதலில் வெளிப்பட்டன. நீண்டகாலமாக முடிவின்றித் தொடர்ந்த போராட்டத்தின் விளைவாக உருவாகியிருந்த ஆயாசம் பலரை 'அனைத்திலிருந்தும்' ஒதுங்கச் செய்தது. இதில் சாதாரண செயற்பாட்டாளர்கள் முதல் கொள்கை வகுப்பாளர்கள் அல்லது அபிப்பிராயங்களை உருவாக்குவோர் எனக் கருதப்பட்டோர்வரை அடங்குவர்.

ஊரே கூடி வடமிழுக்க நீயா நானா எனப் போட்டிபோட்ட நிலைமாறி, வடமிழுக்க ஊரைக் கூட்டவேண்டிய நிலை மீண்டும் உருவானது. 'எரிகிற வீட்டில் பிடுங்கியது மிச்சம்' என ஒரு சிலர் கிடைத்ததைச் சுருட்டிக் கொள்ள நீண்டகாலமாக அடக்கி வைத்திருந்த ஆத்திரமோ காழ்ப்புணர்ச்சியுடன் கூடிய வசைபாடல்களாக பல வழிகளிலும் வெளிப்பட்டது. நேற்றுவரை நண்பர்களாக இருந்தோர் விரோதிகளாகினர். விரோதிகளாக இருந்தோர் சமாந்தரமாக வரத் தொடங்கினர்.

கடந்த கால உழைப்புக்களுக்கும் தியாகங்களுக்கும் பலனைப் பெற்றுக்கொள்ள வேண்டுமென விரும்புவோர் ஈழத் தமிழர் அரசியல் அசைவியக்கத்தை ஏதாவது ஒரு வகையில் முன்னகர்த்திச் செல்லப் பாடுபட்டு வருகின்றனர். அதேவேளை, இதுநாள்வரை புலம்பெயர் தேசங்களில் அரசியல் பணிக-ளில் ஈடுபட்டு வந்தோர் பொது இலக்கை மறந்தவர்களாக ஒருவர் மீது ஒருவர் சேற்றை வாரி இறைப்பவர்களாகவும் தன்னைத் தவிர உயிரோடிருக்கும் மற்றவர்களெல்லாம் துரோகிகள் என வகைப்படுத்துபவர்களாகவும் உள்ளனர்.

கடந்த காலத் தெளிவும் நிகழ்கால நிதானமுமே எதிர்காலத் தீர்க்கதரிசனத்துக்கு வழிவகுக்கும் என்பதை மறந்தவர்களாகச் செயற்படும் இந்த நடிப்புச் சுதேசிகள் யாவரும் புலம்பெயர் நாடுகளில் செயற்பட்டுவரும் விடுதலைப் புலிகளின் கட்டமைப்புக்களை அடியோடு சிதைத்துவிடும் சிறி லங்கா அரசின் திட்டத்திற்கு தம்மையறியாமலேயே உதவுபவர்களாகவே மாறிப் போயுள்ளனர். உன்னதமானவர்கள் என நினைத்து அவர்களைத் தலையில் தூக்கி வைத்தாடிய மக்கள் தற்போது அதே நபர்கள் அவர்களின் முன்னைநாள் சகாக்களாலேயே குற்றவாளிகளாக நாமகரணம் செய்யப்படுவதைக் கண்டு விக்கித்து நிற்கின்றனர்.

இதுவரை காலமும் பேசாப் பொருளாக இருந்துவந்த விடுதலைப் புலிகளின் உள்ளக முரண்பாடுகள் இன்று பேசுபொருளாக மட்டுமன்றி கேலிப் பொருளாகவும் மாறியுள்ளது.

வெளியில் கசியும் தகவல்களின்படி இன்று விடுதலைப் புலிகள் எனத் தம்மை புலம்பெயர் நாடுகளில் நிலைநிறுத்திக் கொள்ள முட்டிமோதிக் கொண்டிருக்கும் இரு அணிகளதும் நோக்கம் தாயக விடுதலையை வென்றெடுப்பது என்ற நீண்டகால இலக்கு அல்ல. மாறாக தமக்குள் பெரியவர் யார் என்பதை நிலைநிறுத்துவதாகவும் விடுதலைப் பற்று அதிகம் கொண்டவர் யார் என்பதை நிரூபிப்பதாகவும் குறுகிப் போயுள்ளது. இதனால், ஒருவரின் திட்டத்தை மற்றவர் விமர்சிப்பதும் நிராகரிப்பதும் தொடர்கின்றது. மக்கள் நலன் மறக்கப்பட்ட ஒன்றாகி விட்டது.

போரினால் பாதிக்கப்பட்ட பொதுமக்கள் மற்றும் முன்னைநாள் போராளிகளின் நலத்திட்டங்கள் ஓரளவில் முன்னெடுக்கப்பட்டு வருகின்ற போதிலும் அதுவிடயத்தில் கருத்தூன்றிச் செயற்பட முடியாத அளவிற்கு ஏனைய விடயங்கள் அவர்களை ஆக்கிரமித்துள்ளமையைக் காண முடிகின்றது.
மாவீரர் தினம் அனுட்டிக்கப்படுவது மரணித்தோரை நினைவு கூரவும் மாவீரர் பெற்றோருக்கு மதிப்பளிக்கவும் மாத்திரமல்ல. அதன் உள்ளார்ந்த நோக்கம் மாவீரர்களின் இலட்சியக் கனவுகள் அவர்களது மரணத்தோடு முடிந்துபோய்விடாது, அவர்தம் பாதையில் தொடர்ந்து பணிப்பவர்கள் அந்த இலட்சியக் கனவை தம் தோள்களில் சுமந்து அதனை வென்றெடுப்பதை நோக்கமாகக் கொண்டதே. மாவீரர்களின் இலட்சியத்தை மறந்துவிட்டு அல்லது இரண்டாம் பட்ச விடயமாகக் கருதிக் கொண்டு பிரமாண்டமான அளவில் பெரும் பொருட் செலவில் மாவீரர் தின நிகழ்வை அனுட்டிப்பதால் விளையப் போகும் பயன் என்ன?

தொடரும் சம்பவங்கள் மற்றும் தாயகத்துக்குச் சென்றுவரக் கிடைத்துள்ள வாய்ப்பு ஆகியவை புலம்பெயர் தமிழர்களை விடுதலை ஆதரவுச் செயற்பாடுகளில் இருந்து ஏலவே தூர விலகச் செய்துவரும் நிலையில், விடுதலை விரும்பிகளின் மத்தியில் நிலவும் குத்துவெட்டுக்கள் குடுமிபிடிச் சண்டை போன்றவை அதனைத் துரிதப் படுத்தும் பாங்கிலேயே அமைந்துள்ளமை வேதனை தருகின்றது.

எடுத்ததெற்கெல்லாம் யூதர்களின் செயற்பாடுகளை உதாரணம் காட்டும் எம்மவர் ஒற்றுமை விடயத்தில் மட்டும் அவர்களை உதாரணமாகக் கொள்ளாமல் இருப்பதன் காரணம் புரியவில்லை. புலம்பெயர் நாடுகளில் தற்போது நடைபெற்றுவரும் நிகழ்வுகளை மாவீரர்கள் அறிந்தால் என்ன நினைப்பர் என ஒரு கணம் கண்மூடி மனதாரச் சிந்தித்தால் எமது செயற்பாடுகளில் ஒரு மாற்றம் வந்தேயாகும். அதுவே இன்றைய காலத்தின் தேவையுமாகும்.

MEDIA ASIA
Another Home of Southasian Channels
For satellite news, live radios, TV-Guide, Radio-schedules, contact details of Tamil channels in the world etc.
www.mediaworldasia.dk



போர்க்குற்றச்சாட்டுக்கள் பலியாடுகளா?

ஆர்.தயாபரன்

வட்டுக்கோட்டையில் தொடங்கிய இனப்பிரச்சினைக்கான தீர்வு முன்மொழிவு இப்போது அமெரிக்கா வரையில் சென்றுள்ளது. அப்போது தந்தை செல்வா பிரேரித்ததை இப்போது இரா.சம்பந்தன் எடுத்துச்செல்லவேண்டியிருக்கின்றது. பலரும் சொல்வதைப்போல இதைத் தவறவிட்டால் வேறு சந்தர்ப்பங்கள் கிட்டுமா? இல்லையா? என்பதைக் கூட்டமைப்பே இனிக்கூறவேண்டும். ஆனாலும் அமெரிக்காவரை அதை எடுத்துச் சென்ற பெருமை மாண்டுபோன இரண்டு லட்சத்திற்கும் மேற்பட்ட மக்களையும், நாற்பதாயிரத்திற்கும் மேற்பட்ட மாவீரர்களையுமே சாரும் என்பதை யாரும் மறுப்பதற்கில்லை.

அதிகரித்துள்ள சர்வதேச அழுத்தம் எதையாவது தமிழ் மக்களுக்குக் கொடுக்கவேண்டும் என்ற சூழலை இலங்கை அரசிற்கு ஏற்படுத்தி வருகின்றது. ஏதாவது ஒரு அரைகுறை தீர்வையேனும் தமிழர்கள் தலையில் கட்டியடித்துவிட அரசும் இப்போது தயாராகிவிட்டது. ஆனால் அதற்காகவும் பேரம் பேச அரச தலைமை தயாராகி விட்டது. பேரம் பேச வேண்டிய தமிழ்தேசியக் கூட்டமைப்போ ஆளுக்கொரு பக்கம் இழுத்துக் கொண்டிருப்பதால் எவருடன் பேசி இறுதி முடிவுக்கு வருவதென்பதில் அரசுக்கு நெருக்கடி தொடர்கின்றது.

எதிர்பார்ப்பிற்கு மாறாகப் போர்குற்றச்சாட்டுகள் நாலாபுறமும் சுற்றிச் சுழற்றியடிக்கத் தொடங்கிவிட்டது, அயல் நாடுகளுக்கு அரச உயர்மட்டம் என்பது கூட பயணிக்க ஒன்றுக்கு பல தடவை இப்போது சிந்திக்க வேண்டியிருக்கின்றது. படை உயரதிகாரிகளது பெரும்பாலான சர்வதேச பயணங்கள் முடக்கப்பட்டு விட்டன. அழுத்தங்களையடுத்து முன்னாள் இராணுவத்தளபதிகளுள் ஒருவரான ஜெகத் டயஸ் ஏற்கனவே திருப்பி அழைக்கப்பட்டுவிட்டார்
அவுஸ்திரேலியவிற்கான தூதரான முன்னாள் கடற்படைத்தளபதி, தான் சத்தியமாகக் கடலில் இருந்து பீரங்கி அடிக்கவில்லையென்று இப்போது நிற்கிறார். எந்தப்பக்கம் பதில் சொல்வதென மகிந்த சமரசிங்காவால் கூட முடியாதிருக்கின்றது. அவர் வருடத்தின் 365 நாட்களும் பயணிக்கவேண்டுயிருக்கின்றது. ராஜபக்ச கும்பல் செய்த அடாவடிகளுக்குத்தான் அல்லாடவேண்டியிருப்பதாக அவர் புறுபுறுத்துக் கொள்வதைக் கூட எவரும் பொருட்டாக மதிக்க நேரமிருக்கவில்லை.

ஆனால் திட்டமிட்டபடி இந்தியா முதல் அமெரிக்காவரை இனப்பிரச்சினைக்கான தீர்வுத்திட்டத்தை முன்வைக்கப் பலி கேட்கத்தொடங்கிவிட்டன. ராஜபக்ச கும்பல் மீதான போர்க்குற்ற விசாரணைகளை கைவிடுதல் என்பதே இப்போது பலி ஆடாக இருக்கின்றது. அதை நேரில் கேட்காமல் சுற்றிவளைத்துக் கேட்க அந்தந்த நாடுகள் தத்தமது முகவர்களை அனுப்பிக் கொண்டிருக்கின்றன. இந்திய வெளிவிவகார அமைச்சின் செயலாளர் ரஞ்சன் மாத்தாய் முதல் அமெரிக்காவின் தெற்காசிய அரசியல் விவகாரங்களுக்கான செயலர் றொபேட் ஓபிளேக் வரையென அனைவரும் அலைந்து திரிகின்றனர். ஆனால் இவர்களுள் பெரும்பாலானோர் ஒன்றை மறந்து விடுகின்றனர், போர்க்குற்றச்சாட்டுகளை முன்வைத்து குரல் எழுப்புபவர்கள் புலம்பெயர் தமிழ் உறவுகளும், உள்;ர் மக்களும் மட்டுமே. கூட்டமைப்பு இன்றுவரை எந்த ஒன்றையும் கிழித்துப்போட்டதாகத் தகவலில்லை. போர்க்குற்றச் சாட்டு விசாரணை பற்றி எழுப்பப்படும் கேள்விகளுக்கு இன்றுவரை சம்மந்தன் தலைமையிலான கூட்டமைப்பு தலையைச் சுற்றி மூக்கைத்தொடும் பாணியிலேயே பதில்களைக் கூறிவருகின்றது. ஆதிலும் சுமந்திரன் போன்றோர் சிங்கள ஊடகங்களுக்கு வழங்கி வரும் பேட்டிகளில் முள்ளிவாய்க்காலில் தமிழர்கள் தற்கொலை தான் செய்து கொண்டுள்ளார்கள் என்ற சாரமே இருக்கின்றது. அடுத்தமுறை அலரிமாளிகையில் சனாதிபதியின் தேநீர் விருந்தில் சனாதிபதியின் சீற்றத்தை எதிர்கொள்ளவேண்டி வருமே என்ற பயம் அவர்களுக்கு இருக்கின்றது.

உண்மையில் கூட்டமைப்பு அமெரிக்காவுக்கு என்ன நோக்கத்திற்காகச் சென்று திரும்பியது என்பது பற்றி பெரும்பாலான அதன் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கே தெரிந்திருக்கவில்லை, அதிலும் தேசியப் பட்டியல் மூலம் உள்ளே புகுந்திருக்கின்ற சுமந்திரனின் நிகழ்ச்சி நிரல் பெரும்பாலானவர்களுக்குத் தெரிந்திருக்கவில்லை, சிலவேளைகளில் கூட்டமைப்பின் தலைவர் சம்மந்தனா?

இல்லையா என்ற கேள்விகளும் இடையிடையே எழுந்து வருகின்றது. அதிலும் கூட்டமைப்பின் உத்தியோக பூர்வப்பேச்சாளராக சுரேஸ் பிறேமச்சந்திரன் உள்ளபோதும் சுமந்திரன் கொழும்பு ஊடகங்களைக் குத்தகைக்கு எடுத்து வைத்திருக்கின்றார்.


அரசு முதலில் எதைத்தருகின்றதோ அதை வாங்கிக்கொண்டு அடுத்தகட்டத்திற்கு நகரலாம் என அவர் ஆலோசனை கூறுகின்றார். இந்தியாவினதும், மகிந்த குடும்பத்தினதும் பூரண ஆசீர்வாதங்கள் அவருக்கு உண்டென்றே கூறப்படுகின்றது. அவ்வகையிலேயே சம்பந்தன் மீது நிர்ப்பந்தங்களை சுமந்திரன் பிரயோகித்து வருவதாகக் கூட்டமைப்பினுள் புகைச்சல்கள் உண்டு. மாவை சேனாதிராசாவிற்கு இழுபட்டுச் செல்வதைத்தவிர வேறு வழியிருக்கவில்லை ஆனால் சுரேஸ் பிறேமச்சந்திரன் தனித்து நிற்க முற்பட்டாலும் அரசியல் வாரோட்டத்தில் அது தொடர்ந்து சாத்தியமற்றதாகவே உள்ளது. கூட்டமைப்பின் சக நாடாளுமன்ற உறுப்பினர்களோ விமர்சனங்களுக்கு விடை கூற முடியாது திண்டாடியே வருகின்றனர்.

குறிப்பாகக் கூட்டமைப்பில் அங்கத்துவம் பெற்றுள்ள மற்றைய கட்சியான தமிழீழ விடுதலை இயக்கத்தின் சார்பில் எவரும் அழைத்துச் செல்லப்பட்டிருக்கவில்லை என்ற குற்றச்சாட்டுக்கள் வலுப்பெற்றே வருகின்றன. அதிலும் கிழக்கைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்கள், உள்ளடக்கப்படவில்லை என்ற புகைச்சல் ஆரம்பம் தொட்டே தொடர்கின்றது. ஆரம்பத்தில் கூட்டமைப்பை வழிநடத்துவது 3 எஸ் கூட்டணியென அழைக்கப்பட்டது. எனினும் சுமந்திரனது வரவின் பின்னர் அது 4 எஸ் கூட்டணியென்றாகிப்போயுள்ளதாகக் கூறுகின்றார் மூத்த தமிழரசுக்கட்சிப் பிரமுகர் ஒருவர்.

எது எவ்வாறாக இருப்பினும் காணி மற்றும் பொலிஸ் அதிகாரங்களற்ற ஆகக்குறைந்த தீர்வுகளைக் கூட்டமைப்புப் பெறுவதென்பது சாத்தியமற்றது. கூட்டமைப்பு மீதான தமது அசைக்க முடியாத நம்பிக்கையினை நடந்து முடிந்த உள்ளூராட்சித் தேர்தலிலும் தமிழ் மக்கள் மீண்டுமொருமுறை வெளிப்படுத்திவிட்டார்கள். ஆனாலும் அவ்வெற்றி கட்சிக்கான வெற்றி என எவராவது நம்புவார்களேயானால் அவர்கள் கள யதார்த்தம் தெரியாதவர்களே.
கூட்டமைப்பின் வெற்றிக்கான புறக்காரணிகளும், ஆதரவுத்தளங்களும் முக்கியமானவை. தமிழ்த்தேசியம் மீதான பற்றுடன் ஊடகங்கள் பூரண ஆதரவைத் தந்தன. பல்கலைக்கழகமெனும் மாபெரும் மாணவ இயக்கம் தனது முழுமையான பங்களிப்பை வழங்கியிருந்தது. முள்ளிவாய்க்கால் பேரவலத்தின் பின்னர் தமிழ் மக்களுக்குத் தலைமை தாங்கும் தகைமை கூட்டமைப்பினரிடையே இருப்பதாக மக்களும் நம்பினார்கள். பலம்வாய்ந்த மாற்றுத்தமிழ் கட்சிகள் இல்லாதிருந்ததும் இதற்குக் காரணமாகலாம்.

ஆனால் கடந்த காலங்களில் அமிர்தலிங்கம் பாணி அரசியலைக் கூட்டமைப்பு மீண்டும் செய்ய முற்படுமேயானால் நிலைமை தொடர்ந்தும் அவ்வாறே இருக்கப்போவதில்லை. சொல்வதொன்று செய்வதொன்று என இருந்த அரசியல் சூழலில் இப்போது மக்கள் இல்லை. முள்ளிவாய்க்கால்வரையான மூன்று தசாப்த யுத்தப்பேரவலங்கள், தியாகங்கள், ஒவ்வொரு தமிழ்க் குடும்பத்துடனும் ஏதோவொரு வகையில் பிணைந்தேயுள்ளது. தியாகங்களை சுயநல அரசியலுக்காக யாராவது விலை பேசுவதை மக்கள் என்றுமே அனுமதிக்கப் போவதுமில்லை. அவ்வகையில் கூட்டமைப்பு போர்குற்றங்களை விடுத்து அரசியல் செய்யப்போவதை மக்கள் அனுமதிக்கப்போவதுமில்லை. அதை உணர்ந்து கொள்ளாது கூட்டமைப்பு செயற்படுமேயானால் மக்கள் சக்தி எனும் பேராறு அவர்களை அரசியல் ஓட்டத்தினில் வரலாற்றுச் சாக்கடையினுள் தூக்கி வீசிவிட்டுப் பயணித்துக் கொண்டேயிருக்கும்.





நரைமுடிக்கு... நன்றி வணக்கம்!

நரைத்த முடி என்பது உலகம் முழுதும் பெரிய சவாலாக இருக்கிறது. இதனால் "ஹேர் டை" தொழிற்சாலை இன்று உலக அளவில் மிகப்பெரிய சந்தையை உருவாக்கியுள்ளது. இதற்கு முற்றுப்புள்ளி வைப்போம். இன்னும் 4 ஆண்டுகளில் வெளிவரும் ஒரு மாத்திரை நரைக்கு முற்றுப்புள்ளி வைக்கும் என்று விஞ்ஞானிகள் சிலர் கூறியுள்ளனர்.

பெயரிடப்படாத பழம் ஒன்றின் சாறிலிருந்து தயாரிக்கப்படும் மாத்திரை இன்னும் 4 ஆண்டுகளில் விற்பனைக்கு வந்து விடும் என்று இந்த விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர்.

ஒப்பனைப் பொருட்களை உற்பத்தி செய்யும் முதன்மை நிறுவனமான ஓரியல் (L'Oreal) இந்தப் புதிய மாத்திரையைக் கண்டுபிடித்துள்ளது. 10 ஆண்டுகள் இடைவிடாத ஆராய்ச்சிக்குப் பிறகு இப்போது நரை முடிக்கு டாடா என்று இவர்கள் குதூகலத்துடன் தெரிவிக்கிறார்கள்.

800கோடி பவுண்டுகள் தொகை கொண்ட உலகின் "டை" சந்தைக்கு ஆப்பு வைத்துள்ளதாக ஓரியல் நிறுவனம் பெருமைப் பட்டுக் கொண்டுள்ளது.

ஆய்வில் ஈடுபட்ட அந்த நிறுவனத்தின் உயிரியல் துறைத் தலைவர் புருனோ பெர்னர்ட், "இந்தப் புதிய நரைத்தடுப்பு மாத்திரைக்கு ஆண்கள் முதல் பெண்கள் வரை உலகம் நெடுகிலும் மிகப்பெரிய சந்தை இருக்குமென்று எதிர்பார்க்கிறோம். இது விலை அதிகமில்லை என்றும் தினசரி உணவு எடுத்துக் கொள்வது போல் இதனை எடுத்துக் கொண்டால் போதுமானது" என்றார்.

உடலில் உள்ள தீங்கான புரோட்டின்களுடன் முடி செல்கள் வினையாற்றும்போது நரைத்த முடி தோன்றுகிறது. தற்போது அடையாளம் தெரியாத இந்தப் பழத்திலிருந்து எடுக்கப்படும் சாறில் உள்ள ஒரு சத்து முடி நரையை தூண்டிவிடும் சுரப்பியை ஒத்ததாக இருப்பதை இந்த ஆய்வாளர்கள் கண்டுபிடித்துள்ளனர்.

"நரை முடி தோன்றுவதற்கு முன்னால் இந்த மாத்திரையைத் தினமும் எடுத்துக் கொண்டால் நரை ஏற்படுவதைத் தடுக்க முடியும். ஆனால் முடி நரைத்த பிறகு அதனை மீண்டும் கருப்பாக இந்த மாத்திரை ஆக்குமா என்பது சந்தேகமே" என்கிறார் பெர்னர்ட்.

10 ஆண்டுகள் இந்த மாத்திரை சந்தையில் புழங்கிய பிறகே இதன் சக்தி பற்றித் தெரியவரும் என்று இவர்கள் கூறுகின்றனர்.

2013ஆம் ஆண்டு மே மாதம் விஞ்ஞான மாநாட்டில் இது எப்படித் தயாரிக்கப்பட்டது, இந்த விஞ்ஞானிகளின் கோரலில் எந்த அளவுக்கு உண்மை உள்ளது என்பது தெரியவரும்.

பிராட்ஃபோர்ட் பல்கலையில் பணியாற்றி வரும் பேராசிரியர் டெஸ் டாபின் என்ற தோல்நோய் நிபுணர் இது பற்றிக் கூறுகையில், "சுரப்பியை மாற்றினால் நரை நின்று விடும் என்பது பற்றித் தெளிவாக இல்லை. ஆனால் இந்த ஆய்வை மேற்கொண்ட டாக்டர் பெர்னட் குழுவினருக்கு இது பற்றிய அறிவு அதிகம், மயிர்க்கால்கள் எவ்வாறு வேலை செய்கின்றன என்பதில் இவர்கள் நிபுணர்கள்" என்றார்.


LOWEST AIRFARE GUARANTEE
We will beat any airfare quote or you fly free!
Special Offers
SWISS
COLOMBO RETURN NON-STOP FROM: CHF 761.- (incl.)
SriLankan Airlines
COLOMBO RETURN NON-STOP FROM : CHF 860 (incl.)
SriLankan Airlines will restart services to Zurich on 23rd December 2011
Monday, Wednesday Non Stop From Zürich: 19:35 / 18:45
Friday via Male Dep. From Zürich 18.45
Colombo-Zurich Wenesday, Friday and Monday
Colombo return from CHF 850.- (incl.)
SriLankan
(Valid from 28.12., Non-Stop, Baggage 35Kg, 1 Change Free, 2 Months Valid)
BUY 1 GET 1 FREE
SALE
Buy 1, Get 1 Free offer!
புதன்கிழமைகளில் (28.12.11 முதல்) Srilankanairline இல் கொழும்பு
சென்று வர ரிக்கெட் வாங்குபவர்களுக்கு இந்தியா அல்லது சிங்கப்பூர்
மலேசியா தாய்லாந்து சென்றுவர இலவச ரிக்கெட்!
(ஏதாவது ஒரு நாட்டுக்கு மட்டும்)
Emirates
Zürich-Colombo-return: CHF 800.- (incl.)
الاتحاد
ETIHAD
Zürich-Madras return CHF 1000,- (incl.)
QATAR AIRWAYS القطرية
Taking you more personally
The prices displayed above are subject to availability!
365 days 24 Hours for Airtickets 079 622 46 61 (Hotline)
YOUR SPECIALIST FOR FLIGHTS
sivatravel
Länggass-strasse 16, 3012 Bern
Badenerstrasse 281, 8003 Zürich
044 419 91 00 or 031 318 44 60
SriLankan

அனைத்தும் அவர்கையில்



பூமிபுத்திரன்

அமெரிக்காவரை சென்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நடாத்திய பேச்சுக்கள், ஈழத் தமிழ் மக்களுக்கான அரசியல் தீர்வு பற்றிய விவாதங்களை மற்றுமொருமுறை தோற்றுவித்துள்ளது. நடைபெற்ற பேச்சுக்களால், ஈழத் தமிழ் மக்கள் புளகாங்கிதம் அடைந்துள்ள அதேவேளை சிங்களப் பேரினவாதிகள் கிலி கொண்டவர்களாக தமிழ் மக்களுக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கும் எதிரான தமது செயற்பாடுகளைத் தீவிரப்படுத்தியுள்ளனர். தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு எதிரான கருத்துக்கள் சிங்களப் பேரினவாதத் தரப்பிலிருந்து பரவலாக முன்வைக்கப்பட்டு வரும் அதேவேளை, திருகோணமலையில் நிறுவப்பட்டிருந்த தந்தை செல்வாவின் சிலையின் தலை உடைக்கப்பட்டுள்ளது. அரசியலமைப்புச் சட்டத்தின் ஆறாவது பிரிவின் கீழ் பிரிவினைக்கு எதிராகச் செயற்படுவதில்லையெனச் சத்தியப் பிரமாணம் செய்து கொண்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள் தற்போது அமெரிக்கா சென்று பேச்சுக்களில் ஈடுபட்டமையால் அவர்களது நாடாளுமன்ற உறுப்புரிமையைப் பறிக்க வேண்டும் எனவும், அவர்களைச் சிறையில் அடைக்க வேண்டும் எனவும் கூக்குரல்கள் எழுப்பப்படுகின்றன. சிறி லங்கா அமைச்சரவைப் பேச்சாளர் கெஹலிய ரம்புக்வெல தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தமிழ் மக்களின் ஏகப் பிரதிநிதிகள் அல்ல எனவும், அவர்களது தற்போதைய செயற்பாடுகள் தேசவி-ரோதமானவை எனவும் தனது "கண்டுபிடிப்பை" வெளியிட்டுள்ளார்.

இது தொடர்பில் வெளிவரும் செய்திகள் யாவையும் தமிழ் மக்களின் ஆயுதப் போராட்ட காலகட்டத்தை நினைவூட்டுவதாக அமைந்துள்ளதுடன், இலங்கைத் தீவில் இன முரண்பாடு எத்துணை ஆழமாக இருக்கின்றது என்பதைப் படம்பிடித்துக் காட்டுவதாகவும் உள்ளது. எந்தவொரு காலத்திலும் தமிழர்களுக்கு அற்ப சொற்ப உரிமைகளைக் கூட மனமுவந்து வழங்குவதற்குச் சிங்கள தேசம் தயாரில்லை என்பதுவும் நடப்பு நிகழ்வுகள் மூலம் மீண்டுமொருமுறை மெய்ப்பிக்கப்பட்டு உள்ளது. அமெரிக்கப் பேச்சுக்கள் தொடர்பில் சிங்களத் தரப்பில் வெளிப்படும் பிரதிபலிப்புக்கள் போரில் பெற்றுக் கொண்ட வெற்றி மமதையின் காரணமாக வெளிப்பட்டதாக அன்றி அளவிட முடியா அச்சத்தின் வெளிப்பாடாகவே உள்ளமை இங்கே குறிப்பிடத் தக்கது. இதனை வேறுவகையில் கூறுவதானால் அமெரிக்கா தலைமையிலான மேற்குலகம் கையிலெடுத்துள்ள போர்க் குற்றங்கள் என்ற துருப்புச் சீட்டு சரியான இலக்கைத் தொட்டுள்ளது எனலாம்.

மகிந்த ராஜபக்சவால் நியமிக்கப்பட்ட கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கையே "சர்வரோக நிவாரணி" எனப் பிரசாரப்படுத்தி வந்த சிங்களப் பேரினவாதம், அந்த அறிக்கை இன்னமும் வெளிவந்திராத நிலையில் மிகுந்த குழப்பத்தில் ஆழ்ந்துள்ளமை புலனாகின்றது. அமெரிக்கா எதனை எதிர்பார்த்ததோ அது எதிர்பார்த்ததையும்விட நன்றாகவே நடைபெற்றிருக்கின்றது என்பதையே நடப்பு நிகழ்வுகள் உணர்த்தி நிற்கின்றன.

பலரும் கற்பனை செய்வதைப் போன்று ஈழத் தமிழர்களின் பிரச்சனை என்ன, அவர்கள் எத்தகைய தீர்வை எதிர்பார்க்கின்றார்கள் என்பன போன்ற விடயங்களை அறிந்து கொள்வதற்காகவே

இரா சம்பந்தன் தலைமையிலான குழுவினர் அமெரிக்காவிற்கு அழைக்கப்பட்டார்கள் என்ற முடிவிற்கு வந்துவிட முடியாது. அண்மையில் விக்கிலீக்ஸ் இணையத் தளம் வெளியிட்ட பல தகவல்கள் மூலம் அரசியலில் ஈடுபடும் ஈழத் தமிழர்கள் பலரைவிட இது விடயத்தில் அமெரிக்கா அதிக அறிவைக் கொண்டுள்ளமை புலனாகின்றது.

மகிந்த குழுமத்திற்கு அழுத்தம் தருவதற்காகவே தமிழ்த் தேசியக் கூட்டமைப்புத் தூதுக்குழு அமெரிக்காவிற்கு வரவழைக்கப்பட்ட நிலையில் அந்த வாய்ப்பைக் கூட்டமைப்பு முறையாகப் பயன்படுத்திக் கொண்டுள்ளதா என்ற சந்தேகம் எழுவதைத் தடுத்துவிட முடியாமல் உள்ளது.

பேச்சுக்களில் கலந்துகொண்ட நான்கு நாடாளுமன்ற உறுப்பினர்களையும் தவிர வேறு எவருக்குமே என்னென்ன விடயங்கள் பேசப்படப் போகின்றன, என்னென்ன விடயங்கள் பேசப்பட்டன என்கின்ற தெளிவு இருப்பதாகத் தெரியவில்லை. பேச்சுக்களின் பின்னர் கூட "தேவையான அனைத்து விடயங்களும் பேசப்பட்டன" எனப் பூடகமாகக் கூறப்படுகின்றனவே தவிர தமிழ் மக்களின் ஜீவாதாரக் கோரிக்கைகளான தாயகம், தேசியம், தன்னாட்சி என்பவை தொடர்பில் பேசப்பட்டதா அது தொடர்பில் அமெரிக்கத் தரப்பில் தெரிவிக்கப்பட்ட கருத்துக்கள் என்ன என்பவை பற்றி எதுவும் வெளிப்படுத்தப்படவில்லை.

அமெரிக்கப் பேச்சுக்களுக்காகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அழைக்கப்பட்டதே அன்றி கூட்டமைப்பின் வேண்டுகோளுக்கு அமைய இந்தப் பேச்சுக்கள் ஒழுங்கு செய்யப்படவில்லை. ஆகவே, இங்கே தமிழ் மக்களின் நலன் என்பதை விட அமெரிக்காவின் நலனே விஞ்சியிருக்கும் என்பதை ஊகிப்பது கடினமான விடயமல்ல. கூட்டமைப்பு பேச்சுக்கு அழைக்கப்பட்டமைக்குக் கூட அதன் காத்திரமான அரசியல் பணியோ கடந்தகாலச் செயற்பாடுகளோ காரணமல்ல என்பதையும் மனதில் கொள்ள வேண்டியது அவசியம். தமிழ் மக்களின் மூன்று தசாப்தகால ஆயுதப் போராட்டமும் அதற்காகச் செலுத்தப்பட்ட அளப்பரிய விலையுமே இன்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அரியணை ஏற்றப் பட்டமைக்கான பிரதான காரணம். அதனைக் கூட்டமைப்பின் தலைவர்கள் மனதில் இருத்திச் செயற்பட்டேயாக வேண்டும்.

ஒரு காலகட்டத்தில் இன்றைய கூட்டமைப்பில் அங்கம் வகிக்கும் கட்சிகள் யாவையுமே விடுதலைப் புலிகளால் விடுதலைக்கு எதிரானவையாக கணிக்கப் பட்டிருந்தவையே. ஆனால், காலப் போக்கில் தமிழ் மக்களின் விடுதலையை மனதார ஏற்றுச் செயற்பட முன்வந்த நிலையிலேயே நான்கு கட்சிகள் கொண்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உருவாகி அது விடுதலைப் புலிகளின் அங்கீகாரத்தையும் பெற்றுக் கொண்டது.

தமிழர் அரசியலைப் பொறுத்தவரை அனைத்தையும் தீர்மானிக்கும் சக்தியாக விடுதலைப் புலிகள் இருந்த காலம் மாறி இன்று அந்தச் சக்தியாகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உருவெடுத்துள்ளது. இது காலத்தின் கட்டாயம். அதேவேளை, தமிழர்களின் குரலை ஒலிப்பதற்கு உலக அரங்கில் களம் தேடிய காலம் போய் உலகமே அழைத்துத் தமிழரின் கதையைக் கேட்கும் காலம் தோன்றியுள்ளது. எனவே, இந்த அரிய வாய்ப்பை கூட்டமைப்பு பயன்படுத்திக் கொள்ள வேண்டும். இலங்கைத் தீவில் சிங்கள மக்களைப் போன்றே சமஉரிமை பெற்ற மக்களாக, கௌரவத்துடன் வாழக் கூடிய ஒரு தீர்வைப் பெற்றுத் தருவதில் கூட்டமைப்பு வெற்றி பெறுமாக இருந்தால் அதன் புகழ் ஈழத் தமிழர் மத்தியில் காலாகாலம் நிலைத்திருக்கும்.

ஒரு சில வருடங்களுக்கு முன்னர் நாடாளுமன்றங்களுக்கு இடையேயான ஒன்றியத்தின் நிகழ்விற்காக இரா சம்பந்தன் அவர்கள் சுவிற்சர்லாந்தின் ஜெனீவா மாநகருக்கு வருகை தந்திருந்தார். தாயகத்தில் போர் மிகவும் உக்கிரமாக நடைபெற்றுக் கொண்டிருந்த காலம் அது. அதன்போது தமிழ் மக்களின் எதிர்காலம் தொடர்பில் உரையாடிய அவர், "தமிழ் மக்களுக்கு நல்லதொரு தீர்வு கிட்டுமானால் அதற்குக் காரணமாக ஒரு தனிநபரே இருப்பார். அதேவேளை, ஒரு மோசமான நிலை உருவானாலும் கூட அதற்கும் ஒரு தனிநபரே காரணமாக இருப்பார்" எனக் கூறியிருந்தார். இக் கூற்று இன்று திரு சம்பந்தனுக்குப் பொருந்தி வருகின்றது. வரலாறு இன்று அத்தகைய முடிவெடுக்கும் நிலைக்கு அவரை இட்டுச் சென்றுள்ளது.

முன்னைய தமிழ்த் தலைவர்களைப் போன்று சலுகைகளுக்காக உரிமைகளை விட்டுக் கொடுத்தார் என்ற அவச் சொல்லுக்கு அவரும் ஆளாகப் போகின்றாரா? அல்லாதுவிடில் வரலாறு வழங்கிய வாய்ப்பை முறையாகப் பயன்படுத்தி தமிழர்களின் உரிமைகளைப் பெற்றுத் தந்தவர் என்ற பெருமையைப் பெற்றுக் கொள்ளப் போகின்றாரா? எதுவாக இருந்தாலும் தமிழரின் தலைவிதி இன்று அவர் கையிலேயே உள்ளமையை மறுத்து விடுவதற்கில்லை.


பாரிஸ் லாசப்பல் மாநகரில்
ஆடைத்தெரிவுகளின் அழகு மாடம்
தங்கம் ரெக்ஸ்
4, rue perdonnet
75010 Paris
France
மலிவான விலையில் மனம் மகிழ்ந்திடும்
தரமான தெரிவுகள்
அனைத்தும் தங்கத்தின் பெறுமதி!
Tel: 01 40 36 00 35
Port: 06 23 54 65 14



புலிகளும் புலிகளின் அசையும் அசையாச் சொத்துகளும் தமிழ் இனத்துக்குச் சொந்தம்!

தமிழ் இனத்தின் அரசியல் வரலாற்றில் சாத்வீகப் போராட்டம் பயன் தராத நிலையில் உருவானதே பல் வேறு விடுதலை இயக்கங்களும் யதப் போராட்டமும். எமது சாத்வீக அரசியல் பயன் தராமற் போனதற்கு முழுப் பொறுப்பையும் சிங்கள அரசியல் தலைமைகளும் சர்வதேச அரசுகளுமே ஏற்க வேண்டும்.

பல முறை சிங்களத் தலைமை செய்து கொண்ட ஒப்பந்தங்களையும் உடன் படிக்கைகளையும் மாறி மாறிப் பதவிக்கு வந்த சிங்கள ஆட்சியாளர்களே ஒரு தலைப் பட்சமாக மீறிக் கிழித்து எறிந்தனர். பண்டா செல்வா, டட்லி செல்வா செய்த ஒப்பந்தங்களில் ஒன்றேனும் செயற்பட்டிருந்தால் ஆயுதப் போராட்டமே தொடங்கி இருக்காது.

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் பிரேமதாசாவுடனும் சந்திரிகாவுடனும் ரணிலுடனும் செய்து கொண்ட ஒப்பந்தங்கள் இந்தியா மற்றும் சர்வ தேச அரசுகளும் இணைத் தலைமை நாடுகளும் வழங்கிய ஆதரவுடனே ஸ்ரீலங்கா அரசுகள் மீறி உள்ளமை உலகம் அறியும். 1987 முதல் திலீபன் முதலாக எத்தனை பேர் உண்ணாவிரதம் இருந்தும் சாவினைத் தழுவிய போதும் எந்த ஒரு அரசும் எமது அரசியல் கோரிக்கை என்ன என்பதைக் கேட்கக் கூட முன்வரவில்லை.

ஆயினும் புலிகளைப் பயங்கரவாதத் தடைப் பட்டியலில் பிரகடனப் படுத்தி இந்த நாடுகள் மனிதாபிமானப் போர் எனவும் பயங்கரவாத அழிப்புப் போர் என்ற பொய்ப் பிரச்சாரத்தின் மூலம் தமிழின அழிப்பைச் செய்தனர். ஆனால் போரை சாட்சிகள் அற்று இலங்கை அரசு நடத்தவும் போர்க் குற்றம் செய்யவும் அதன் பின்னர் அரசு செய்யும் மனித உரிமை மீறல்களைத் தடுக்காமலும் இவை தமிழ் இன அழிப்பில் பெரும் பங்கு வகித்து வருகின்றன.

ஆனால் சிங்கள அரசோ தமிழின் நிலங்களையும் கடல் வளங்களையும் புலிகளின் சொத்துக்கள் எனக் கூறி மீள் குடியேற்றம் மற்றும் தொழில் வளங்களை அனுமதிக்காமல் பிச்சைக்காரர் ஆக்கி அடிமைகளாக்கி இராணுவ ஆட்சி நடத்துகிறது. சிங்களக் குடியேற்றங்களும் புத்த விகாரைகளும் சிங்கள மொழித் திணிப்பும் சிங்கள அதிகாரிகளும் தமிழ் மக்கள் மீது முழுமையான இன அழிப்பை அரங்கேற்றி வருகிறது.

ஆனால் சர்வதேச அரசுகள் பாதிக்கப் பட்ட தமிழருக்கான எவ்வித நீதியோ நிவாரணமோ கிடைக்கச் செய்ய முயலாது அமைதி காக்கின்றன. அதே வேளையில் தமிழினம் இன அழிப்பை எதிர்கொண்டு அழிக்கப்படுகிறது என்ற உண்மையைப் பேசவும் கூடாது என்ற மறைமுக அழுத்தங்களைக் கொடுப்பதன் மூலம் இலங்கை அரசின் குற்றச் செயல்களுக்கு ஆதரவளித்து வருகின்றன.

வடக்கிலும் கிழக்கிலும் பல்லாயிரம் ஏக்கர் விளை நிலங்களும் பயன் மிகு வளம் நிறைந்த தரிசு நிலங்களையும் சிங்கள மக்களுக்கும் வெளிநாட்டு முதலீட்டாளருக்கும் விற்றுப் பணத்தை ஊழலுக்கும் தெற்கை வளப் படுத்தவும் எடுத்துப் போகின்றது.

இந்நிலையில் அமைச்சர் சம்பிக ரணவக்க தமிழருக்கும் முஸ்லீம்களுக்கும் மட்டும் எனத் தனிப் பிரதேசமே கிடையாது எனவும் ஆயிரம் ஆண்டுகளுக்கு மேலாக நடை முறையில் இருந்து வரும் தமிழரின் தேச வழமைச் சட்டம் செல்லுபடி அற்றது என அரசு சட்டம் நிறைவேற்ற வேண்டும் அதன் மூலம் நிலப் பிரச்சனை இல்லாது போய்விடும் என வாதிடுகிறார்.

தமிழரின் தேச வழமைச் சட்டம் தமிழரின் தேசியத்தின் ஆணி வேராகத் திகழும் வரலாற்று ஆதாரமாக உள்ளது. இந்தச் சட்டத்தையும் நீக்கிச் செயலற்றது ஆக்கி விட்டால் நிலங்கள் பறிக்கப் பட்ட நிலையில் ஈழத் தமிழரின் தாயகமும் தேசியமும் தன்னாட்சி உரிமையும் சாகடிக்கப் பட்டுவிடும். அப்படிச் சாகடிக்கப் பட்ட பின்னர் தமிழினம் வரலாற்றில் எந்தக் காலத்திலும் எந்த வித அரசியல் சுதந்திரமும் பெற முடியாத நிரந்தரமான அடிமைநிலைக்குத் தள்ளி விடும்.

இதுவரை காலத்துக்குக் காலம் இன வன் செயல் மூலம் தமிழரின் சொத்துக்களைக் கொள்ளையிட்டு வந்த சிங்களம் மகிந்தவின் ஆட்சியில் வெளிநாடுகளின் ஆதரவுடன் புலிகளை அடியோடு அழித்ததும் அல்லாமல் தமிழரின் நலங்களையும் வளங்களையும் ஒட்டு மொத்தமாகப் பறித்து எடுத்துக் கொண்டு விட்டது.

இப்போது நல்ல பாம்பாகப் பல தமிழரால் பார்க்கப்பட்டு வந்த ஐக்கிய தேசியக் கட்சியும் ரணில் விக்கிரமசிங்கவும் வெளிநாடுகளில் உள்ள புலிகளின் பணம் காசு சொத்துகள் அனைத்தையும் ஸ்ரீலங்கா அரசு அபகரிக்க வேண்டும் என்ற கோரிக்கையை முன் வைத்து வருகிறார்.

புலிகளின் சொத்துக்கள் எவை எவ்வளவு எங்கே என்ன நிலையில் உள்ளனவோ தெரியாது. ஒரு வேளை ரணிலின் அரசியலுக்கு இப்படியான ஒரு கோரிக்கை அவசிய தேவையாக இருக்கலாம். ஆனாலும் அப்படியாக அரசு கையகப்படுத்தும் நிலையில் நட்டம் அடைவது தமிழினமாகவும் இலாபம் அடைவது சிங்களம் ஆகவும் இருக்கும். எனவே இதனைத் தமிழினம் எப்பாடு பட்டேனும் தடுக்க வேண்டும்.

வடக்கு கிழக்கில் உள்ள நிலங்களும் ஏனைய வளங்களும் தமிழ் மக்களின் மூதாதையர் தேடிய சொத்துக்கள். அவற்றை ஆள்வதும் அனுபவிப்பதும் தமிழ் மக்களின் சட்டரீதியான உரிமைகளாகும். அவற்றைப் பறித்து எடுக்க முயலும் எவரும் கொள்ளையரே. தலைமுறை தலைமுறையாக தமிழ் இனம் பெற்றுக் கொண்ட சொத்துகளைக் கொள்ளையர் இடம் இருந்து பாதுகாத்து அடுத்த தலைமுறைக்கு கையளிக்கும் பாரிய பொறுப்பு இன்றைய தலைமுறைக்கு இருக்கிறது.
இதனைப் போன்றே வெளிநாடுகளில் உள்ள புலிகளின் அசையும் அசையாச் சொத்து அத்தனையும் புலம் பெயர் தமிழரின் சொந்த உழைப்பால் தேடிய தேட்டமாகப் பெற்ற சொத்து. அதனைத் தேடிய நோக்கம் தமிழீழ விடுதலை பெறுவதே நோக்கமாகக் கொண்டு சேர்க்கப்பட்டவை. அதனை எந்த அரசும் பறித்துப் போக தமிழ் இனம் இடம் அளிக்கக் கூடாது.

எனவே புலம் பெயர் தமிழ் சமூகத்தில் உள்ள சட்ட வல்லுனர்களும் விடுதலைச் செயற் பாட்டாளரும் இது விடயமாக ஏற்ற தடை உத்தரவை சர்வதேச நீதி மன்றம் மூலமாகப் பெற்று அனைத்தையும் பொது நம்பிக்கை நிதியம் ஒன்றை உருவாக்கி அந்த நிதியை சீரழிந்து கிடக்கும் வடக்கு கிழக்குப் பகுதி மக்களின் வாழ்வைச் சீரமைக்கவும் தொழில் நிறுவனங்கள் மூலம் வேலை வாய்ப்புகளை எமது மக்களுக்கு ஏற்படுத்தவும் பயன்படுத்த வேண்டும்.

நாம் உடனடியாக இந் நடவடிக்கையில் இறங்குவது அவசியமாகும். ஏற்கனவே கொழும்பில் தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் நிதிகளை இலங்கை அரசு பறித்துக் கொண்டதையும், அமெரிக்காவிலும் த.பு.வா.க. நிதி அந்நாட்டு அரசினால் முடக்கப்பட்டு உள்ளதையும் நாம் மறந்து விடலாகாது.



Lycamobile
சுவீடன்

தேசிய மற்றும் சர்வதேச நாடுகளுக்கான அழைப்புகள் 1öre யில் இருந்து



	வீட்டு தொலைபேசி	கைத் தொலைபேசி
அவுஸ்ரேலியா	0.01kr /min	1.89kr /min
இலங்கை	1.39kr /min	1.49kr /min
இந்தியா	0.39kr /min	0.39kr /min

	வீட்டு தொலைபேசி	கைத் தொலைபேசி
கனடா	0.39kr /min	0.39kr /min
ஐக்கிய ராஜ்ஜியம்	0.39kr /min	1.49kr /min
சுவிட்ஸர்லாந்து	0.39kr /min	2.49kr /min

தங்களது தற்போதைய கைத்தொலைபேசி
எண்ணை Lycamobile க்கு மாற்றி 100Kr
பெறுமதியான நிமிடங்களை இலவசமாக பெற்றிடுங்கள்!

லில் இருந்து

Lycamobile 0-.* Lycamobile

மேலதிக விபரங்களுக்கு

www.lycamobile.se 0852 054977

*சலுகை கட்டணங்கள் கால வரையறைக்குட்பட்டவை. மேலதிக விபரங்களுக்கு www.lycamobile.se

Lyca mobile
Call the world for less

Lycamobile வாங்கக்கூடிய இடங்கள்:

7 Eleven, Pressbyrån, Vi Butikerna, Hemköp (För oss som älskar mat), payzone, Coop Konsum, Coop Forum, Coop Nära, Coop Extra, Willy:s Hemma, Willy:s, ATG



அளவெட்டி தந்த அறிவுச் செல்வங்களில் மற்றுமொருவர் திருநெல்வேலி சைவாசிரியர் கலாசாலையில் இருபத்தெட்டு வருடங்கள் உப அதிபராகக் கடமை புரிந்தவர் திரு.பொ.கைலாசபதி அவர்கள். அளவெட்டியில் பிறந்த இவர் நீண்ட காலமாகத் தனது தொழில் நிமித்தமாகத் திருநெல்வேலியிலேயே வாழ்ந்தாலும் தனது இறுதிக் காலத்தில் தான் பிறந்த ஊரான அளவெட்டி நரசிங்க வைரவர் கோவிலிற்கு அருகில் உள்ள தனது வீட்டிலேயே வசித்து அமரரானார்.

இலக்கியத்துறையில் இன்றும் அழியாப் புகழுடன் வாழும் இலக்கியங்களைப் படைத்தவர்களில் சிலரை அளவெட்டியும் தன்னகத்தே கொண்டுள்ளது. அதில் அ.ந.கந்தசாமி என்னும் படைப்பாளி காலத்தை வென்றவர்! கவிதை, சிறுகதை, நாடகம், நாவல், விமர்சனம் என இலக்கியத்தின் பல பகுதிகளையும் தொட்டவர்! இவர் பிரான்ஸின் புகழ்பெற்ற எழுத்தாளரான எமிலி சோலாவின் "நாநா" என்னும் நாவலை தமிழில் மொழிபெயர்த்து இலக்கியத்திற்குப் பெருமை சேர்த்தவர். தீவிர முற்போக்குச் சிந்தனையுடைய இவர் கம்யூனிஸ்ட் கட்சியின் உத்தியோக பூர்வமான பத்திரிகையான தேசாபிமானி, பத்திரிகையின் ஆசிரியர் குழுவில் அங்கம் வகித்தவர். ஈழத்து மறுமலர்ச்சி எழுத்தாளர்களில் முக்கியமானவர் அ.ந.க. அவர்கள்.

அடுத்தவர் நாற்பதுகளில் பூத்த "மறுமலர்ச்சி" என்னும் பத்திரிகையின் ஸ்தாபக உறுப்பினரான அ.செ.முருகானந்தம் அவர்கள். இவர் ஈழகேசரி, வீரகேசரி, சுதந்திரன் ஆகிய பத்திரிகைகளில் பணியாற்றியவர். அந்தக்காலத்தில் தமிழ்நாட்டில் வெளிவந்த சிறுகதைத் தொகுப்பொன்றில் இடம்பெற்ற இவரது "மனித மாடு" என்னும் சிறுகதை அனைத்து இலக்கியவாதிகளாலும் அதிசயமாகப் பார்க்கப்பட்ட ஒன்றாகும்!.

தொடர்ந்து நாம் சந்திக்கப்போவது "மகாகவி" என்ற உருத்திரமூர்த்தி அவர்களை. தமிழ்க் கவிதைத்துறையில் தனக்கென ஒரு தனி இடத்தைப் பிடித்துக்கொண்டவர். தமிழ்க் கவிதையை எளிமையாகவும், அழகாகவும் நகர்த்தியதில் இவரது பங்கு முக்கியமானது. இவரின் "கோடை" "புதியதொரு வீடு" என்னும் கவிதை நாடகங்களும் "கண்மணியாள் காதை" என்ற வில்லுப்பாட்டும் தமிழர் வாழும் இடங்களில் எல்லாம் பலமுறை மேடையேற்றப்பட்டிருக்கின்றன. இன்றும் மேடையேற்றப்பட்டு வருகின்றன.

அமரர் மகாகவி அவர்களுடய புதல்வர் திரு. சேரன் அவர்களும் சிறந்த முற்போக்குச் சிந்தனையுடைய இலக்கியவாதி. இவருடைய எழுத்துக்கள் பல "இரண்டாவது சூரிய உதயம்" "யமன்" "கானல் வரி" "எலும்புக்கூடுகளின் ஊர்வலம்" "எரிந்துகொண்டிருக்கும் நேரம்" போன்ற பெயர்களில் நூல் உருவாக வெளிவந்திருக்கின்றன. தற்பொழுது கனடாவில் ஜோர்க் பல்கலைக் கழகத்தின் அகதிகள் ஆய்வுக்கான நிலையத்தில் முதுநிலை ஆய்வாளராகவும்,

அதே பல்கலைக் கழகத்தில் சமூகவியல் விரிவுரையாளராகவும் கடமையாற்றுகின்றார்.

இலங்கைவாழ் தமிழ் மக்களின் வரலாற்றைத் திரும்பிப் பார்க்கும்போது மறக்கமுடியாத அரசியல் தலைவர்களில் ஒருவரான அமரர் திரு. வி.பொன்னம்பலம் அவர்கள் பிறந்த மண்ணும் அளவெட்டிதான். சுன்னாகம் ஸ்கந்தவரோதயாக் கல்லூரியில் தனது கல்விச் சேவையை ஆரம்பித்து பின்னர் முள்ளியவளை மகாவித்தியாலயத்தின் அதிபராகக் கடமையாற்றி பாட்டாளி மக்களின் உயர்விற்காகப் பாடுபட்டவர்.

யாழ் மண்ணில் இடதுசாரி இயக்கத்தின் ஆரம்பகாலம் திரு.வி.பொன்னம்பலம் அவர்களோடு பின்னிப் பிணைந்ததாகும். யாழ்ப்பாணத்தில் கூட்டுறவு இயக்கத்தை விரிவுபடுத்துவதில் கடுமையாக உழைத்த இவரைத் தலைவராகக் கொண்ட அளவெட்டி மல்லாகம் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் யாழ் மாவட்டத்தில் முன்னணியில் நின்ற பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களில் ஒன்றாகும். இலங்கை பாராளுமன்றத் தேர்தலில் காங்கேசன்துறைத் தொகுதியில் பலமுறை போட்டியிட்டும் பாராளுமன்றம் செல்லும் வாய்ப்பு இவருக்குக் கிடைக்கவேயில்லை!.

அளவெட்டியை சரஸ்வதி குடியிருக்கும் கிராமம் என்று சொல்வார்கள்! காரணம் கலைகளிலே தெய்வீகக் கலை எனப் போற்றப்படும் நாதஸ்வரக் கலையில் புகழ்பெற்ற ஜாம்பவான்களெல்லாம் பிறந்த மண் அளவெட்டிதான்!.

தவில் நாதஸ்வர இசையில் நாடறிந்த சிங்கமாக விளங்கிய தவிலரசன் தட்சணாமூர்த்தி அவர்களை யாரும் எளிதில் மறந்துவிடமுடியாது! இவர் இலங்கையில் மட்டுமல்ல சிங்கப்பூர், மலேசியா, தமிழ்நாடு என தமிழர்கள் வாழ்கின்ற நாடுகளில் எல்லாம் தனது தவில் ஓசையால் மக்களின் மனங்களை வென்றவர்!

சுமார் நாற்பது ஆண்டுகளுக்கு முன்னரே தவில் வாசிப்பதற்கு ஆயிரத்து ஐநூறு ரூபா சன்மானம் வாங்கிய முதல் தவில் கலைஞர் தட்சணாமூர்த்தி அவர்களே! இவரின் தவில் வாசிப்பைக் கேட்டுவிட்டு "உலகத்தின் எட்டாவது அதிசயம்" என்று மணிஜயர் அவர்களும், "இவன் கடவுளின் அவதாரம்" என்று நாதஸ்வரக் கலைஞர் திருதுறைப்பூண்டி சொக்கலிங்கம் அவர்களும் புகழாரம் சூட்டியிருக்கின்றார்கள். இத்தனை சிறப்புகளும் உடைய அந்தத் தெய்வீகக் கலைஞன் 13-05-75ல் தனது நாற்பத்திரண்டாவது வயதில் இறைவனடி சேர்ந்தார்.

தட்சணாமூர்த்தி அவர்களுக்கு நிகரான நாதஸ்வரக் கலைஞர் அளவெட்டி என்.கே. பத்மநாதன் அவர்களாவார். இவரின் தந்தையார் என்.கந்தசாமிப்பிள்ளை அவர்கள் அளவெட்டி கும்பழாவளைப் பிள்ளையார் ஆலயத்தின் ஆஸ்த்தான நாதஸ்வரக் கலைஞராவார். அதேபோல் அமரர் பத்மநாதன் அவர்களும் பல ஆண்டுகளாக நல்லூர் கந்தசாமி கோவிலின் ஆஸ்த்தான நாஸ்வரக் கலைஞராக இருந்துள்ளார். இலங்கை அரசின் மிக உயர்ந்த கௌரவ விருதான "ஸ்ரீ கலாசூரியர்" விருதினைப் பெற்ற இவர் தனக்கு நிலையானதொரு வாரிசு வேண்டுமெனக் கருதி தனது மகன் முரளிக்கு நாதஸ்வரம் பயிற்றுவித்து பின்னர் வித்துவான் பட்டப்படிப்பை இந்தியாவில் படிப்பித்து நாடு திரும்பிய முரளியை 1987ல் இந்திய அமைதிப் படையின் குண்டு உயிரைப் பறித்தெடுத்தது.

அளவெட்டியில் பிறந்து அம் மண்ணுக்கு புகழ் சேர்த்த மற்றும் சில தவில் கலைஞர்களை இங்கு பார்ப்போம். இவர்களில் மூத்த தவிலாசிரியர் திரு.கணபதி.. இவரது மகன் கணேசரத்தினம் அவர்கள் மிகச்சிறந்த தவிற்கலைஞராவார். மற்றும் தவில் மேதை குமரகுரு, நாஸ்வர மேதைகள் பாலகிருஸ்ணன், சிதம்பரநாதன், சிவகுருநாதன் போன்றவர்களுடன் இன்று முன்னணித் தவிற் கலைஞராக விளங்குபவர் அமரர் தட்சணாமூர்த்தி அவர்களின் புதல்வர் உதயசங்கராவார். இவர் யாழ் பல்கலைக்கழக இசைப்பீடத்தால் "கலாநிதி" பட்டம் சூட்டிக் கௌரவிக்கப்பட்டமையும் குறிப்பிடத்தக்கதாகும்.

அளவெட்டியின் சிறப்புமிக்க மனிதர்களையெல்லாம் வரலாற்றில் பதிந்துகொண்ட நாங்கள் அளவெட்டியில் பிறந்த மறக்கமுடியாத இரண்டு இளைஞர்களை இறுதியில் நினைத்துக் கொள்கின்றோம்! அவர்கள் இலங்கையில் அவசரகாலச் சட்டம் அமுலாக்கப்பட்ட மறுநாள் இலங்கை இராணுவத்தினரால் படுகொலை செய்யப்பட்ட இறைகுமாரன், உமைகுமாரன் ஆகிய இணைபிரியாத இரண்டு நண்பர்களாவார்கள்.

தங்களின் உழைப்பையும், உயிரையும் தமிழ் மக்களின் விடிவிற்காகவும், விடுதலைக்காகவும் முழுமையாக அர்ப்பணித்த இந்த இரண்டு இளைஞர்களின் உயிர்களை கொலைஞர்கள் சூறையாடியதால் தமிழர்களின் விடுதலைப் போராட்டம் வீறுகொண்டெழுந்தது ஒரு வரலாறாகும்.

கார்த்திகை 27

தேசிய மாவீரர் நாள் 2011

Germany:
Helmut König halle
Strobelalle 60, 44139 Dortmund

Belgium:
De saal Rubens
Statiesstraat 175, Berchem

France:
96, avenue de la Division Leclerc
93350 le Bourget

Switzerland:
Forum Fribourg

Denmark:
Herning, Holbaek

Norway:
Vallahovin (Helsfyr)
Oslo

Italy:
Don orione
Balermo

Netherland:
TMG Congres en partycenter
Sumatraweg 22,
1335 JM Almere - Buiten

United Kingdom:
South East London
Bromley

North West London
Shree Kadwa Patidar Centre
Harrow, Middlesex

South West London
Memon Centre
London

North East London
Barking Essex

Coventry
Glasgow, Scotland



வெளியீட்டுப்பிரிவு, அனைத்துலகத் தொடர்பகம்,
தமிழீழ விடுதலைப்புலிகள்- தமிழீழம்



நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கை மகிந்த அரசாங்கத்தை பாதுகாக்குமா?

—கொழும்பிலிருந்து பவித்திரன்.

போர்க் குற்றங்கள் தொடர்பில் சர்வதேச அழுத்தங்கள் அதிகரித்திருக்கும் நிலையில், அதிலிருந்து தப்பித்துக்கொள்வதற்காக புதிய உபாயம் ஒன்றை மகிந்த ராஜபக்ஷ அரசாங்கம் வகுத்துக்கொண்டிருப்பதாக தகவல்கள் கசிந்திருக்கின்றது. எதிர்வரும் மார்ச் மாதத்தில் ஜெனிவாவில் நடைபெறவிருக்கும் ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் அடுத்த கட்டக் கூட்டத் தொடரில் இலங்கை பெரும் நெருக்கடிகளை எதிர்கொண்டுள்ள நிலையில், கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்கத்துக்கான ஆணைக்குழுவின் அறிக்கையை அரசாங்கம் வெளியிடவிருக்கின்றது.

போர்க் குற்றங்கள் தொடர்பில் உள்நாட்டில் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின் அடிப்படையில் வெளியாகவிருக்கும் இந்த அறிக்கையை சர்வதேச ரீதியாக உருவாகியிருக்கும் அழுத்தங்களைச் சமாளிக்கும் வகையில் அரசாங்கம் வெளியிடவிருப்பதாகத் தெரிகின்றது. ஒரேயடிகாக போர்க் குற்றங்கள் இடம்பெறவேயில்லை எனக் கூறிவிட்டால், சர்வதேச சமூகம் ஏற்றுக்கொள்ளாது என்பதால், போர்க் குற்றங்களுக்கான பழியை முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகா மீது போட்டுவிட்டுத் தப்பித்துக்கொள்வதுதான் அரசின் உபாயமாகவிருப்பதாக கொழும்புத் தகவ்கள் தெரிவிக்கின்றன.

குறிப்பிட்ட அறிக்கை இம்மாத நடுப்பகுதியில் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவிடம் கையளிக்கப்படும் எனவும், அதனைத் தொடர்ந்து அது பகிரங்கப்படுத்தப்படும் எனவும் அரச தரப்புச் செய்திகள் தெரிவிக்கின்றன. போர்க் குற்றங்கள் தொடர்பில் பொறுப்புக் கூறும் வகையில் சர்வதேசப் பொறிமுறை ஒன்று அவசியம் என்ற சர்வதேசத்தின் அழுத்தங்களுக்குப் பதிலளிக்கும் வகையில் அரசாங்கத்தினால் நியமிக்கப்பட்ட இந்த ஆணைக்குழுவின் மீது பிரதான அரசியல் கட்சிகள் எதுவுமே நம்பிக்கை வைத்திருக்கவில்லை. இருந்தபோதிலும் இப்போது அறிக்கை வெளியிடப்படுவது உள்நாட்டிலும் சர்வதேசத்திலும் பலத்த எதிர்பார்ப்பக்களை ஏற்படுத்தியிருக்கின்றது.

படைகளுக்கும், விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான உள்நாட்டு போர் முடிவுக்குவந்த பின்னர், இந்தப்போர் தொடர்பிலும், அதில் ஏற்பட்ட மனித இழப்புகள் குறித்தும் உள்நாட்டிலும், வெளிநாடுகளிலும் பல்வேறு குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டன. சர்வதேச அங்கீகாரத்தைப்பெற்ற சுதந்திரமானதும், நீதியானதுமான விசாரணைப் பொறிமுறை ஒன்று அவசியமென மேற்குலக நாடுகள் பலசந்தர்பங்களில் இலங்கையை வலியுறுத்தி வந்தது. ஐ.நா. செயலாளர் நாயகமும் இது தொடர்பில் அழுத்தங்களைக் கொடுத்திருந்தார். ஆனாலும் இவ்வாறான சர்வதேச பொறிமுறை நாட்டின் இறைமையைப் பாதிப்பதாக அமையும் எனகூறிய அரசாங்கம், இலங்கையின் உள்நாட்டுப் பொறிமுறையாக ஒரு ஆணைக்குழுவை நியமிக்கப்போவதாக சர்வதேசத்திற்கு உறுதியளித்தது.

அதனப்படையில் போர்க் குற்றச்சாட்டுக்களுக்கு பதில் கூறும் நோக்குடன் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ முன்னாள் சட்டமா அதிபர் சீ.ஆர்.டி. சில்வா தலைமையில் கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவை நியமித்தார். ஆணைக்குழுவானது வடக்குகிழக்கு மாகாணங்கள் உள்ளிட்ட நாட்டின் பல்வேறு பிரதேசங்களிலும் அமர்வுகளை நடத்தி மக்களிடமிருந்து சாட்சியங்களை கேட்டறிந்ததுடன், எழுத்துமூல சாட்சியங்கள்

பலவற்றையும் பெற்றுக்கொண்டது. அதிகாரிகள், கட்சித் தலைவர்கள், சமூகப் பிரதிநிதிகள், அரசசார்பற்ற நிறுவனப் பிரதிநிதிகள் என பலரிடமிருந்தும் சாட்சியங்களை பதிவுசெய்தது. எழுத்துமூலமான சாட்சியங்கள் பலவும் பெறப்பட்டிருந்தன.

அத்துடன் முன்னாள் ஜனாதிபதி சந்திரிக்கா குமாரதுங்க, எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க ஆகியோருக்கு ஆணைக்குழு அழைப்பு அனுப்பியிருந்தபோதும் அவர்கள் சாட்சியமளிக்க ஆர்வம் காட்டியிருக்கவில்லை. ஆவ்வாறே தமிழ் தேசியக் கூட்டமைப்பு தலைவர் இரா. சம்பந்தன், முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் ஆகியோர் ஆணைக்குழுமுன் சாட்சியமளிப்பார்கள் எனக்கூறப்பட்ட போதிலும் இறுதியில் அவர்கள் சாட்சியமளிக்கவில்லை.

இதனைவிட சர்வதேச ரீதியான மகிந்த உரிமைகளுக்குக் குரல் கொடுக்கும் அமைப்புக்களான சர்வதேச ரீதியாக சர்வதேச மன்னிப்புச் சபை, சர்வதேச மனித உரிமைகள் கண்காணிப்பகம் ஆகியவற்றுக்கும் சாட்சியமளிக்குமாறு நல்லிணக்க ஆணைக்குழு அழைப்புவிடுத்தது. இருந்தபோதும் குறித்த அமைப்புக்கள், மகிந்த ராஜபக்ஷ நியமித்த நல்லிணக்குழுமுன் தாம் சாட்சியமளித்தால் அது இலங்கை அரசாங்கத்தின் பிரச்சாரங்களுக்குத் துணைபோவதாக அமைந்துவிடுமெனகூறி சாட்சியமளிக்க முன்வரவில்லை. எனினும் இவ்விரண்டு சர்வதேச அமைப்புக்களின் சாட்சியங்கள் முக்கியத்துவமிக்கதென சில தரப்புகள் கூறியதையடுத்து மூன்றாம் நாடொன்றில் நல்லிணக்க ஆணைக்குழு மனித உரிமைகள் கண்காணிப்பகம் மற்றும் சர்வதேச மன்னிப்புச் சபை ஆகியவற்றின் சாட்சியங்களை பெறமுயன்றது. இருந்துபோதும் சிங்கள கடும்போக்காளர்களின் எதிர்ப்பின் காரணமாக அந்தமுயற்சியும் கைவிடப்பட்டது.

இதேவேளையில், நல்லிணக்க ஆணைக்குழு தமது அறிக்கையை சமர்ப்பிப்பதற்கு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ அரசாங்கம் கால அவகாசத்தை வழங்கியிருந்தபோதும் அந்த கால அவகாசத்திற்குள் அறிக்கை தயாரிக்கப்படாமையால் ஆணைக்குழுவின் பதவிக் காலமும் நீடிக்கப்பட்டது.

இவ்வாறு தமது நடவடிக்கைகளை ஆமைவேகத்தில் நகர்த்திச்சென்ற கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க அணைக்குழவின் கால வரையறை எதிர்வரும் 15 ஆம் திகதியுடன் முடிவடையும் நிலையில் அறிக்கையைச் இன்னும்சில தினங்களில் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவிடம் கையளிக்கப்போவதாக அறிவித்துள்ளது.

நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கையை பகிரங்கப்படுத்தப்பட மாட்டாதெனவும், அதற்கான அதிகாரம் தம்மிடம் இல்லையெனவும் அந்த ஆணைக்குழுவின் பேச்சாளர் லக்ஸ்மன் விக்கிரமசிங்க கூறியுள்ளார். எனினும் ஆணைக்குழுவின் அறிக்கையை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ பாரராளுமன்றம் மூலம் பகிரங்கப்படுத்துவாரென வெளிவிவகார அமைச்சர் போராசிரியர் ஜீ.எல்.பீரிஸ் இப்போது அறிவித்துள்ளார். நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கை நவம்பர் 15 ஆம் திகதி ஜனாதிபதியிடம் கையளிக்கப்படுமென அறிவித்துள்ள பேராசிரியர் பீரீஸ், ஆணைக்குழுவின் அறிக்கை பகிரங்கமாகுவதையே ஜனாதிபதி விரும்புவதாகவும் மேலும் தெரிவித்தள்ளார். அதனால், அறிக்கை கையளிக்கப்பட்ட ஒரு இரு தினங்களுக்கு இடையில் அதன் விபரங்கள் வெளியிடப்படும் என எதிர்பார்க்கலாம்.

இதேவேளையில், சர்வதேச ரீதியாகவும் இந்த அறிக்கை குறித்த எதிர்பார்ப்புக்கள் அதிகரித்துள்ளது. நல்லிணக்க ஆணைக்குழு வெளியிடவுள்ள அறிக்கை குறித்து கூடிய எதிர்பார்ப்புடன் காணப்படுவதாக அமெரிக்கா கூறியுள்ளது. அமெரிகா ராஜாங்க திணைக்கள பேச்சாளர் விக்ரோரியா நுலண்ட் இதுதொடர்பில் வியாழக்கிழமை வாசிங்கடனில் நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் தெரிவிக்கையில், கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு அதிக எதிர்பார்ப்பை ஏற்படுத்தியுள்ளது. அறிக்கை உயர்ந்த தரத்துடன் அமைய வேண்டுமென்பதே அமெரிககாவின் ஆர்வமாகும் எனக் குறிப்பிட்டார். நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கையின் சிபார்சுகளை இலங்கை ஆட்சியாளர்கள் நடைமுறைப்படுத்தவும் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். அதுதான் இங்கு முக்கியமான செய்தி. அதனை நாம் இலங்கைக்கு ஏற்கனவே சொல்லிவிட்டோம். நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கை தொடர்பான அடுத்த நகர்வுகளை அமெரிகா அவதானித்துக் கொண்டிருக்கிறது எனவும் அவர் அந்த ஊடகவியலாளர் மாநாட்டில் தெரிவித்துள்ளார்.

அமெரிககாவின் நிலைப்பாடு இவ்வாறனதாக காணப்படுகையில் கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கை தொடர்பில் சர்வதேசத்தின் முழுக் கவனமும்

தற்போது இறுதி அறிக்கை மற்றும் அதன் சிபார்சுகள் தொடர்பிலேயே குவிந்திருப்பதாக ராஜதந்திர வட்டாரங்கள் தகவல் வெளியிட்டுள்ளன. போர் குற்றச்சாட்டுக்கள், மனித உரிமை மீறல் குற்றச்சாட்டுக்கள், பதிலளிக்கும் தன்மை, நல்லாட்சி, ஊடக சுதந்திரம் உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் குறித்து சர்வதேசம் இலங்கை மீது நெருக்குவாரங்களை மேற்கொண்டுவருகிறது. இந்த அழுத்தங்கள் மகிந்த அரசுக்கு சர்வதேச ரீதியில் பிரச்சினைகளை அதிகரிப்பதாக அமைந்திருப்பதால் அதனை எப்படியாவது கட்டுப்படுத்த வேண்டும் என மகிந்த நினைக்கின்றார்.

சர்வதேசத்தின் இந்த நெருக்குவாரங்களிலிருந்து விடுபடுவதற்காக இலங்கை அரசாங்கமானது நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கைக்காக காத்திருப்பதாகவும், அந்த அறிக்கை வெளியானவுடன் தாம் மேற்கொண்டு நடவடிக்கைககளை தீவிரப்படுத்த முடியுமெனவும் விளக்கம்கூறி வந்தது. தற்போது ஆணைக்குழுவின் அறிக்கை வெளியாகப்போகும் நிலையில் அது எத்தகைய சிபார்சுகளை உள்ளடக்கியதாக அமைந்திருக்கும் என்பது தொடர்பில் பல்வேறு ஊகங்கள் வெளியிடப்பட்டுவருகின்றன.

அரசாங்கத்தால் நியமிக்கப்பட்ட இந்த ஆணைக்குழுவின் இறுதி அறிக்கை அரசாங்கத்தை நெருக்கடிக்குள் தள்ளுவதாக அமையும் என ஒருபோதும் நம்ப முடியாது. அரசாங்கத்தைப் பாதுகாப்பதற்கே இந்த அறிக்கை முற்படும் என நிச்சயமாக நம்பலாம். அதேவேளையில் சர்வதேசத்தை சமாளிக்க வேண்டிய தேவை ஒன்றும் இதற்கு உள்ளது. இந்த நிலையில்தான் போர்க் குற்றங்களுக்கான பொறுப்பை சரத் பொன்சேகாவின் தலையில் போட்டுவிடும் உபாயத்தை அரசு கையாள முற்படலாம் எனத் தகவல்கள் வெளியாகியிருக்கின்றன.



ஈழத் தமிழரின் கதை தீபாவளித் திரை வெளியீடாக வந்திருக்கிறது "உச்சிதனை முகர்ந்தால்" படம். ஈழத் தமிழ் உணர்வாளர்கள் சத்தியராஜ், சீமான், நாசருடன் சங்கீதா முக்கிய பாத்திரத்தில் நடித்து வெளியாகி உள்ளது.

மட்டக்களப்பைச் சேர்ந்த மாணவிக்கும் போராளிகளுக்கும் இடையிலான நட்பும் பாசமும் அதனால் 2009 மார்ச் மாதத்துக்குப் பின்னர் அந்தப் பெண்ணின் வாழ்வில் ஏற்பட்ட சோதனைகள் சோகங்கள் நிறைந்த கதை அமைப்பைக் கொண்டுள்ள படம் எனத் தெரிகிறது.

ஈழத் தமிழர் குறிப்பாகப் புலம் பெயர் தமிழர் தமது அமோக ஆதரவை வழங்குவதன் மூலம் ஈழத் தமிழர் பிரச்சினையை உலக மக்கள் கவனத்துக்கு எடுத்துச் செல்ல முடியும். அரசியற் கட்சித் தலைவர்களோடு மட்டுமே எமது பிரச்சினையை விட்டுவிடாது அடித் தட்டு மக்களுக்கும் எடுத்துச் செல்வதன் மூலம் எமது அரசியல் இலக்கை அடைய முடியும். மேலும் இது போன்ற பல புதிய படங்கள் வெளி வருவதற்கு எமது அமோக ஆதரவு பெரிதும் தேவையாக உள்ளது .

ஒட்டுமொத்த குடும்பத்துக்கு ஆனந்தமான, ஆரோக்கியமான, உயர்தரமான விருந்தளிக்கும் புதுப்பொலிவுடன் கூடிய ஜிரிவி க்கு நீங்கள் தொடர்ந்து அளிக்கப்போகும் ஆதரவு அர்த்தமுள்ள முதலீடாக இருக்கும்.

GTV

ஜிரிவி எனும் இந்தக் கனிமரத்தின் கிளையும் பூவம் விண்ணைத் தொட்டு வளர்ந்துகொண்டே போனாலும், அது தன் வேர்களாகிய உங்களை ஒருபோதும் மறந்துவிடாது என்பதை அன்போடு வலியுறுத்துகின்றோம்.

Germany contact: Business Consulting Network
Adler str.30 Tel: 0049 (0)231 10876360
44137 Dortmund Fax: 0049 (0)231 10876362
E-Mail: germany@gtv-network.com



புலம் பெயர் தமிழர் அரசியலை த.தே.கூ வைத்தே அறுத்துவிடும் செயல் தொடங்கிவிட்டது!

ஈழத் தமிழரின் பாராளுமன்ற சனநாயக அரசியலில் அகில இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி ஒரு இலட்சியத் தலைமையாக வளர்ந்து சாதனை படைத்தது. ஈழம் என்ற தேசியத்தைக் கனவாகக் கொண்டு உருவான உண்மையாகவே தமிழ் பேசும் மக்களின் தலைமையாகத் தன்னை வளர்த்துத் தமிழ் பேசும் மக்களின் அரசியல் செல் நெறியையும் தொய்வின்றி வழி நடத்தியது.

சைவர்கள் பெரும்பான்மை மக்களாயினும், தந்தை செல்வா, மன்னார் அழகக்கோன், சீ.எக்ஸ். மாட்டின், ஈ.எம்.வீ.நாகநாதன் எனப் பெரும் கிருஸ்தவ தமிழர்களின் ஆட்சிபுரியாகவே திகழ்ந்தது. அதே போல இஸ்லாமியத் தமிழரிலும் வடக்கிலும் கிழக்கிலும் நிறையப் பேரின் ஆதரவும் அரவணைப்பும் பெற்றுப் பல இஸ்லாமிய அரசியல் தலைவர்களை உருவாக்கி பின்னர் தேசிய அரசியலில் இணைந்த வரலாறும் உண்டு.

தமிழ் ஈழத்தின் தலைநகர் திரிகோணமலையே எனப் பிரகடனம் செய்து தனது வருடாந்த மகாநாடுகளை யாழ்ப்பாணத்தில் என்று இல்லாது மன்னார், திரிகோணமலை, மட்டக்களப்பு, வவுனியா போன்ற இடங்களில் நடத்தித் தன்னை மதம் இனம் பிரதேசங் கடந்த கட்சியாக மக்களிடம் மக்கள் பிரச்சனைகளோடு வாழ்ந்து வளர்ந்த கட்சி.

அக்கட்சியின் தொடக்கதாரிகளான தந்தை செல்வாவோ வன்னிய சிங்கமோ தம்மையும் தலைமையையும் முன்னிறுத்தி அரசியல் செய்யவில்லை. குறை நிறைகள் சிலரால் முன்வைக்கப் பட்டாலும் அதன் சனநாயகக் கட்டமைப்பு 1965 வரை சீர் குலையாமலே இருந்துள்ளது.

இப்படி மக்களோடு மக்களாக அதன் தலைமை தன்னை வைத்துக் கொண்டதால் அதனால் யாழ்ப்பாணம் மன்னார் மட்டக்களப்பு திரிகோணமலை என அனைத்துப் பிரதேசங்களிலும் சத்தியாக் கிரகம் சட்ட மறுப்பு இயக்கம் என்ற அறவழிப் போராட்டங்களை ஒரே காலத்தில் முன்னெடுத்து வெற்றிகரமாக நடத்திக் காட்ட முடிந்தது. அன்று மக்களின் அறப் போராட்டத்தை அடக்க வந்த சிங்கள இராணுவம் இன்று தமிழ் இன அழிப்பையும் ஈழத் தேசியத்தையும் அழித்துத் துடைத்து வருகிறது.

இத்தனை சிறப்புக்களைக் கொண்டிருந்த தமிழ் அரசுக் கட்சி சுய நல மற்றும் பதவி ஆசை கொண்ட சிலரால் தானாக நடக்க முடியாது தமிழர் விடுதலைக் கூட்டணி என்ற பொல்லைப் பிடித்து இன்று அதுவும் முறிந்து ஆனந்த சங்கரி வீட்டுத் துடைப்பக் கட்டையாகிக் கிடக்கிறது.

இந்தத் துடைப்பத்தின் குஞ்சம் மட்டும் தமிழீழ விடுதலைப் புலிகளின் தயவால் உருவான தமிழ்ர் தேசியக் கூட்டமைப்பு என்ற பெயரில் அதன் முன்னாள் தலைவர் இராஜவரோதயத்தின் மகன் சம்பந்தன் கையில் ஒட்டிக் கிடக்கிறது. அவருக்குப் பின்னால் த.தே.கூ. என்ன ஆகும் என்று தெரிந்து கொள்ள, மகத்தான புலிகள் இயக்கம் வேலுப்பிள்ளை பிரபாகரனின் மறைவுக்குப் பின்னர் இன்று கண்டுள்ள கதியை எண்ணித் தெரிந்து கொள்ளலாம்.

தமிழீழ விடுதலைப் புலிகளை பயங்கர வாதிகளாகப் பட்டியலிட ஏதுவான காரணிகளில் ஒன்று அது தேடிக் கொண்ட பகைவர்களும் அதன் வெளிப்படைத் தன்மை இன்மையும். ஒரு போராட்டக் குழு என்ற வகையில் இவை தவிர்க்க முடியாதவை. ஆனால் அது தேடிக் கொண்ட பகைமை அதன் நண்பர்கள் அங்கத்தவர்களிடம் இருந்து உருவானதே அதன் அழிவுக்குப் பெரும் காரணியாக இருந்து விட்டது.

அதனை முறியடிக்க இலங்கை அரசுக்கும் அதன் ஆதரவு நாடுகளுக்கும் இக்காரணிகள் மட்டுமே போதுமானதாக இருந்தது. நாயைக் கொல்ல நாய்க்கு விசர் வரவேண்டும் என்றில்லை அதைக் கொல்ல நினைக்கும் மனிதருக்கு விசர் வந்தால் போதும் அதனைச் சாகடிக்க.

இன்றைய உலக அரசியல் நடைமுறையில் ஒரு அரசியல் கட்சிக்கு அவசியமாக இருக்க வேண்டியவை அதன் சட்ட ரீதியான அமைப்பு விதிகளும், வெளிப்படைத் தன்மையுடன் கூடிய செயற்பாடும், அன்றாடச் செயற்பாட்டில் பின்பற்றப்படும் சனநாயக நடை முறைகளும்தான். இன்று ஈழத் தமிழ் மக்களின் தலைமை என உலகில் வலம் வரும் த.தே.கூ. இவற்றில் ஏதாவது ஒன்றைக் கூறிப் பெருமைப் பட முடியுமா?

இத்தனை ஓட்டைகளுடனும் சர்வதேசம் இதனைப் பயன்படுத்த நினைக்கிறது என்றால் அது அவர்களின் தேவைக்காகவே அல்லாது எமது நலனுக்காக அல்ல என்பதை அமெரிக்கா முதல் ஐ.நா. ஐரோப்பிய ஒன்றியம் யப்பான் சீனா ரஸ்யாவரை தமிழினம் பெற்ற அனுபவங்கள் அளவுக்கு அதிகமாகவே உள்ளன. இந்த நாடுகளோ அமைப்புகளோ சிங்களத்தின் சிந்தனையைக் கடந்து தமிழர் நலன் கருதும் நிலையில் இல்லை. இப்படியான சூழ்ச்சி அலைகளும் சுழிகளும் நிறைந்த சமுத்திரத்தில் இத்தனை ஓட்டைகள் கொண்ட படகில் தமிழினம் ஈழக்கரைகளை அடையும் கனவில் மிதக்கிறது.

ஆனால் வல்லவனுக்குப் புல்லும் ஆயுதம் என்பது போல் இந்த ஓட்டைப் படகை வைத்தே ஈழத் தமிழரின் தாயகக் கப்பலை கவிழ்த்துவிடச் சிங்களமும் அதன் நேச சக்திகளும் ஈடுபட்டுள்ளன. சிங்களத்துக்குச் சிம்ம சொப்பனமாக இருப்பது புலம் பெயர் மக்களும் அவர்களின் அரசியல் நகர்வுகளுமே. இன்று பெரும் அச்சுறுத்தலாக புலத்தில் இருப்பது நாடு கடந்த அரசும், தமிழர் பேரவைகளுமே. வைரத்தை வைரத்தால் அறுப்பது போல் புலம் பெயர் தமிழர் அரசியலை த.தே.கூ. வைத்தே அறுத்துவிடும் செயல் தொடங்கிவிட்டது.







முடிந்தால் தனியாக மோதிப் பார்க்கட்டும் அப்போது நீயா நானா பலசாலி எனப் பார்த்து விடலாம் என்பது போல் கலைஞர், சோனியா காங்கிரசைப் பழி வாங்கும் எண்ணத்திலும் தமது கூட்டணியைக் குலைத்துத் தாமே தனித்துக் களத்தில் இறங்கினார். உள்ளாட்சித் தேர்தலில் மக்களை மட்டுமே நம்பித் தனித்துப் போட்டியிட்ட அனைத்து இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் மிகப் பெரும் வெற்றியை தனதாக்கி விட்டது.

மொத்தம் உள்ள 5 மாநகராட்சிகளையும் 88 நகரம் மற்றும் 284 பஞ்சாயத்து ஆட்சிகளையும் அ.இ.அ.தி.மு.க. வெற்றி பெற்றது. தி.மு.க. தன் வசம் இருந்த சென்னை திருச்சி உட்பட்ட மாநகர ஆட்சிகளையும் இழந்து 23 நகரம் மற்றும் 121 பஞ்சாயத்து ஆட்சிகளையும் மட்டுமே பெற முடிந்தது. சட்ட சபைத் தேர்தல் போன்று இல்லாது மாநில அரசுக் கட்டுப்பாட்டில் இயங்கிய தேர்தல் ஆணையமே இத்தேர்தலை நடத்தியதால் குளறுபடிகள் அதிகம் என்ற விமர்சனங்களும் உண்டு.

ஆயினும் கலைஞரின் காலை வாரும் ஆற்றல் படைத்த ஜெயலலிதா சவாலை ஏற்றுத் தமது அணியை விரட்டி விரட்டித் தாமும் களத்திற் போராடி இந்த வெற்றியைப் பெற்றார் என்பதும் மறுக்க முடியாத உண்மை. தேர்தல் வெற்றியை கொண்டாட முடியாத படிக்கு ஜெயலலிதா மீதான சொத்துக் குவிப்பு ஊழல் வழக்கு பெங்கரில் அவரைக் கட்டிப் போட்டுவிட்டது. அகரம் முந்தைய இதழில் கூறியது போன்று இந்த வழக்கு இவரை 7 ஆண்டுகள் வரை சிறைக்குள் தள்ளிவிடலாம் என விடயமறிந்த வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

அடுத்த முதல்வர் ஓ.பன்னீர் செல்வமா அல்லது வேறு பேர்களா என்ற ஊகங்கள் கூட வெளியாகும் அளவுக்கு அம்மாவின் நிலை ஆபத்தாக உள்ளது. அம்மாவுக்குக் கிடுக்கிப் பிடி போடும் முயற்சியில் கலைஞர் இம்முறை மன்மோகன் சிங்கைப் பார்த்துப் பேசி வந்துள்ளார்.

ஜெயலலிதாவைத் தன் வழிக்கு இழுத்து ஈழத் தமிழர் விடயத்திலும் ராஜபக்ச விடயத்திலும் தமிழ் நாட்டு அரசையும் தமிழக மக்களையும் திருப்பிவிடும் முயற்சியில் மன் மோகன் சிங் ஆர்வமாக இருக்கிறார். அவரது வழிக்கு ஜெயலலிதா திரும்பினால் வழக்கில் இருந்து தப்பி விடலாம். ஆனால் மக்களிடமிருந்து முற்றாகப் பிரிக்கப்பட்டு அரசியலுக்கே முழுக்குப் போட வேண்டிய நிலை ஏற்படும்.

ஆனால் அசாத்திய துணிச்சலும் ஆளமான ஆளுமையும் கொண்டுள்ள அவர் மத்திய அரசுக்கு பணியாதவராகவே பயணிப்பது தெரிகிறது. ராஜீவ் காந்தி கொலை வழக்கில் மரண தண்டனை எதிர் நோக்கி உள்ள மூவரின் மேன் முறையீட்டு வழக்கில் மத்திய அரசு வீம்புக்காகவே தூக்கை உறுதி செய்துள்ளது. இதனை ஜெயலலிதாவின் நாடி பார்த்து அறியவே இம் முடிவை எடுத்தது போல் தெரிகிறது.

ஜெயலலிதா இதற்கு எதிர் நிலை எடுத்தால் அதுவே இன்னொரு மத்திய மாநில முரண் நிலைக்கு வகை செய்து விடும். அது மேலும் ஒரு சிக்கலுக்குள் அவரைத் தள்ளி விடக் கூடும். எனவே இந்த விடயத்தில் மாநில அரசு மத்திய அரசுடன் ஒத்துப் போவது போன்ற நிலையைக் காட்டி உள்ளார். அவருக்குச் சிறைக் கதவை நினைவு படுத்தும் வழக்கில் இருந்து முழுமையாகவோ அல்லது மிகக் குறைந்த தண்டனையுடனோ தப்பிக்க எத்தனிக்கிறார்.

அவரது இப்போதைய நிலை கூண்டிற் சிக்கி விட்ட சிங்கத்தைப் போன்றது. தாமும் தப்ப வேண்டும் தமது இலக்கும் கிடைக்க வேண்டும். காந்தன் முருகன் பேறறிவாளனைத் தப்பிக்க வைக்க வேறு பலரும் வேறு வழிகளும் உண்டு. எனவே அதற்குள் தனியாக ஏன் மாட்டிக் கொள்ள வேண்டும் என்று கருதுவதாகத் தெரிகிறது. மாநில அமைச்சரவைத் தீர்மானம் கூட நிறைவேற்றப் பட்டு அகில இந்திய அளவிலான ஒரு அரசமைப்புச் சட்ட வாதப் பிரதி வாதத்துக்கு இடம் ஏற்பட்டு அதன் மூலம் ஒரு தீர்வு ஏற்படலாம்.

அவருக்குத் தமிழக முதல்வர் பதவி இறுதி இலக்கு அல்ல என்பது பலரும் அறிந்த உண்மை. நாடாளுமன்றத் தேர்தலோடு கொடுத்துவிட்டுப் போகிற பதவி என்றாலும் அதுவரை தம்மோடு வைத்திருக்க விரும்புவார். இப்பொழுதே அடுத்த வழக்குத் தவணைக்கு போகாது தவிர்க்க அவர் ஒரு நியாயமான காரணத்தைத் தேடுகிறார். அதற்கான செயற்பாட்டிலும் இறங்கி இருப்பதான செய்திகள் வெளியாகி உள்ளன.



Swiss, Zürich மாநகரில்
APIRAA TEXTILES
Apira Textiles
Stauffacher Str. 149
8004 Zürich, Switzerland
Tel: 043 233 54 54
Fax: 043 243 99 57



அனைத்து விதமான நிகழ்வுகளுக்கும்
உங்களை இசையால் மகிழவைக்க
நாடுங்கள்
வசீகரஸ்வரங்கள்
Switzerland
தொடர்புகளுக்கு: வசீ
0041 78 300 03 73



சகல வசதிகளுடன் ஓர் தமிழ்
உணவகம்
அண்ணாச்சி
உணவகம்
209, rue du fdg. St. Denis
75010 Paris
Tel: 01 46 07 38 12



CAFE BHARATH
Specialitées Indienne & Srilankaise
இலங்கை,
இந்திய உணவுவகைகள்,
புரியாணி, தோசை வகைகள்.
67, rue Louis Blanc, 75010 Paris
Tel: 01 58 20 06 20
M°: La Chapelle / Gare du Nord



CITY CAR CENTER
தங்களது வாகனங்களை விற்பதற்கோ
அல்லது மிகக் குறைந்த
விலையில் வாகனங்களைப்
பெற்றுக்கொள்வதற்கோ
எம்மை நாடுங்கள்.
Münster Str. 61, 59065 Hamm, Germany
Tel: 02381 6 04 83 Fax: 02381 48 89 05



Catering Coordinator:
R.P. Paramesh
GGS
Food Service
Providing quality catering in Germany
Tel: 02305 967375
Mobile: 01779391607



ஜேர்மனியில் தரம், உத்தரவாதத்துடன்
நீண்டகாலமாக சேவையாற்றி வரும் தமிழர் ஸ்தாபனம்
SUN TVயின்
நீண்ட கால
விநியோகிஸ்தர்
TJB
BROTHERS
ASIAN SUPERMARKET
R. Ragunathan
Parkhofstr. 97
41836 Hückelhoven
Tel: 02433 90 32 82
Fax: 02433 90 32 81
Deutsche Bank
Konto Nr: 474 11 53
BLZ: 390 700 24

Milin Impex

Asiatische Lebensmittel Groß und Einzelhandel

ஜேர்மனி டோட்முண்ட் மாநகரில் தலைமுறை தலை
முறையாக தரமான ஆசிய, ஆபிரிக்கா உணவுப்பொருட்களின்
இறக்குமதியாளரும் மொத்த, சில்லறை விநியோகஸ்தர்களும்.

Web: www.milinimpex.de E-Mail: info@milinimpex.de

எமது நிறுவனம் 20 வருட நிறைவைமுன்னிட்டு.

01.10.11 முதல் 31.12.2011 வரை மொத்த
கொள்வனவாளர்களுக்கு சிறப்பு மலிவு
விற்பனையும் அத்துடன் சில்லறை
வாடிக்கையாளருக்கு நீங்கள் செய்யும்
ஒவ்வொரு கொள்வனவுக்கும் மலிவுவிலை
மட்டுமல்ல அன்பளிப்பாக புத்தம்புதிய திரைப்பட
DVD யும் வழங்கப்படும் இவைமட்டுமல்ல
வாழ்நாள் முழுவதும் 5 வீதமான கழிவில்
பொருட்களை பெற்றுக் கொள்ளும்
வாடிக்கையாளர் அட்டையும் வழங்கப்படும்.

வர்த்தகர்களே நீங்கள் உங்கள் வாடிக்கையாளர்
அட்டையை 4 வீதக்கழிவாக மாற்றிக்கொள்ளலாம்!

Dortmund நகரில்
Westendorfstr. 41
44287 Dortmund
Tel: 0231 459617/28
Fax: 0231 1815288

Wuppertal நகரில்
Aue – 94
42103 Wuppertal
Tel: 0202/29995869

Lüdenscheid நகரில்
Höchstr. 8a
58511 Lüdenscheid

இச்சலுகை
31.12.11
வரை மட்டுமே




பிரமாண்டமான... மூன்று காட்சி அறைகள்
P.S.
தங்க நகைகளின் சமுத்திரம்
உயர்தர பட்டு ஆடைகளின் ஆலயம்
ரெடிமேட் ஆடைகளின் சிகரம்
உங்கள் முல்கைம் P.S. பவான் அண்ணாச்சி
Indische Textilien & Schmuck
Tel : 0208-444 89 53 Mobil : 0172-2607388
142
P.S. 50 Parkplätze
P.S. 50 தரிப்பிடம்
Öffnungszeiten Mo.-Sa. 10.00 - 20.30
உங்கள் வீட்டு அனைத்து மங்களகரமான
நிகழ்வுகளுக்கும் 24 மணி நேரத்தில் வரும்
அனைத்து உயர்தர ஆடைகளை வாங்கிட!
அத்துடன் அனைத்து எடைகளில் தாலிக் கொடிகள்
உட்பட தங்க நகைகளும் பெற்றுக்கொள்ளலாம்,
அத்தனையும் இறக்குமதி செய்யப்பட்டவை
உங்கள் முல்கைம்
P.S.பவான்
அண்ணாச்சி கடை
Eppinghoferstr. 142,
45468 Mülheim an der Ruhr
Tel : 0208 4448958 Fax : 0208 4447943 H.P : 01722607388

புதிய லைக்காமொபைல் ப்ள்ஸ் சிம்முடன்!

Lycamobile

சுவிட்சர்லாந்து

CHF 100.- வரை இலவசம்!

உங்கள் லைக்காமொபைல் ப்ள்ஸ் சை மீள் நிரப்பும் பொழுது

சர்வதேச நாடுகளுக்கான தரம் வாய்ந்த அழைப்புக்கள் மிக குறைவான கட்டணத்தில்..!

இந்தியா

கனடா

அமெரிக்கா

CHF 0.01 /min

வீட்டுத் தொலைபேசி + கைத் தொலைபேசி

Lycamobile ப்ள்ஸ் இல் இருந்து Lycamobile ப்ள்ஸ் க்கு

CHF 0* /min

சிங்கப்பூர்

மலேசியா

CHF 0 /min

வீட்டுத் தொலைபேசி



	வீட்டுத் தொலைபேசி	கைத் தொலைபேசி
இலங்கை	CHF 0.09 /min	CHF 0.12 /min
ஐரோப்பா	CHF 0.01 /min	

(ஐரோப்பா: வீட்டுத் தொலைபேசி)

*அனைத்து அழைப்புக்களும் நிமிடக்கணக்கீட்டில் கட்டணம் அறவிடப்படும். லைக்காமொபைல் ப்ளஸ்ஸில் இருந்து லைக்காமொபைல் ப்ளஸ்க்கு ஒரு இணைப்புக்கு 19Rpனில் 30 நிமிடம் வரை உரையாடலாம். மேலதிகமாக வரும் ஒவ்வொரு நிமிடத்திற்கும் 19Rp என்கிற அடிப்படையில் கட்டணம் அறவிடப்படும்.

*கட்டணங்கள் மாறுதலுக்குட்பட்டவை.

*உள் நாடு மற்றும் வெளி நாடு இணைப்புக்கட்டணம் CHF 0.19

மேலதிக விபரங்களுக்கு

www.lycamobile.ch 077 900 01 22
044 555 23 23

Lyca mobile
Call the world for less

Lycamobile வாங்கக்கூடிய இடங்கள்:

SBB CFF FFS · Media Markt · Inter Discount · k kiosk · SWISS POST · coop · Fust · TELEFONCORNER communication center · NAVILLE · Press & web · RELAY